# மகிழ்வுரை

ஆசிரியர் ரமணிசந்திரன் அவர்களுக்கு,

வணக்கம்.

உங்களுடைய நாவல்கள் 35 படித்திருக்கிறேன். எத்தனை அற்புதமானது. உங்களுடைய பெயரை எங்கு எந்தப் புத்தகத்தில் பார்த்தாலும் சந்தோஷம். அப்படியே குதிக்க வேண்டும் போல் எண்ணம். உங்கள் புத்தகத்தைப் படித்தாலும், படித்ததை மீண்டும் படிக்க ஆவல்.

எத்தனை முறை உங்கள் நாவலைப் படித்திருப்பேன் தெரியுமா? உங்கள், மயங்குகிறாள் ஒரு மாது 25 தடவையும், பால் நிலா 30 தடவையும், மானே மானே 25 தடவையும், வைரமலர், என் கண்ணில் பாவையன்றோ 50 தடவையும் படித்திருக்கிறேன். ஒரு சின்னக் குழந்தை தன் தாயிடம் சென்று எவ்வளவு சந்தோஷப்படுமோ அவ்வளவு சந்தோஷம்; உங்கள் புத்தகத்தின் மீதும், உங்கள் மீதும். நீங்கள் மட்டும் என் கையில் கிடைத்தால் உங்கள் கைகளுக்கு கோடி முத்தம் கொடுத்திருப்பேன்.

**A Lot of thanks to my God.**
**Because He Gives me.**

அன்புள்ள
**தேவி**
சேலம்

# நேசம் மறக்கவில்லை நெஞ்சம்

## 1

அன்றைய தினம் தொடங்கியதில் இருந்தே தாரிணிக்கு ஒன்றுமே சரியாகத் தோன்றவில்லை. ஏன், தொடங்கு முன்பே சரியில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இல்லையென்றால் இப்படி ஒரு கனவோடு கண் விழிப்பாளா?

மணிக்கணக்கில் 'டூயட்' பாடி, ஜோடியாகப் படகு விட்டபடி, மகிழ்ச்சியாகச் சிரித்தால் யாரோ கூடச் சேர்ந்து கலகலத்தார்கள். நம்மைப் போல இன்னொரு ஜோடியா என்று திரும்பிப் பார்த்தால், படுக்கை அருகில் இருந்த அலாரம் கடிகாரம் இனிமையாய் சிணுசிணுத்துக் கொண்டிருந்தது.

ஓகோ... இதுதான் கூடச் சேர்ந்து சிரித்ததாக்கும் என்று, கடிகாரத்தின் தலையில் கைவைத்து அதன் சத்தத்தை நிறுத்துகையில் தான் இவ்வளவு நேரம் தனக்கு நிகழ்ந்ததெல்லாம் வெறும் கனவு என்பதை உணர்ந்தாள். சும்மா அல்ல; பெரும் ஏக்கத்தோடு.



பெரும் எரிச்சலோடும்தான். இந்த மாதிரிக் கனவுகள் காணும் அளவுக்கு இன்னமும் அவள் முட்டாளாக இருக்கிறாளே!

முட்டாளேதான். மற்றபடி இந்த அளவுக்கு ஒருத்தி ஏமாறுவாளா? முதலிலேயே கண்டுபிடித்திருக்க மாட்டாளா? இத்தனைக்கும் தான் மகாபுத்திசாலி என்ற எண்ணம் வேறு அவளுக்கு!

மட்டி, மடையன், மூடன், மூர்க்கன், மிலேச்சன் என்று பரமார்த்த குருவுக்கு ஐந்து முட்டாள் சீடர்கள் உண்டாமே. அந்த ஐந்து பேரின் அறியாமையையும், ஒட்டுமொத்தமாய்க் குத்தகைக்கு எடுத்தாற்போல் இருந்ததற்கு இன்னும் என்னென்ன கேவலங்கள் நேர்ந்திருக்குமோ? நல்ல காலமாய் அந்தச் செயலாளர் பெண் - அந்த ரஞ்சிதா குறுக்கே வந்ததால் இந்த மட்டிலுமாகப் பிழைத்து மீளமுடிந்தது.

ரஞ்சிதா! ரஞ்சீ... டக்கர் உடம்பும்மா அவளுக்கு.

சை! என்று கையை உதறிக்கொண்டு தாரிணி எழுந்த வேகத்தில் கை இடித்து, கடிகாரம் உருண்டோடியது. கடிகாரத்தின் அடியில் இருந்த காகிதம் பறந்தது.

அனுப்புடனேயே, அது மீண்டும் பறக்குமுன் பிடித்துப் பிரித்துப் பார்த்தாள்.

'அயர்ந்து தூங்குகிறவர்களை எழுப்புவது பாதகம் தான். அதிலும் உன்னைப் போல் குருவித் தூக்கம் போடுகிறவளை எழுப்புவது பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகும். இன்று இந்த ஏலம் மட்டும் இல்லாவிட்டால் நிச்சயமாய் எழுப்பவே மாட்டேன்' என்று எழுதிக் கையெழுத்திட்டிருந்தாள் சித்ரா, தாரிணியுடைய ஆருயிர்த் தோழி; அவளுடன் ஒரே வீட்டில் வசிப்பவள்; தொழிலிலும் பங்குதாரர்.



தொழில் என்றால் பிரம்மாண்டமாக எதுவும் இல்லை. சும்மா, ஒரு '*சீசன் ஷாப்.*' கொடைக்கானலுக்கு *சீசனுக்கு* வருகிறவர்களை நம்பி நடத்தப்படும் கடை. அங்கே சென்றதற்கு அடையாளமாக வாங்கிச் செல்லக் கூடிய பொருட்கள், வாழ்த்து அட்டைகள், புக்மார்க், தெர்மோக்கோல், நெட்டியில் செய்த கலைப் பொருட்கள், ஆதிவாசிகள் கொண்டுவந்து தரும் கொம்பு, மரச் சாமான்கள், வெள்ளி நகைகள், கம்பளிச் சட்டைகள்... இத்யாதி இத்யாதி. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பயணச் சின்னமாக வாங்கிச் செல்லக் கூடும் என்று பூம்புகார் மாடல் கலைப் பொருட்களைக் கூடக் கடையில் வைத்திருந்தார்கள். கூடவே ஏதாவது வீடு மாற்றிச் செல்லுகிறவர்கள் அரை விலை கால் விலைக்கு விற்றுச் செல்லும் கட்டில், பீரோ போன்றவைகளும்.

மளிகைச்சாமான், காய்கறி போல அத்தியாவசியப் பொருட்களையோ, பிஸ்கெட், முறுக்கு போல நொறுக்குத் தீனிகளையோ, முகப்பவுடர், நகச் சாயம் போல அலங்காரச் சாதனங்களையோ விற்கிற கடை இல்லை என்பதால் வாங்குவோர் கூட்டம் அலைமோதுகிற நிலைமை என்று எதுவும் கிடையாது. *சீசன்* சமயங்களில் கொஞ்சம் அதிகமாக - உதவிக்கு ஓர் ஆள் வைத்துக் கொள்ளும் அளவுக்கு, விற்பனை இருக்கும். மற்றபடி தோழியர் இருவருமாகவே சமாளிக்கக் கூடிய அளவில் தான் கடை இருந்தது. வந்த வருமானத்தில் இருவரின் உணவு, உடை போகச் சற்று சேமிக்கவும் முடிந்தது.

மிகமிக முக்கியமாக, ஒரு சமயத்தில் நிலையிழந்து தவித்துக் கொண்டிருந்த இரு தோழியருக்கும், 'உடுக்கை இழந்தவன் கைபோல' நல்லபடியாக வாழ வழிகாட்டி உதவியது இந்தக் கடை.

அன்றைய ஏலம் முக்கியமான ஒன்று. ஒரு தனியார் வீட்டில் நடப்பது. மூன்று தலைமுறைக்கு

முன்பாகக் கட்டிய வீட்டையும், அந்தக் காலத்தில் இருந்து வீட்டில் இருந்துவரும் சாமான்களையும் தற்போதைய சந்ததி ஏலத்தில் விற்று காசாக்குகிறது. சுற்றுலாப் பயணிகள் கொட்டிக் கொடுத்து வாங்கக் கூடிய சாமான்கள் நிறையக் கிடைக்கக்கூடும். சிறுவிளக்குகள், மெழுகு வர்த்தி ஸ்டாண்டுகள், பீங்கான் சாமான்கள் என்று சின்னச் சின்னப் பொருட்கள் மிகமிக மலிவாகக் கிடைக்கக்கூடும். ஆனால், கைமேல் பணம் கொடுத்தாக வேண்டும்.

மாலைப் பத்திரிகையில் மட்டுமே விளம்பரம் வந்திருந்தபடியால் முன் கூட்டியே பணம் எடுத்து வைக்க முடியாது போயிற்று. இப்போது அவசரமாகப் போய், 'பாங்க்' திறந்தாலும், முதல் ஆளாக நின்று பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிவந்து, சித்ராவிடம் பணத்தைக் கொடுத்தால் அவள் ஏலத்துக்குப் போவாள்.

வீட்டின் பின்புறத்துக் காம்பவுண்டுச் சுவரின் சின்னக் கதவைத் திறந்து கொண்டு போனால் கடையின் பின்வாயில்தான். பேசாமல் கடையில் போய் உட்கார்ந்து கொண்டு, சித்ராவையே பாங்குக்கும் போகச் சொல்லி விடலாமா என்றுகூட ஒரு தரம் நினைத்தாள் தாரிணி. ஆனால், அது தவறு என்று உடனேயே ஒதுக்கியும்விட்டாள்.

சும்மாவே, சித்ராவுக்குப் பழகிய தொழில் என்பதால் பொருட்களை வாங்கல், விற்றலில் அதாவது வேலையில் அவளது பங்கு அதிகம். அத்தோடு பாங்க்கும் ஏலம் நடக்கும் இடமும் இருப்பது எதிர்த் திசைகளில். ஒருத்தியையே இரண்டு இடங்களுக்கும் அலையச் சொல்வது என்றால்... ஊகூம்... அது கொஞ்சமும் நியாயம் இல்லை.

மகாநியாயவாதியாக, பாங்குக்குச் சென்று, பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பியபோது கைமேல்



கூலிபோல, மொப்பெட்டின் டயர் 'பங்க்சர்' ஆகிவிட்டது.

ஸ்கூட்டர் என்றாலாவது உபரியாக ஒரு சக்கரம் இருக்கும். இதில் அதுவும் இல்லாமல், தள்ளிக் கொண்டு சென்று மெக்கானிக்கிடம் 'பங்க்சர்' ஒட்டிக் கொண்டு, பறக்க பறக்க அவள் கடைக்கு வந்து சேர்ந்தபோது, கோடைகாலத்துச் சென்னையைப் போலவே அவளுக்கு வியர்த்து ஊற்றியது

வாயிலிலேயே காத்து நின்றாள் சித்ரா. நின்று ஒருவார்த்தை கூடப் பேசாமல், மொப்பெட் சாவியையும் பணத்தையும் வாங்கிக் கொண்டு பறந்தாள்.

சென்றது வீண்போகாமல் பல அரிய அழகான பொருட்களைக் குறைந்த விலையில் வாங்கி வந்தாள்.

அதன்பிறகே அவளுக்குப் பேச முடிந்தது.

வாங்கியவற்றுள் அவள் கையோடு கொண்டு வந்திருந்த பொருட்களை, ரகம் வாரியாகப் பிரித்து, உரிய இடங்களில் இருவருமாக அடுக்கினர்.

மின்னல் வேகத்தில், மொப்பெட்டில் பாய்ந்து சென்றதையும், அப்படிச் சென்றும் பாதி ஏலம் முடிந்து விட்டதை அறிந்து வருத்தமாக உள்ளே சென்றதையும் விவரித்தாள் சித்ரா.

''எனக்கு நம்பிக்கையே இல்லை, தரு. எல்லாம் விற்றுத் தீர்ந்திருக்கும்; உள்ளே போய்ப் பார்த்து வயிறு எரிவதைவிட அப்படியே திரும்பி விடலாமா என்றுகூட நினைத்தேன். நான் சென்றதைக் கவனித்துவிட்டு மாதவன் அழைத்ததால்தான் உள்ளே போனேன். பிறகு பார்த்தால் கட்டில், சோபா, பெரிய நிலைக்கண்ணாடி, மர அலமாரி என்று பெரிய பொருட்கள் மட்டும்தான் விலையாகியிருந்தன. விற்கிறவனுக்குத் தன் பொருட்க



ளின் மதிப்பே தெரியவில்லை, தாரிணி. பெரிய அறைக்குச் சரியாக ஓர் 'அறைத் தடுப்பு'. அழகான சித்திர வேலைப்பாட்டுடன் நாலு மடிப்பு உள்ளது. 'கீல்' சரியாக இல்லை என்று குப்பைபோல மூலையில் போட்டு வைத்திருந்தார்கள். வாங்கிவிட்டேன். கீலைச் சரி செய்து 'வார்னிஷ்' அடித்து வைத்தால் பிய்த்துக் கொண்டு போகும்.

''இதைப் பார்த்தாயா, இந்த வளையல் டப்பா, ரோஸ் உட். மூடியில் நல்ல யானைத் தந்த வேலைப்பாடு. இதுபோல இன்னும் சிலதோடு, நல்ல தேக்கில் செய்த சாமான்களையும் சேர்த்து ஒரு மூலையில் குவித்து வைத்திருந்தது. எடுத்துக் காட்டக்கூட ஆள் இல்லை. சும்மா அடுப்பெரிக்கிற விறகு விலைக்கு அள்ளிக்கொண்டு வந்தேன்.

''ஆகா! பாரேன், தரு, வளையல் டப்பா இரண்டு இருக்கிறது. விற்காமல் ஆளுக்கு ஒன்று என்று வைத்துக் கொள்வோமா? என்ன அழகான வேலைப்பாடு. இதில் வைர வளையல்களைத்தான் வைத்திருந்திருப்பார்கள். ஒன்றில் வைரம். அடுத்ததில்...'' என்று வளவளத்த சித்ரா, தோழியின் ஆமோதிப்பில் வேறுபாட்டை உணர்ந்து, டப்பாவைக் கீழே வைத்து விட்டு, தாரிணியிடம் திரும்பினாள்.

லேசான புருவச் சுளிப்புடன், இயந்திரம் போல கையில் இருந்த சிமிழை மேலும் மேலும் துடைத்தவாறு இருந்தாள் அவள். சித்ரா பேச்சை நிறுத்தியதைக் கூடக் கவனித்தாளில்லை.

சட்டென விழிகளில் குறும்பு எட்டிப் பார்க்க, ''அப்புறம் அந்த எருமை மாட்டின் மேல் மழை 'சோ'வென்று பொழிந்ததாம்'' என்று சிரியாமலே சொல்லி முடித்துவிட்டுத் தோழியின் முகத்தைப் பார்த்தாள் சித்ரா.



தன்போக்கில் கைகள் இயங்க ''அப்படியா, சரி'' என்ற தாரிணி, ஒருவாறு வேறுபாட்டை உணர்ந்து, ''எ...என்னதுப்பா?'' என்று மலங்க விழித்தாள்.

''மண்ணாங்கட்டி!'' என்றாள் மற்றவள். ''இங்கே நானானால் கடைக்குக் கொள்முதல் செய்ததில் என் வீர, தீர, பராக்கிரம சாகசங்களைப் பற்றி மானாவாரியாய் அள்ளி விட்டுக் கொண்டு இருக்கிறேன். நீ அதற்கு ஒரு காதைக்கூடத் தரவில்லை என்றால் எப்படி இருக்குமாம்?'' என்று குறைப்பட்டவள், சட்டெனக் கண்சிமிட்டி, ''அப்படி எந்த மன்மதராஜனைப் பற்றி கனவு கண்டு இருக்கிறாயாம்?'' என்று குறுகுறுப்புடன் விசாரித்தாள்.

ஒருகணம் தயங்கிவிட்டு உச்சுக் கொட்டினாள் தாரிணி. ''போப்பா. காலையில் இருந்து எல்லாமே தப்பாகிக்கொண்டு இருக்கிறது, இதில் மன்மதக் குஞ்சை எங்கே நுழைப்பது?'' என்றாள் ஓர் அலுப்புடன்.

''என்னப்பா தப்பு நடந்தது? ஆ...ங்... பணம் எடுத்துக் கொண்டு தாமதமாக வந்தாயில்லையா? என்ன என்றுகூடக் கேட்கவில்லையே. என்னப்பா நடந்தது?'' என்று அக்கறையோடு விசாரித்தாள் தோழி.

''பெரிதாக ஒன்றும் இல்லை. காலையில் லேட்டாக விழித்தேனா, பணம் எடுத்துக்கொண்டு வரும்போது வண்டி பங்க்சர்!...''

''அப்புறம்? அப்புறம் ஒன்றுமில்லையா? துன்பங்கள், தொல்லைகள் எல்லாம் இரண்டோடு நிற்காதேப்பா. மூன்றாகத்தானே முடியும்? என்ன வரப்போகிறதோ தெரியவில்லையே!'' என்று மெய்யாகவே கவலைப்படத் தொடங்கினாள் சித்ரா.

''உஷ்... அதெல்லாம் ஒன்றுமில்லை. பாரேன், இன்று இவ்வளவு குறைந்த விலைக்கு நல்ல நல்ல சாமான்கள் கிடைத்திருப்பது எவ்வளவு பெரிய நன்மை. இதிலிருந்தே தெரியவில்லையா, இந்த மூன்று கெடுதல் தொடர்ந்து வரும் என்பது மூடநம்பிக்கை என்று.''

தாரிணியின் பேச்சில் சமாதானம் அடைய மறுத்தாள் சித்ரா. ''ஊகூம். இது வேறு. ஆனால் இரண்டு கெட்டது நடந்தால் மூன்றாவதும் நிச்சயம் நடக்கும். நான் எத்தனையோ தடவை பார்த்துவிட்டேன். அம்மா, அப்பா விசயம் சொல்லியிருக்கிறேன் இல்லையா?...'' வேதனையோடு ஒரு கணம் நிறுத்தினாள் சித்ரா.

சித்ராவின் பெற்றோர் விபத்தில் இறந்தவர்கள். விபத்தன்று காலையில் பால் கொட்டிவிட்டதாம். இரண்டாவதாய் பூந்தொட்டி உடைந்ததாம். இந்த இரண்டின் தொடர்தான் மூன்றாவதாக நேர்ந்த அந்தப் பெரும் விபத்து என்பதில் அவளுக்கு பெரு நம்பிக்கை. சின்ன விசயங்களைக் கூடக் கெடுதலோ என்று கலங்குவதும், மூன்றாவதற்காக அச்சத்தோடு காத்திருப்பதும் அவளது வழக்கமே.

இந்தக் கலக்கங்களிலிருந்து அவளை மீட்பது அவ்வப்போது தாரிணிக்கு வழக்கமே. ஆனால் பட்ட துன்பம் பெரிது என்பதால் சித்ராவைச் சமாதானப்படுத்துவது எளிதல்லதான்.

அன்றும் தாரிணியின் பேச்சை ஒத்துக்கொள்ள மறுத்து, ''ஒன்று செய்யலாமா, தாரிணி, தானாக வரும்போது அந்த மூன்றாவது துன்பம் என்ன சைசில் வரப்போகிறதோ? அதைவிட, ஐந்து ரூபாய்க்கு வாங்கி, நீ பெயிண்ட் அடித்து வைத்தாயே, அந்தப் பானையைப் போட்டு உடைத்து விடலாமா? மூன்றாவது கெடுதல் முடிந்த மாதிரியும் இருக்கும்; நமக்கும் ஐந்து ரூபாயும்



அரை மணி நேர வேலையுமாய் அதிக இழப்பு நேராமலும் போகும்'' என்று சித்ரா மூளையைக் கசக்கி யோசனை கூறவும் தாரிணிக்குச் சிரிப்பு வந்தது.

''விதியையே சீப்பாக முடிக்கப் பார்க்கிறாயே!'' என்று கேலியாகப் பேசிச் சிரித்துவிட்டு, ''நிச்சயமாய்ச் சொல்லுகிறேன், சித்து. இதற்குமேல் தொடர் துன்பம் என்று எதுவும் இன்று வரப்போவதில்லை'' என்று எழுந்து கையிலிருந்த சிமிழை, மர அடுக்கில் பளிச் சென்று தெரியும் விதமாய் வைத்தாள் தாரிணி.

''அதெப்படி உனக்குத் தெரியுமாம்?'' என்று கொஞ்சம் மனம் அமைதியுற்றவளாக, வளையல் டப்பாக்களோடு தானும் எழுந்தாள் சித்ரா.

''தெரியும் என்றால் தெரியும். நிச்சயமாய்த் தெரியும். அவ்வளவுதான்'' என்றபடி சன்னல் ஓரமாய் இருந்த பீங்கான் ஜாடியைத் தூசி தட்டினாள் தாரிணி.

அவளுக்குத் தெரியும்தான்.

ஒருவேளை சித்ராவின் கூற்றுப்படி, துன்பங்கள் மூன்றாகவே தொடர்ந்து வரும் என்பது உண்மையாகவே இருந்தாலும் மூன்றுமே நேர்ந்து முடிந்தாயிற்று தானே! காலையில், கண்விழிக்கு முன் கண்ட அந்தக் கனவு, கைகோர்த்துக் காதல் பாட்டுப் பாடியபோதும் அந்தக் கனவைக் கண்டதே ஒரு கெடுதல்தானே. அத்தோடு சேர்த்து மூன்று துன்பங்களும் முடிந்துவிட்டன தானே?

என்னதான் மூன்று துன்பங்களுமே நடந்து முடிந்துவிட்டதாகத் தாரிணி நினைத்தாலும், விதியும் அப்படியே எண்ண வேண்டும் இல்லையா?

தான் அப்படி எண்ணவில்லை என்று விதி விரைவிலேயே காட்டியது.



# 2

''அவ்வளவு நிச்சயமாய் நீ சொன்னால் சரிதான்ப்பா'' என்று ஒருவாறு அமைதியுற்று, தன் ஆசைக்குரிய வளையல் டப்பாக்களை, அலமாரியில் வைத்துப் பூட்டினாள் சித்ரா.

பதிலாகத் தாரிணி முறுவலித்தபோது, வாயிற்புறம் கார் நின்று, கதவைத் திறந்து மூடும் ஓசை கேட்டது. தன்னியல்பாய் அருகில் இருந்த சன்னலின் வழியே வெளியே எட்டிப் பார்த்த தாரிணி திரும்பிய வேகத்தில் அவளது கைபட்டு, சற்று முன்னரே துடைத்து வைத்த பீங்கான் பூச்சாடி உருண்டு விழத் தொடங்கியது.

அது நேரே தரையில் மோதி உடைந்துவிடாமல் தடுக்க, தாரிணி எவ்வளவோ முயன்றும் முடியாது போயிற்று. நேராகத் தரையில் விழுந்திருந்தால் சுக்குநூறாய் உடைந்திருக்க வேண்டிய பூச்சாடி, இடையில் அவளது கை தடுத்ததால் வேகம் குறைந்து விழுந்து நாலாகப் பிளந்தது.

ஒருகணநேர அமைதிக்குப்பின், ''தரு... நீ பேசாமல் அந்தப் பானையையே உடைத்துப் போட்டிருக்கலாம். ஐந்தே ரூபாயோடு முடிந்து போயிருக்கும். இந்த ஜாடி பழங்காலத்தது என்று ஐநூறு ரூபாய் கொடுத்து வாங்கி வந்தோம்! ஐந்து... நூறு... ரூபாய்'' என்று பெருமூச்சுவிட்டாள் சித்ரா. உடனேயே தேறி, ''ஆனால் பரவாயில்லை. பணம்தானே, போகிறது. பெரிய துன்



பம் எதுவும் இல்லாமல் வெறும் பொருள் நஷ்டத்தோடு போவது என்றால் அது எவ்வளவு பணம் என்றாலும் போய்த் தொலையட்டும். பரவாயில்லை, விடு'' என்று முறுவலித்தாள்.

உடைந்த துண்டுகளின் மேல் பார்வையைப் பதித்து நின்றிருந்த தாரிணியின் இறுகிய முகத்தில் எந்த விதமான மாற்றமும் இல்லாது போகவும், ''ஏய்... விடுப்பா. உடைந்தது வெறும் ஜாடிதான். என்னவோ வாழ்க்கையே கைதவறி விட்டாற்போல நிற்கிறாயே'' என்று தோழியை உற்சாகப்படுத்த முயன்றாள் சித்ரா.

வாயிற்புறம் அரவம் கேட்டது.

சட்டெனக் குனிந்து உடைந்த துண்டுகளைச் சேகரித்தாள் தாரிணி. ''நான் இதை 'பெவிகால்' போட்டு ஒட்டப்போறேன். கடையைத் தனியாகவே பார்த்துக் கொள், சித்ரா. பிளீஸ்... வந்து... யாரும் கேட்டால் என்னைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாம்'' என்று வேகமாக உரைத்தவள், மடமடவென்று சென்று, பின்புறக் கதவைத் திறந்து, வீடு நோக்கி விரைந்தாள்.

''என்னது? யாருமா? அப்படி யார் வந்து என்ன கேட்பார்களாம்?'' என்ற சித்ராவின் கேள்வி காற்றோடு போக, கடையின் முன்புறக் கதவை லேசாகத் தட்டிய பின் திறந்து, தலையை நீட்டி, ''உள்ளே வரலாமில்லையா?'' என்று அனுமதி கேட்டான் ஓர் இளைஞன்.

''தாராளமாய்!'' என்று சித்ரா அனுமதிக்கு முன்பாகவே உள்ளே வந்து விட்ட அவனது பார்வை, அந்தக் கூடம் முழுவதையும் அவசரமாக அலசியது.

''உங்களுக்கு என்ன வேண்டும், சார்? என்ன விலையில் என்ன மாதிரிப் பொருள் வேண்டும்? வீட்டு உபயோகப் பொருளா அல்லது அலங்காரச் சாமானா? யாருக்காவது பரிசா, சார்?''

சித்ராவின் மூச்சுவிடாத விசாரணை, அவனை அவள்புறம் திருப்பியது.

வெண்பற்கள் பளிச்சிட முறுவலித்தான் அவன். "என்ன வேகம்! என்ன வேகம்! பேசும்போது இடையில் மூச்சு எடுக்கவே மாட்டீர்கள் போல? ஆனால்... இடையிடையே கொஞ்சம் மூச்சு விட்டுக்கொண்டு, ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டீர்கள் என்றால் எனக்கு பதில் சொல்ல இலகுவாக இருக்கும் என்று நினைக்கிறேன்... ஆமாம், இதை நீங்கள் மட்டுமேயா கவனித்துக் கொள்கிறீர்கள்? சிரமமாக இருக்குமே?" என்று அக்கறை காட்டி விசாரித்தான், அந்தப் புதியவன்.

"சிரமமா? கிடையவே கிடையாது. ஏனென்றால் பாதிப் பங்கு என் சிநே..." என்று இயல்பாகப் பேசத் தொடங்கிய சித்ராவுக்குத் தோழி சொல்லிச் சென்றது நினைவு வரவும் சட்டெனப் பேச்சை நிறுத்திக் கொண்டாள். திகைப்பும் குறுகுறுப்புமாக விழிகளை விரித்து அவனை நேராக நோக்கினாள். "அதைப் பற்றி நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?"

சற்றும் தயங்காமல் காரணம் சொன்னான் அவன். "இவ்...வளவு பெரிய இடம்!" என்று கைகளை வீசி விரித்து அவன் காட்டியவிதம், ஓரளவு பெரியதான அந்த அறையை மேலும் விசாலமாக்கிக் காட்டியது. "இந்தப் பெரிய்ய இடத்தை, இத்தனை சாமான்களுடன் சீராகப் பராமரிக்க வேண்டும் என்றால் நாலைந்து பேர் வேண்டுமே! குறைந்தபட்சமாய் இன்னமும் ஓர் ஆளாவது இருக்க வேண்டாமா? நீங்களானால் தன்னந்தனியாக இருக்கிறீர்களே என்றுதான் கேட்டேன்" என்று சரளமாக விளக்கியபோது சித்ராவின் ஐயம் அடியோடு அகன்றது.



வழக்கமான கலகலப்புடன், "நாலைந்து பேர் எல்லாம் தேவையே கிடையாது, சார். ஆனால் தனியாக நடத்தவும் முடியாதுதான். அப்படி நான் தவித்த சமயத்தில்தான் என் தோழி எனக்கு உதவியாக வந்து சேர்ந்தாள். 'பைன்ஆர்ட்ஸ்' படித்தவள். இந்தப் 'பெயின்டிங்' எல்லாம் அவளது கைவண்ணம்தான். கெட்டிக்காரி. இப்போது..." என்றவள் தலையில் ஒரு தட்டுத் தட்டி, "என்னமாய்ப் பேத்துகிறேன்! இன்னமும் உங்களுக்கு என்ன மாதிரிப் பொருள் வேண்டும் என்று சொல்லவே இல்லையே, சார்?" என்று தொடர்பு அறுந்துவிடாமல் விசாரித்தாள்.

அவளது பேச்சின் பிற்பகுதியைக் கவனியாதவன் போல, "பைன் ஆர்ட்சா? அதையெல்லாம் படித்து விட்டு இங்கே வந்து உட்கார வேண்டுமானால்... உங்கள் சிநேகிதிக்கு வேறே வேலை கிடைக்கவில்லையா?" என்று வியந்தான் அவன்.

"ஏன் கிடைக்கவில்லை. ஒரு பெரிய விளம்பரக் கம்பெனியில் பெரிய வேலை அவளுக்கு. உயிர்ச் சிநேகிதி, நான் தவிக்கிறேனே என்று எனக்கு உதவி செய்வதற்காக அந்த வேலையை விட்டுவிட்டு வந்தாளாக்கும்!" என்று ரோசமான குரலில் இயம்பினாள் சித்ரா.

"ஓகோகோ! அவ்வளவு பெரிய தியாக சித்தம் இருந்தால் உங்கள் தோழியைப் பாராட்டித்தான் ஆக வேண்டும். ஆமாம், உங்கள் தோழியின் பெயர் என்னவென்று சொன்னீர்கள், மிஸ்...? மிஸ்..."

"சித்ரா. சித்ரா சபாரத்தினம். ஒன்று தெரியுமா, உங்களுக்கு? என் பெயரைப் போலவே என் தோழியின் பெயரையும் நான் உங்களுக்குச் சொல்லவே இல்லை." என்றாள் சித்ரா கிண்டல் குரலில் குறும்பாக.

''எளிதாகச் சரிப்படுத்தக் கூடிய தவறு. விரைவாகச் செய்யவேண்டியதும் கூட'' என்று இலகுவாகப் பேசி, மீண்டும் தன் பல்வரிசையைக் காட்டிப் புன்னகை செய்தான் அவன்.

அந்தப் புன்னகையும், லேசான வற்புறுத்தலுடன் கூடிய குரலுமாகச் சொல்லிவிடலாம் போலத்தான் அவளுக்குத் தோன்றியது. ஆனால் தாரிணியின் திடீர் எச்சரிக்கையும், அதற்கு ஏற்றாற்போல இந்தப் புதியவனின் துருவலும் அவளது வாயை அடைத்தன.

ஆனால், இப்படிச் சிரிப்பவனிடம் முரட்டுத்தனமாக மறுக்கவும் சித்ராவுக்கு மனம் வரவில்லை. எனவே, இரண்டுக்கும் நடுவாக, ''அப்படிச் சரிப்படுத்த வேண்டிய தவறு எதையும் நான் செய்யவே இல்லையே'' என்று தானும் சிரித்துவிட்டு, ''சொல்லுங்கள் சார், உங்களுக்கு என்ன மாதிரிப் பொருள் வேண்டும்? கலைப் பொருட்கள் வேண்டுமானால் இந்தப் பக்கம். கம்பளிச்சட்டை, டீ சர்ட் மாதிரி என்றால் அங்கே. மேசை, நாற்காலி மாதிரி சாமான்கள் என்றால் அடுத்த அறையில்'' என்று அறைப்பக்கம் கைகாட்டினாள்.

அடுத்த அறைப்பக்கம் ஆவலாகவே அவன் செல்லவும் உள்ளூர சிறு அலுப்புடன் அவனைப் பின் தொடர்ந்தாள் சித்ரா. அவன் எதையும் வாங்க வந்த மாதிரி அவளுக்குத் தோன்றவில்லை!

அவளது ஊகம் சரியே என்பது போல, அறையினுள் இருந்த மர, பிரம்புச் சாமான்களில் மேல் அவனது பார்வை முதலில் செல்லவில்லை.

அறை முழுமையையும் அவசரமாகச் சலித்தவன் மீண்டும் அவளிடம் திரும்பினான்.

பொறுமையை இழுத்துப் பிடித்தபடி சித்ரா நிற்பதை உணர்ந்து சிறு புன்னகை புரிந்து, ''எனக்கு அந்தக்



கட்டிலும், சோபாசெட்டும், பிரம்பில் மேலே கண்ணாடி பரப்பிய இந்த மேசையும் வேண்டும். பணம் முழுவதாக இப்போதே தந்துவிடுகிறேன்'' என்று கூறி அவளை அயரவைத்தான்.

வாயெல்லாம் பல்லாக, ''நன்றி சார். ரொம்ப ரொம்ப நன்றி சார்...'' என்று தொடங்கியவள், ஆனால் ஆனால் அந்தக் கட்டில், தேக்குமரம் சார். ப...பத்தாயிரம் ரூபாய் விலை! சோபா... மேசை எல்லாம் விலை குறைவுதான். எல்லாம் சேர்ந்தே நாலாயிரம் ரூபாய்தான் ஆகும். ஆனால் மொத்தமாய் பதினாலாயிரம் ஆகுமே... ப...பரவாயில்லைதானே சார்?'' என்று கவலையுடன் விசாரித்தாள்.

அவனது புன்னகை மேலும் விரிந்தது. ''பரவாயில்லைதான். இந்த 'செஸ்ட்ஆப் டிராவ்'சைக்கூட வாங்கலாம் என்றுதான் இருக்கிறேன். விலை... ஆறாயிரமா?''

''ஐந்து சதம் கழிவு தரலாம் சார்'' என்றாள், சித்ரா அவசரமாக.

''கழிவு தராவிட்டால்கூட வாங்கிக் கொள்வேன். ஆனால் ஒரு சின்னச் சிக்கல். அதைச் சரிபண்ணினால் வாங்கிவிடலாம்.''

''என்ன சார்?'' என்றாள் சித்ரா, சுரத்து இறங்கி.

''இந்த 'சார் சீரை விட்டுவிட வேண்டும். என் பெயர் சுரேந்திரன். சுரேந்திரன் என்று அழைத்தால்,இப்போதே சாமான்களுக்குப் பணம் தந்துவிடுகிறேன்'' என்று அவன் சிரிக்கவும் கூடச் சேர்ந்து சிரித்தாள் சித்ரா.

''சிக்கல் இப்போதே இந்த வினாடியே தீர்கிறது, மிஸ்டர் சுரேந்திரன். பில் போடட்டுமா?'' என்று மகிழ்ச்சியோடு கேட்டாள் அவள்.



பில்லுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு, தனது அடுத்த சிக்கலைப் பற்றிக் கூறினான் சுரேந்திரன். ''எங்கள் வீடு வெள்ளையடித்து, சுத்தம் செய்து கைக்கு வர இன்னமும் ஒரு வாரம் ஆகும், மிஸ். சித்ரா. அதுவரை என் சாமான்கள் இங்கேயே இருப்பதில் உங்களுக்கு ஒன்றும் சிரமம் இல்லையே...'' என்று அவன் கேட்டபோது, ''தாராளமாய் இங்கேயே இருக்கலாம். எங்களுக்குச் சிரமமே கிடையாது'' என்றாள் அவள் குதூகலத்துடன். எவ்வளவு பெரிய தொகை! அப்பா காலத்தில்கூட இப்படி ஒரே பில்லில் இவ்வளவு பணம் வந்திருக்குமோ என்னவோ?

கிளம்புகையில் மீண்டும் ஒருதரம் அவனது பார்வை சுற்றிச் சுழன்றது. ''என் சாமான்கள் பத்திரமாய் இருக்கின்றனவா என்று தெரிந்துகொள்ளுவதற்காக நான் அடிக்கடி வருவேன், சித்ரா'' எச்சரிப்பது போல, சுரேந்திரன் பேசியதைச் சித்ரா முதலில் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவே இல்லை. அவ்வளவு நேரமாக, சிறு கேலி ஊடாட, இலகுத்தன்மையோடு அவன் பேசிய விதமும், அவன் சும்மா விளையாட்டுக்குச் சொல்கிறான் என்றே அவளை எண்ண வைத்தன.

''தாராளமாய் வாருங்கள். எப்போதும் உங்களுக்கு இங்கு வரவேற்பு உண்டு'' என்று உபகாரமாகச் சொல்லவும் வைத்தன.

அன்றைய பெரும் விற்பனையின் விவரத்தைத் தோழியிடம் கூறி மகிழ்கையில், ''கண்ட பொறுக்கிகளுக்கெல்லாம் என்ன வரவேற்பு? இதுதான் சாக்கென்று தினமும் வந்து நிற்கப் போகிறார், பார்'' என்று தாரிணி எரிச்சல் பட்டபோது கூட ''சும்மா உபகாரமாய் ஒரு வாய் வார்த்தை. அப்படித் தினமும் வந்து நிற்க அந்த ஆள் என்ன வேலை, வெட்டி இல்லாதவரா?'' என்று



மனதில் நினைத்ததையே கூறித் தோழியைச் சமாதானம் செய்ய முயன்றாள்.

அதன்பின்னரே, சிநேகிதியின் கடுமையான வார்த்தைப் பிரயோகம் மனதில் பட, ''ஏய் தரு, என்னடி பொறுக்கி கிறுக்கி என்கிறாய்? பில்தொகை சொன்னேன் இல்லையா? இருபதாயிரம் ரூபாய்! நாற்பது புது ஐநூறு ரூபாய் நோட்டுகள்! அவ்வளவு கொடுத்து வாங்குகிறவர் பொறுக்கியா? என்ன பேச்சு இது?'' என்றாள் குரலில் கண்டனத்துடன்.

''இருபதாயிரத்துக்கு ஒரு பில்லா?'' என்ற தாரணியின் முகம் சிவந்தது. ''என்னென்ன அயோக்கியத்தனம் செய்து இந்த அளவுக்கு உயர்ந்தாரோ? நாற்பது ஐநூறு ரூபாயை நீட்டிவிட்டால் ஒருவன் நல்லவனாகி விடுவானா? சொல்லப் போனால் பணம் வைத்திருப்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கடைந்தெடுத்த கயவர்கள்தான்'' என்று கசப்பும் வெறுப்புமாக உரைத்தவள், சித்ரா குறுக்கிடுமுன், மீண்டும் தொடர்ந்தாள். ''தூண்டில் போட்டு மீன் பிடிப்பதைப் பார்த்திருக்கிறாய் அல்லவா, சித்ரா? இரண்டு சின்னப் பெண்கள், மடக்கி விடலாம் என்று, தூண்டில் முள்ளை மறைத்த இரைபோலப் பணம் தந்திருக்கிறார். நீயானால்... இவ்வளவு நாட்களாக ஒரு கெட்ட பெயர் ஏதுமின்றி வாழ்ந்திருக்கிறோம். எச்சரிக்கையாய் இரு. அவ்வளவுதான் சொல்லுவேன்'' என்ற தாரிணி, ஒட்ட வைத்த பூச்சாடியை எடுத்துத் திருப்பிப் பார்த்தாள். ''நன்றாக ஒட்டிவிட்டது. ஒட்டியது ரொம்பத் தெரியவில்லைதானே? தெரிந்தாலும், ஏதாவது பழங்காலப் பொருள் சேகரிக்கிறவர்கள் வந்தால் வாங்கிவிடுவார்கள்.

தோழியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சித்ராவுக்கு ஜாடியில் மனம் செல்லவில்லை. ''மிஸ்டர்

சுரேந்திரனை நீ பார்த்தாயா, தாரிணி?'' என்று வினவினாள்.

ஜாடியில் ஒட்டிய இடத்தில் லேசாகப் பிதுங்கியிருந்த பசையை உப்புத்தாள் கொண்டு கவனமாகத் தேய்த்தாள் தாரிணி. அதிலேயே கவனத்தைப் பதித்தவள், ''உம்...'' என்றாள் சற்று அலட்சியமாகவே. ''சன்னல் வழியே பார்த்தபோதே சரியான 'காசனோவா' என்று தோன்றிவிட்டதால்தான் பேசப் பிடிக்காமல் உள்ளே போனேன். நீயானால்... மீண்டும் வந்தால் உஷாராக இரு'' என்று தோழியை எச்சரித்தாள்.

அந்த எச்சரிக்கையையும் சித்ரா பெரிதாக எண்ணவில்லை. ஏனெனில் சுரேந்திரன் அவ்வளவு மட்டமானவன் அல்ல என்றே அவள் நம்பினாள்.

மறுநாள் கடைதிறந்து சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய பூங்கொத்து வந்து சேர்ந்தது. அழகாக அடுக்கப்பட்டிருந்த, பாதி மலர்ந்திருந்த பல வண்ண ரோஜா மொட்டுகளும், லேடீஸ் லேஸ் பூக்களும், முனை சுருண்டிருந்த 'பெர்ண்' இலைப் பின்னணியில் கண்ணைக் கவர்ந்தன.

சித்ராவைக் குறிப்பாக நோக்கி விட்டு தோளைக் குலுக்கினாள் தாரிணி.

பூங்கொத்தின் அழகில் மனம் இளகியிருந்த சித்ராவின் முகம், பூங்கொத்தோடு இணைக்கப்பட்டிருந்த கார்டை எடுத்துப் படித்ததும் பூரிப்புடன் மலர்ந்தது. ''படித்துப் பார், தாரிணி'' என்று தோழியிடம் நீட்டினாள்.

அவள் பேசாமல் தூசுத்தட்ட தொடங்கவும், ''கடையைப் பிரகாசப்படுத்தும் பூமுக மங்கையருக்கு'' என்று எழுதியிருந்கதை வாசித்துக் காட்டிவிட்டு, ''இதை



அந்தப் பித்தளைப் பூச்சாடியில் வைத்து மேசை மேல் அலங்காரமாய் வைக்கலாமா?'' என்றபடி ஜாடியைத் தேடிப்போனாள் சித்ரா.

''என்னைக் கேட்டால் இதற்குப் பொருத்தமான இடம், குப்பைத் தொட்டிதான். ஆனால் அது இப்போது உனக்குப் புரிவது சிரமம்'' என்று உரைத்துவிட்டுக் கருமமே கண்ணாயினாள் தாரிணி.

''புரியாத மக்குக்குப் புத்திசாலியம்மாள், நீதான், புரியும்படி சொல்லிப் புரியவைப்பது?''

சிநேகிதியின் கேலிக் குரல் உசுப்ப, ஏதோ சொல்ல வாயெடுத்தாள் தாரிணி.

சாலையில் கார் நின்று, கார்க் கதவைத் திறந்து மூடும் சப்தம் கேட்டது.

சட்டெனத் திரும்பி, ''நீ மக்கு அல்ல என்று எனக்குத் தெரியும், சித்ரா. ஆனால், புத்திசாலிகள்கூடச் சில சமயம் ஏமாறுவது உண்டு. நீ ஏமாந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். எனக்குக் கொஞ்சம் தலைவலியாக இருப்பதால் காற்றாட நடக்கப் போகிறேன்'' என்று வேகமாக உரைத்தவள் அதே வேகத்ததுடன் பின்வழியே சென்று விட்டாள்.

''அலோ...'' என்று உற்சாகமாக அழைத்தபடி முன்வழியே உள்ளே வந்தான் சுரேந்திரன். சுற்றுமுற்றும் நோக்கிவிட்டு, ''என் சாமான்களைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று பக்கத்து அறையினுள் சென்றுவிட்டுத் திரும்பி வந்தான். சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக்கொண்டு இருந்து விட்டுச் சென்றான்.

மறுநாளும், அதற்கு மறுநாளும் கூட இதுவே தொடர்ந்தது.

சுரேந்திரனின் வருகைக்கு கட்டியம் கூறுவது போலப் பெரிய விலை உயர்ந்த மலர்க்கொத்து வருவ



தும், அடுத்து அவன் வருவதும் வழக்கமாயின. ஒரு நாள் மதியம் வந்தான். அடுத்த நாள் மாலையில் வந்தான். ஜோக்கடித்தான். சிரித்தான்.

சித்ராவின் பேச்சில் சுரேந்திரனின் பெயர் அடிக்கடி ஊடுபா ஓட்டியது. பெரும்பாலும் தாரிணி அதைக் கவனியாதது போல வேறு பேசத் தொடங்குவாள்.

அன்றும் அதுபோல, ''இன்று சுரேந்திரன் உன்னைப் பற்றி என்ன சொன்னார், தெரியுமா? 'உன் தோழிக்கு மாயமாய் மறைந்துவிடுகிற மந்திர வித்தை ஏதுவும் தெரியுமா' என்று கேட்டார்'' என்று கூறிச் சித்ரா சிரிக்கவும் தாரிணியின் பொறுமை மறைந்தது.

''அந்த மன்மதக்குஞ்சுதான் உளறுகிறது என்றால் நீவேறு அதைத் திருப்பிச் சொல்லியாக வேண்டுமா?'' என்று எரிந்து விழுந்தாள்.

சித்ராவின் உற்சாகம் சற்றும் குறையவில்லை. ''எனக்கு அவரைப் பிடிக்கிறது. பழகுகிறேன். அவருக்கும் என்னைப் பிடித்துதான் இருக்க வேண்டும். மற்றபடி, தினமும் இவ்வளவு பெரிய 'பொக்கே' அனுப்புவாரா...''

''இந்தப் பூங்கொத்தை அடிப்படையாக வைத்து எதையும் அனுமானம் செய்யாதே, சித்து. ஏனென்றால்... ஏனென்றால் தினமும் ஒரு பெண்ணுக்காவது மலர்க்கொத்து அனுப்பாவிட்டால் அவருக்கு மண்டை வெடித்துவிடும்!'

''அந்த விவரம் உனக்கு எப்படித் தெரியுமாம்?''

ஒரு கணம் தயங்கிவிட்டு, ''ஒரு காலத்தில் சுரேந்திரனிடம் மலர்க் கொத்து பெற்று, இதே மாதிரி எண்ணி மகிழ்ந்த மண்டுகங்களில் நானும் ஒருத்தி'' என்றாள் தாரிணி இறுகிய குரலில்.



## 3

இமைகளைப் படபடவென்று கொட்டி, கண்களை அகல விரித்தாள் சித்ரா. ''ஓகோகோ! அதனால்தான் இந்த ஓட்டம் ஓடினாயா? ஓரோரு சமயம், ஏதோ விசயம் என்று எனக்குத் தோன்றத்தான் செய்தது. ஆனால் நீ என்னிடம் எதையும் மறைக்கமாட்டாய் என்று நம்பிக்கையில் அதை ஒதுக்கிவிட்டேன். நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை? உயிர்ச் சிநேகிதியிடம் ஒளிவுமறைவு இருக்கலாமா?'' என்றாள் சிறுதாங்கலுடன்.

''சுகத்தையும் சந்தோசத்தையும்தான் அடுத்தவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம்; துக்கம் தனிமையில் அனுபவிக்கப் படவேண்டிய ஒன்று'' என்றாள் தாரிணி மெல்லிய குரலில்.

''நீயே சொன்னாய், அடுத்தவர்களோடு'' என்று. நான் உனக்கு அடுத்தவளா?'' முகம் வாடிக் கேட்டாள் அவள்.

''சாரிம்மா...'' என்று தோழியின் கையைப் பரிவுடன் பற்றினாள் தாரிணி. ''உனக்குத் தெரியக்கூடாது என்று மறைக்கவில்லை, சித்து...''

''ஓ.கே. இப்போதாவது சொல்லு... என்ன நடந்தது?''

தாரிணிக்கும் முட்டிக்கொண்டுதான் இருந்ததோ, வடிகால் கிடைத்தாற் போல உள்ளே இருந்ததை எல்லாம் கொட்டிவிட்டாள்.

''நான், இங்கே வருமுன் என்ன வேலை பார்த்தேன் என்று உனக்கு நினைவிருக்கிறதா?''

''ம்ம்... நன்...றாய். ஒரு பெரிய விளம்பர நிறுவனத்தில், 'அக்கவுண்ட் எக்சிகியூட்டிவ்' மாதம் சம்பளம் நாலாயிரத்துக்கும் அதிகம். நல்ல எதிர்காலம். அவ்வளவையும் எனக்காக விட்டுவிட்டு...''

''ச்சு... உனக்காக விடவில்லை என்று நான் அப்போதே சொன்னேனே!''

''அது சும்மா. என் மனம் வருத்தப்படக் கூடாதே என்று சொன்னது. எனக்குத் தெரியாதா?''

''கடவுளே!'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் தாரிணி. ''சித்ரா, நீ இந்தக் கற்பனை அலங்காரங்களை விட்டொழித்துவிட்டு, எப்போதுதான் நிஜ உலகத்துக்கு வரப்போகிறாயோ, தெரியவில்லை. புரிந்து கொள், சித்ரா, இந்த உலகத்தில் சுயலாபம் கொஞ்சம் கூட இல்லாமல் பிறருக்காக மட்டும் என்று யாரும் எதையும் செய்வது இல்லை. நானும் ரொம்ப வித்தியாசம் கிடையாது. ஆனால் ஒன்று, சிலபேர் பிறர் பாதிக்கப்படுவார்களே என்கிற எண்ணமே இல்லாமல், சுயலாபம் மட்டுமே குறியாக என்ன மாதிரி வேண்டுமானாலும் செயல்படுவார்கள். நான் அந்த அளவு மோசம் இல்லை. அவ்வளவுதான்'' என்று கைத்த குரலில் கூறினாள் தாரிணி.

''ம்ம்... அப்படிச் சுயலாபம் மட்டுமே கருதிச் செயல்படுகிறவர்களில் ஒருவர் அந்த மன்மதராஜனாக்கும்?!''

ஆம் என்பது போலத் தலையசைத்தாள் தாரிணி. 'அவ்வளவு சம்பளத்தையும், இன்னமும் உயரக்கூடிய வாய்ப்பையும், வளமான எதிர்காலத்தையும் விட்டு



விட்டு, கண்காணாத இடம் தேடி நான் ஓடிவரக் காரணம் அந்த மன்மதனேதான். அப்படி ஓடிவந்த போது எனக்குப் புகலிடம் தந்தது நீதான். அதனால் நன்றிக்கடன் பட்டிருப்பவளும் நானேதான்'' என்று கூறிப் பெருமூச்செறிந்தாள் தாரிணி.

''என்ன நடந்தது, தாரிணி?'' என்று மெதுவாக வினவினாள் சித்ரா.

''சொல்கிறேன்'' என்று தொடங்கினாள் தாரிணி.

'யூனிவர்சல்' விளம்பர நிறுவனத்தில் தாரிணி வேலை பார்த்த காலம் அது. கல்லூரியில் 'பைன் ஆர்ட்ஸ்' முடித்த கையோடு அங்கே வேலை கிடைத்தது. மூன்று ஆண்டுகளில் படிப்படியாக, ஆனால், விரைவாக முன்னேறி, 'அக்கவுண்ட் எக்சிகியூட்டிவ்' ஆகியிருந்தாள். பல விளம்பரங்களைத் தனிப்படவே கையாண்டு வெற்றியும் பெற்றிருந்தாள்.

சுரேந்திரன் அப்போது 'பிரியா' சோப்புக் கம்பெனியில் பெரிய அதிகாரி. கம்பெனியில் அவனுக்குக் கொஞ்சம் பங்குகளும் உண்டு என்றார்கள். விளம்பரப் பிரிவு அவன் கீழ் இயங்கியது.

'பிரியா' கம்பெனி புதிதாக ஒரு சோப்பைத் தயாரித்திருந்தது. அதை மக்கள் மனதில் பதியும் வண்ணம் மக்களுக்கு அறிமுகப்படுத்த விரும்பியது. ஏற்கனவே அவர்களது விளம்பரங்களைக் கையாண்ட பழைய விளம்பர நிறுவனத்திடம் அதிருப்தி யுற்றிருந்தபடியால் அதைவிடுத்து 'யூனிவர்சல்' நிறுவவனத்தைப் புதிய சோப்பின் விளம்பரத்துக்காக அணுகினார்கள். நிறுவனத்தின் சார்பில் தொடக்கநிலைப் பேச்சுக்காகப் 'பிரியா' சோப்புக் கம்பெனிக்குச் சென்றபோது தான் தாரிணி, முதல் முதலாக சுரேந்திரனைச் சந்தித்தாள்.



அந்த முதல் சந்திப்பைப் பற்றிச் சொல்லுமுன், மனதைச் சமனப்படுத்திக் கொள்ளத் தாரிணிக்குச் சில வினாடிகள் அவசியமாயிற்று.

'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாளா?' என்று கேலியாகப் பேச வாயெடுத்த சித்ரா, தோழியின் முகத்தைப் பார்த்துவிட்டு வாயை மூடிக் கொண்டாள்.

முதல் பார்வையில், தாரிணிக்குப் பாதிப்பே இல்லை என்று சொல்ல முடியாது. அவனது உயரம், கம்பீரமான தோற்றம், பிசிரற்ற குரலில் புதிய சோப்பின் சிறப்புத்தன்மைகள், விளம்பரத்தில் கொண்டு வரவேண்டிய முக்கியக் குறிப்புகள் பற்றி அவன் விளக்கிய விதம்... எல்லாமே அவனைப் பற்றி ஓர் உயர்வான எண்ணத்தையே உருவாக்கின.

எடுத்த எடுப்பிலேயே நீ அழகாக இருக்கிறாய் என்று அவன் சொன்னது கூடப் பெருமையாகத்தான் இருந்தது.

ஆனால் அன்றைய மயக்கத்தில்கூட, மறுநாள் காலையில் அவளது இருப்பிடத்துக்கு அவன் அனுப்பியிருந்த 'பொக்கே' அவளை யோசிக்க வைத்தது.

தொழில்முறைத் தொடர்பு. இதற்கு என், இவ்வளவு பெரிய விலை உயர்ந்த பூங்கொத்து?

பூங்கொத்தொடு இணைக்கப்பட்டிருந்த விசிட்டிங் கார்டைத் திருப்பிப் பார்த்ததும் தாரிணிக்கு ஆத்திரமும் வந்தது.

அன்று மாலையில் 'ஓட்டல் சோழா'வில் அவனோடு டின்னர் சாப்பிட வரமுடியுமா என்று கேட்டிருந்தான் சுரேந்திரன்.

ஜிவ்வென்று சினம் தலைக்கேறியது அவளுக்கு.



இவன் என்ன நினைத்துக் கொண்டான்?

இவனது கம்பெனி போலப் பெரிய நிறுவனங்கள் தரும் விளம்பரங்கள் மூலம்தான் விளம்பர நிறுவனங்களுக்கு வருமானம். ஆனால் அதற்காக இவன் விருப்பம் போல எல்லாம் ஆடுவார்களா? ஓட்டலுக்கு அழைப்பவன் அடுத்து ஓட்டல் அறைக்கு அழைக்க மாட்டான் என்று என்ன நிச்சயம்.

ஆத்திரத்துடன் அவனது காண்டைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு பேசாமல் இருந்துவிட்டாள் தாரிணி.

ஆனால் அழைப்பைக் கிழித்து எறிந்துவிட்ட போதும், அடுத்து அவனைப் பாராமல் ஒதுங்க அவளால் முடியவில்லை.

'பிரியா'வின் புதிய சோப்பின் விளம்பரத் தயாரிப்பு, அவள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்ததால் மீண்டும் அதுபற்றிப் பேசுவதற்காகத் தாரிணி சுரேந்திரனின் அலுவலகத்துக்குச் செல்லத்தான் வேண்டியிருந்தது.

முன்தினம் அவன் சொன்ன குறிப்புகளுக்கு ஏற்ப, மூன்றுவிதமான விளம்பரத் திட்டங்களைத் தயாரித்து எடுத்துக் கொண்டு சென்றாள், அவன் அவைகளை எட்டிக் கூடப் பார்த்தான் இல்லை.

''மலர்ச்செண்டு கிடைத்ததா?''

''ஆமாம்'' என்று ஒற்றைச் சொல்லில் பதிலளித்தாள் அவள்.

''ம்கூம்? ஒரு பரிசுக்கு நன்றி கூறத்தான் தெரியவில்லை என்றாலும், கேள்விக்கு பதிலுமா சொல்லத் தெரியாது. நேற்று வசதிப்படவில்லை என்றால் சொல்வதற்கென்ன?''

''நேற்று மட்டுமல்ல, என்றைக்குமே வசதிப்படாது என்பதால்தான் சொல்லாமலே விளங்க வைத்தேன்'' என்றாள் அவள் மிடுக்காக. என்னவோ அவள்தான் தப்பு செய்தாற்போலப் பேசுகிறானே!

''ஏன் வசதிப்படாது?'' என்று அழுத்தத்துடனேயே கேட்டவன், உடனே மாறி, ''ஓட்டல் சோழாவில் சாப்பாடு நன்றாக இருக்கும், தெரியுமா?'' என்றான் இலகுவாக.

என்னவோ, அவள் சாப்பாட்டு ருசிக்காகத்தான் வர மறுத்தாற்போல சுரேந்திரன் பேசியது எரிச்சல் ஊட்ட, ''மிஸ்டர் சுரேந்திரன், அறியாதவர்களோடெல்லாம் ஓட்டலுக்கும் மற்றதுக்கும் சுற்றுகிற ரகம் நான் அல்ல'' என்றாள் அவள் திருத்தமாக.

''ஓகோ! ஆனால் நான் யாரென்று உனக்குத் தெரியுமே! நான் அறியாத யாரோ இல்லையே?''

''யாரென்று மட்டும் தெரியும். ஆனால் உங்களோடு தனியே ஓர் இடத்துக்கு வர இது போதாது.''

''தேவுடா!'' என்று நெற்றியில் அறைந்து கொண்டான் சுரேந்திரன். ''பைத்தியம் தெளிந்தால்தான் திருமணம், திருமணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும்'' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு, தெரியுமா? நீ என்னோடு வெளியே கிளியே வந்தால்தானே என்னைப் பற்றி நீ தெரிந்து கொள்ள முடியும்? வராமலே ஒதுங்கி நின்றுகொண்டு, தெரிந்து கொள்ளாமல் வரமாட்டேன் என்றால் நான் என்ன செய்யட்டும்?''

சுரேந்திரனின் பேச்சில் இருந்த 'லாஜிக்' அவளை முறுவலிக்க வைத்தது. மெல்ல மெல்ல, அவன் அழைத்த இடங்களுக்கு அவனோடு செல்லவும் வைத்தது.



இதன் நடுவே சுரேந்திரன், வேலையையும் விட்டானில்லை. சிரிப்பும் விளையாட்டுமாகப் பேசியே அவளை இரு மடங்கு வேலை செய்ய வைத்தான்.

பத்திரிகை விளம்பரம் தயாராகும் போதே டி.வி. விளம்பரமும் தயாராயிற்று.

சின்னச் சின்ன விசயங்களை எல்லாம் அவன் கவனித்த விதம் தாரிணியின் மனதில் அவன் மீது மதிப்பை ஏற்படுத்தியது. ஆனால் அதே சமயம், சோப்பை உபயோகிக்கும் 'மாடல்' பெண்ணின் கன்னத்தை நன்றாக வருடிப் பார்த்து, ஒப்பனையால் பெரும்பாலும் மறைக்கப்பட்டிருந்த பருவைக் காட்டி, 'குளோசப்' காட்சியில் தெரிந்து விளம்பரத்தின் நோக்கத்தையே கெடுத்துவிடும் என்றபோது தாரிணிக்குக் கொஞ்சம் ஒரு மாதிரி ஆயிற்று.

அந்தப் பெண் மேனாவின் கன்னக் கதுப்புகளை அவன் இவ்வளவு அழுத்தமாகத் தடவித்தான் ஆக வேண்டுமா?

போதாக்குறைக்கு அந்த மாடல் பெண் வேறு. ''என் கன்னத்தை நன்றாகப் பிதுக்கி ரசித்துவிட்டு வேலை தராமல் விரட்டப் பார்க்கிறாயா சுரேன்? இரண்டு ஆண்டுகளாக உங்கள் நிறுவன விளம்பரங்களுக்கு மாடலாக வந்துவிட்டு இப்போது இல்லையென்றால் எப்படி? ஊகூம். குறைந்தபட்சம் இந்தத் தடவலுக்கேனும் கூலி தராமல் உன்னை விடப்போவது இல்லை, தெரியுமா?'' என்று கொஞ்சலும் கெஞ்சலுமாகப் பிணங்கி நின்றாள்.

வாய்ப்பு பறிபோய்விடுமோ என்று அவள் அஞ்சுவது நன்றாகவே தெரிந்தது. அழகான பெண் கலங்கினால் சுரேந்திரனுக்கு தாங்குமா?



ஆறுதலாய் அவள் தோளில் தட்டிக் கொடுத்து, ''சேச்சே. உன்னை அப்படி விட்டுவிடுவேனா? ம்ம்... சோப்பை உபயோகித்தவரின் மிருதுவான சருமத்தைப் பார்த்துவிட்டு, அதே சோப்பை வாங்க வேண்டும் என்று ஆவலாக ஓடிவரும் கூட்டத்தில் முதல் ஆளாக நீ வா'' என்றான். மீண்டும் அவள் கன்னத்தைத் தொட்டு, இந்த பருவை மறைக்க முயற்சி பண்ணாமல், வெளிப்படையாகக் காட்டியபடி வரவேண்டும், சரிதானா?'' என்று காட்சியையும் விளக்கினான்.

வாய்ப்பு தந்ததற்கான நன்றியை, அவன் தோளைப் பற்றி, கன்னத்தில் முத்தமிட்டு விளக்கமாகத் தெரிவித்துக் கொண்டாள் அந்த மேனா. ''எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள். ஒரே நாற்றக் குட்டை?'' என்றாள் தாரிணி வெறுப்புடன்.

''ஏனோ? அந்தப் பெண் வந்து முத்தமிட்டால் அதற்கு சுரேந்திரன் என்ன செய்வாராம்?'' என்று சுரேந்திரனுக்குப் பரிந்து வந்தாள் சித்ரா.

''முத்தமிட்டதற்கு அவர் பொறுப்பில்லை என்றாலும், அவளுக்குக் கன்னத்தைக் கொடுத்துக் கொண்டு சும்மாதானே நின்றார்?'' என்றாள் தாரிணி கோபமாகவே.

''வேறு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? தன் உத்தம சிகாமணித் தனத்தைக் காட்டுவதற்காக அவளை உதறித்தள்ளித் திட்டி அவமானப் படுத்தியிருக்க வேண்டும் என்கிறாயா? அப்புறம் அந்த இடத்துச் சூழ்நிலையே கெட்டுவிடாதா? அதை ஒரு ஜோக்காகப் பாவித்து, சமூகநிலையைக் காத்ததற்காக மிஸ்டர் சுரேந்திரனைப் பாராட்ட வேண்டுமே தவிர... தரு, என்னைவிட உனக்கு இது நன்றாகப் புரிந்திருக்க வேண்டுமே!''



உதடுகளை இறுக மூடித் தாரிணி தன் எதிர்ப்பைக் காட்டவும், ''தாரிணி, இதுபோலச் சூழ்நிலைகளில் ரொம்பவும் பார்க்க முடியாது. ஓரோரு சமயங்களில் தொழில் முறையில் 'லஞ்ச்' என்று தனியாக யாராவது ஆண்களோடு ஓட்டலுக்கெல்லாம் போக வேண்டும்; அருகருகே உட்கார நேரிடும். அப்போதெல்லாம் பத்தினித்தனம் காட்டி ஒதுங்கி நின்றால், அப்படி நிற்பதுதான் அசிங்கமாகத் தெரியும் என்று நீயே சொல்லியிருக்கிறாயே, நினைவில்லையா?'' என்று தோழியை சமாதானப்படுத்த முயன்றாள் சித்ரா.

ஆனால் தாரிணி சமாதானம் அடைய மறுத்தாள். ''அதுவும் இதுவும் ஒன்றாகுமா? அதுபோல நான் செல்ல நேரும் வேளைகளில், வெறும் கைகுலுக்கலுக்கு மேலும் யாரும் என்னை நெருங்க முடியாது, தெரியுமா? இங்கானால்... சித்ரா, நீ ஒன்றை யோசித்துப் பார்க்கவே இல்லையே! ஒரு பெண், எவ்வளவுதான் முற்போக்கு வாதியாக இருந்தாலும், அத்தனை பேர் நடுவில், ஓர் அன்னிய ஆணை முத்தமிடுவாளா? அவர்களுக்குள் ஏதோ இருக்கப் போய்த்தானே...? குறைந்தபட்சம் சுரேந்திரன் அவளது கன்னத்தை அப்படி வருடியதால்தானே...

''உஷ்... என்ன பேச்சு இது, தாரிணி? அது சோப் விளம்பரம். 'குளோசப்' வரும். சோப்பைப் பயன்படுத்துகிறவளின் முகத்தில் பரு தெரிந்தால் அப்புறம் அந்த சோப்பை யார் வாங்குவார்கள்? சுரேந்திரன் எவ்வளவு கவனத்துடன் செயல்பட்டிருக்கிறார் என்று எண்ணிப் பாராட்ட வேண்டுமே தவிர அதில் குறை காண்பது எனக்குச் சரியாகப் படவில்லை. அத்தோடு அந்தப் பெண் சரளமாகப் பழகுகிறவளாக இருக்கலாம். சும்மா ஒரு கை குலுக்கலைப் போலவே இந்த முத்தத்தை அவள் எண்ணியிருக்கலாம்... தாரிணீ...?''

விழிகள் இலக்கற்று வெளியை வெறிக்க, பழைய நினைவுகளில் ஆழ்ந்து நெடுமூச்செறிந்தாள் தாரிணி.

தோழியின் அழைப்பில் மீண்டு, ''இந்த மாதிரிக் காரணங்களை நான் எண்ணிப் பார்க்கவே இல்லை என்றா சித்ரா, நீ நினைக்கிறாய்? இப்படி ஒன்றல்லடி, ஓராயிரம் சம்பவங்கள். எல்லாவற்றுக்கும் ஏதேதோ சப்பைக் கட்டுகளைக் கட்டி, சாக்கு போக்குகளை உருவாக்கி... சுரேந்திரனின் வசீகரமான தோற்றத்திலும் பகட்டான பேச்சிலும் மயங்கி என்னை நானே ஏமாற்றிக் கொண்ட சம்பவங்கள் எத்தனை எத்தனை! எண்ணில் அடங்காது தெரியுமா?'' என்றாள் தாரிணி கசந்த குரலில்.

''எண்ணில் அடங்காது என்றால்? அத்தனை தரம் நீ மிஸ்டர் சுரேந்திரனைச் சந்தித்திருக்கிறாய். அப்படித் தானே? அங்கிளுக்கு... உன் பெற்றோருக்குத் தெரியுமா?''

''முதலில் தெரியாது.''

சித்ரா ஒருவிதமாக நோக்கவும். ''என்னவென்று சொல்வது? அவரை நான் சந்திக்க நேர்ந்த சம்பவங்களில் பெரும்பான்மை வேலைத் தொடர்பு உடையவை. மற்றபடி... அழகைப் புகழ்கிறார்; ரசிக்கப் பேசுகிறார்; பூச்செண்டு அனுப்புகிறார் என்று... அதைப்போய் என்னவென்று அப்பா - அம்மாவிடம் சொல்லட்டும்? ஆனால் திருமணப் பேச்சு எடுத்ததும் எழுதி விட்டேன்'' என்றாள் தாரிணி.

''திருமணமா!''

திகைப்புடன் தோழியை நோக்கினாள் சித்ரா.



# 4

''திருமணமா? திருமணம் செய்து கொள்ளும்படி மிஸ்டர் சுரேந்திரன் உன்னைக் கேட்டாரா? அவர் கெட்டவராக இருந்தால் திருமணப் பேச்சு எடுப்பாரா? நீ ஒத்துக்கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். அவ்வளவு தூரம் வந்துவிட்டு அதன் பிறகு என்னப்பா?'' என்று ஆர்வத்துடன் பரபரத்தாள் சித்ரா.

தோளைக் குலுக்கி, ''அதன்பிறகு என்ன? சுரேந்திரனைப் பற்றிய சில உண்மைகளை, அவரது உள்நோக்கங்களை எல்லாம் தெரிந்து கொண்டேன். அவரைப் பற்றி நினைக்கவே வெறுப்பாக இருந்தபோதும், முட்டாளின் சொர்க்கத்தில் சுகமாக மிதந்து கொண்டிருந்த என்னைத் தட்டி எழுப்பி, என் கண்களைத் திறந்து விட்டாள் ஒருத்தி'' என்றாள் தாரிணி கசப்பும் வெறுப்புமாக.

பேசாமல் எழுந்து சென்று, பிளாஸ்க்கில் இருந்த காபியை இரண்டு பிளாஸ்டிக் கப்புகளில் ஊற்றிக் கொண்டு வந்தாள் சித்ரா.

ஒன்றைத் தாரிணியிடம் கொடுத்துவிட்டு, ''சொல்லுப்பா. அடிமுதல் ஒன்றுவிடாமல் சொல்லு. உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். சுரேந்திரனும்.... இருவருமாகத் திருமணம் வரை வந்துவிட்டுப் பிரிவது என்றால் எங்கோ தப்பு நேர்ந்திருக்கிறது என்றுதான் தோன்றுகிறது. ஏதாவது சீர்செய்யமுடிகிறதா என்று பார்க்கலாம், சொல்லு'' என்று ஊக்கினாள்.

நம்பிக்கையற்ற முறுவல் ஒன்று, தாரிணியின் உதடுகளில் லேசாக நெளிந்து மறைந்தது. ''சீர்செய்ய

h



என்று ஒன்றும் இல்லை, சித்ரா. ஆனால் உனக்கு இன்னமும் சுரேந்திரனிடம் நல்ல எண்ணம் இருக்கிறது. இதைத் தொடர்ந்து என்னைப் போல நீயும் ஏமாந்துவிடக் கூடாதே என்பதற்காகவே இன்று உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடப் போகிறேன்'' என்று மீண்டும் தன் கதையைச் சொல்லத் தொடங்கினாள் தாரிணி.

பெற்றோர் வைத்த பெயருக்குத் தப்பாமல் நடப்பவன் சுரேந்திரன். அந்த சுரர்களின் அதாவது தேவர்களின் தேவேந்திரனைப் போலவே இந்த சுரேந்திரனுக்கும் மெல்லியலாரிடம் நாட்டம் உண்டு. பெண்கள், அவனது பார்வையைக் காந்தமாக இழுப்பதைத் தாரிணி பல்முறை கண்டிருக்கிறாளே. கண்டு கொண்டாளே என்று குன்றிக் குறுகாமல் அவளிடமே வர்ணிப்பான்.

''பார், அந்த நீலச் சுரிதாரின் உடம்பு 'டக்கர் இல்லை?'' அந்த குண்டு மணியின் கன்னங்கள் ஆஸ்திரேலியன் ஆப்பிள் போல, அப்படியே கடித்துவிடலாம் போலத் தோன்றுகிறதே!'' அந்த 'டூபீஸ்'காரியின் இடுப்பு இருபது அங்குலம் கூட இராது, அதற்குள் என்ன செழுமை பார்!'' என்றெல்லாம் அவளிடமே விவரிப்பான்.

அப்படி ஒளிவு மறைவு இல்லாமல் அவளிடமே அவன் பேசப் பேச இவன் நல்ல ரசிகன் மட்டுமே என்பதால்தான் இன்னொரு பெண்ணிடமே இதை எல்லாம் சொல்கிறான் என்று தனக்குள் காரணம் கண்டுபிடித்து, மன உறுத்தலைத் தணித்துக் கொண்டாள் தாரிணி.

அதற்கு மேலாக, ''ஒவ்வொருவரிடம் ஒவ்வோர் அழகு மட்டும்தான் இருக்கிறது, தாரிணி. ஆனால் உன்னிடம் அத்தனை எழில்களும் ஒருசேர வந்து



குவிந்துவிட்டனவே!'' என்று அவன் வியந்தபோது அவள் உச்சி குளிர்ந்தும் போனாள்.

அப்போதும், சில சமயங்களில் அவன் அளவு மீறி வர்ணிக்கும் போது அவளுக்கு எரிச்சலாகிவிடும். அதை வெளிக்காட்டாமல், ''என்னிடமே சொல்லுகிறீர்கள், அருகில் ஒரு பெண் இருக்கும்போது அடுத்தொரு பெண்ணைப் பார்ப்பது கூடத் தவறு தெரியுமா?'' என்று இலகுக் குரலிலேயே கண்டிப்பாள்.

''நீதிமொழியா? பத்தடி தள்ளியிருப்பதை உருப்படியாகக் காண முடியாத எவனாவது கிட்டப் பார்வைக்காரன், மற்றவர்கள் பார்த்து ரசிக்கிறார்களே என்ற வயிற்றெரிச்சல் .தாங்காமல், பொறாமையில் எழுதி வைத்திருப்பான். அய்யா பார்வை கொஞ்சமும் குறைவற்றது தெரியுமா? வேண்டுமானால் நிரூபித்துக் காட்டட்டுமா? பார், அதோ அந்தக் கையில்லாத ரவிக்கைக்காரியின் சங்கிலியின் டாலரில் வண்ணத்துப் பூச்சி போல எனாமல் வேலை செய்திருக்கிறது.''

''போதும் போதும்'' என்று நிறுத்தி, அவனது கவனத்தை வேறுபுறம் திருப்பினாள் தாரிணி.

காரணம்... அந்த டாலர் தொங்கிக் கொண்டிருந்த இடம் அத்தோடு, அந்தப் பெண்ணின் ரவிக்கையில் இல்லாதது கைமட்டும் அல்ல. சும்மா வெட்டி எறிந்த துணிகளைப் பொறுக்கிவந்து அதிலேயே தைத்திருப்பாள் போல. சட்டை அணியும் நோக்கத்தை அடியோடு மாற்றி காட்டுவதே லட்சியம் போலத் தைக்கப்பட்டிருந்த ரவிக்கை அது!

இதுபோன்ற சம்பவங்கள் அவ்வப்போது நிகழ்ந்த போதும், சுரேந்திரனின் விருப்பப்படி, ஏதாவது ஐந்து நட்சத்திர ஓட்டலில், நீச்சல் குளத்தருகே அமர்ந்து.

எதையாவது கொறித்தபடி பேசிக்கொண்டு இருப்பதும், இரவு உணவை அந்த ஓட்டலிலேயே முடித்துக் கொண்டு திரும்புவதும் வழமை ஆயிற்று...

இந்த இடத்தில் சித்ரா குறுக்கிட்டாள். ''அவரும், வேலை பார்ப்பவர் என்றாயே, தாரிணி. எவ்வளவுதான் பெரிய தொகை சம்பளமாகக் கிடைத்தாலும், தினமும் ஐந்து நட்சத்திர ஓட்டல் சாப்பாட்டுக்கு எப்படிக் கட்டிவரும்?'' என்று கேட்டாள்.

''டைனர்ஸ் கிளப்! அலுவலகத்தில் அவருக்குக் கொடுத்திருந்தார்கள். என்ன செலவு என்றாலும் டைனர் கிளப் கார்டைக் காட்டிக் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிடுவார். 'இது தொழில் ரீதிச் செலவுகளுக்குத் தானே, நாம் உண்பதற்கெல்லாம் பயன்படுத்துகிறீர்களே' என்று நான்கூட அவரைக் கேட்டது உண்டு. 'நான் பொறுப்பேற்ற பிறகு சோப் விற்பனை எவ்வளவு அதிகமாகி இருக்கிறது தெரியுமா? அதற்கே எனக்கு எவ்வளவு தந்தாலும் தகுமாக்கும்' என்று பெருமையடிப்பார். அத்தோடு அந்த நிறுவனத்தில் அவருக்குப் பங்குகளும் இருந்தன. இதற்கு மேலும் கொசுறாக இன்னொரு காரணமாக, 'நம் விசயத்தில் தொழில் தொடர்பும் கொஞ்சம் உண்டுதானே?' என்றும் கூறுவார். ஆனால் அந்தக் காரணம் 'கொஞ்சம்' அல்ல. பெரும்பாலும் அதற்காகத்தான் என்னை அழைத்துவந்து விருந்தும் பேச்சுமாகக் குழையடித்தார் என்பதை எடுத்துச் சொல்ல அந்த ரஞ்சிதா வேண்டியிருந்தது எனக்கு'' என்று ஒரு சுயவெறுப்புடன் சொன்னாள் தாரிணி.

ஓரப் பார்வையால் அவளை நோக்கிவிட்டு, ''சரி, கதையில் அவள் வந்தபிறகு அவளிடமிருந்தே நானும் அதை அறிந்து கொள்கிறேன். ஆனால், பெரும்பான்மைக் காரணம் அவள் சொன்னது என்றாயே, அப்படி



யானால் சிறுபான்மைக் காரணம் என்று வேறு ஏதாவது உண்டோ?'' என்று விசாரித்தாள் சித்ரா.

''ஆமாம்... சபல புத்தி... பெண்ணாசை! எப்படித் தெரியும் என்று கேட்கிறாயா? நெருங்கி நெருங்கி அமர்வது, கையைப் பிடிப்பது... அவரது 'அப்பார்ட்மெண்ட்'டுக்குக் கூட என்னைப் பலதடவை அழைத்திருக்கிறார்.''

''இதெல்லாம் உன்மேல் கொண்ட காதலாலும் இருக்கலாம். முறைக்காதே. எதையும் நாலு விதமாயும் எண்ணிப் பார்க்க வேண்டும் இல்லையா?''

''ச்சு... நாலென்ன, நாற்பதுவிதமாய் எண்ணிப் பார்த்தாலும் நாலும் நாலும் எட்டாய்த்தான் இருக்க முடியும். வேறுவிதமாய்க் கூட்டிப் பார்க்கிறேன் என்று கூட்டலிலேயே தப்பு விட்டு விடாதே'' என்று எச்சரித்தாள் தாரிணி.

தோழியின் பூடகப் பேச்சில் சிரிப்பு வந்தபோதும் அதை வெளிக்காட்டாமல் மறைத்து, மேலே சொல்லும்படி கேட்டாள் சித்ரா.

ஓர் ஆறு மாதங்கள் இதே ரீதியில் சென்றன. நாளுக்கு நாள் தாரிணியின் மயக்கம் அதிகமாகிக் கொண்டே சென்றது. சுரேந்திரனை ஒருநாள் பார்க்க முடியாவிட்டாலும் தாங்க முடியாமல் தவித்தாள். 'காதலாகினேன்' என்று தூணைப் பிடித்துக் கொண்டு பாடாத குறைதான். மற்ற பெண்களைப் பற்றிய அவனது ரசனை ஒன்றுதான் பாகைத் துரும்பு. ஆனால் அதையும் பல்லைக் கடித்து, சகித்துக் கொள்ளப் பழகிக் கொண்டாள். மற்ற பெண்களிடம் அவனாகச் சென்று பேசுவதையும்தான்.

தாரிணியைப் பொறுத்த வரையில் அவள் மனதில் சந்தேகமே இல்லை. சுரேந்திரன்தான் இந்த பிறவிக்கு



மட்டுமல்ல, எத்தனை பிறவி எடுத்தாலும் தன் நாயகன் என்று தீர்மானித்து விட்டாள்.

ஆனால் சுரேந்திரன்? அவன் மனதில் என்ன இருந்தது என்று அவளால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

அவன் அருகில் இருக்கையில் அவளுக்காக அவன் தன் உயிரைக் கூடத் தேவைப்பட்டால் விட்டுவிடுவான் போலத் தோன்றும். ஆனால் பிரிந்து செல்லும்போதே மனதில் புயலடிக்கத் தொடங்கிவிடும். அவன் பேச்சில் அடிபடும் பெண்களின் பெயர்கள் அவர்களின் உருவங்கள் எல்லாம் பூதம் காட்டத் தொடங்கிவிடும்.

அந்தப் பெண்களைப் பற்றிச் சுரேந்திரன் சும்மா குறிப்பிட்டால் கூட அவ்வளவாகத் தோன்றாதோ என்னவோ?

'இன்று ரஞ்சி ஓர் உடை அணிந்து கொண்டு வந்திருந்தாள், தரு. அலுவலகத்தில் எல்லோர் கண்ணும் அவள் மேல்தான். உள்ளே என்ன இருக்கிறது என்று ஒவ்வோர் அசைவிலும் கோடி காட்டுவது போல்... யாரிடம் தைத்தாளோ தெரியவில்லை. அந்தத் தையல்காரரிடம் நம் பிரீதியை அனுப்ப வேண்டும். மாடல் என்று சொல்லிக் கொண்டு உடம்பு முழுவதையும் படுதாவால் போர்த்திக் கொண்டு வந்து நிற்கிறாள். பிறகு அவள் உடல் அழகை எப்படிப் பார்ப்பது? என்றெல்லாம் சொல்வதை எப்படிச் சாதாரணமாக ஏற்பது?

அதிலும் ரஞ்சி கஞ்சி என்று செல்லச் சுருக்கம் வேறு!

ஆனால் இதுபற்றி அவனிடம் வெளிப்படையாகக் கேட்கவும் முடியவில்லை. ஏன், உன்னையும் 'தரு'



என்றுதானே அழைக்கிறேன் என்று அவர்களோடு அவளையும் ஒன்றாகச் சேர்த்துவிட்டால், அப்புறம் அவளது இதயம் இருக்கும் இடத்தில் உடைந்த துண்டுகள் மட்டும்தானே கிடக்கும்? அதை ஒட்டிச் சேர்க்க யாராலும் முடியாதே!

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சோப் விற்பனையில் சாதனை படைத்தது. தாரிணியின் தலைமையில் தயாரிக்கப்பட்ட தொடர் விளம்பரங்கள் அதற்குப் பெரிதும் உதவின என்பதும் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட உண்மை ஆயிற்று.

தொடர்ந்து வெளிநாட்டு மார்க்கெட்டை பிடிக்கத் திட்டமிட்டது பிரியா சோப் நிறுவனம். 'கிரீம்' கலந்த புதிய சோப் தயாரித்து, விளம்பரம் செய்தால் மேல்நாடுகளில் நன்றாக விற்பனையாகும் என்று எதிர்பார்த்ததால், அங்கே வெளியிட வேண்டிய விளம்பரங்களை அங்கேயே தயாரிக்கலாம் என்ற சுரேந்திரனின் யோசனையை நிறுவனம் ஏற்றது.

இதைப்பற்றித் தாரிணியிடம் உற்சாகமாக விவரித்தான் சுரேந்திரன்.

விழிகள் பளபளக்கப் பேசியவனை ஆர்வத்துடன் பார்த்திருந்தாள் தாரிணி. அவனது உற்சாகம் அவளுக்கும் மிகுந்த மகிழ்ச்சியையே அளித்தது.

''இந்த விளம்பரங்களையும் உங்கள் யூனிவர்சலிடம் - அதாவது உன்னிடம் தான் ஒப்படைப்பதாக இருக்கிறோம் தரு. அதனால் நீயும் என்னுடனேயே கிளம்பிவிடு. நாம் இருவர் மட்டுமாகப் போகலாம். முதலில் லண்டன் சென்று, அங்கிருந்து முக்கியமான பெரிய நகரங்களில் எல்லாம் 'லொகேசன்' பார்க்கிற சாக்கில் பத்து நாள் ஜாலியாகக் கழித்துவிட்டு வரலாம்''

என்று அவன் முடித்தபோது, தாரிணி அப்படியே சுருண்டு போனாள்.

இதற்கு என்ன அர்த்தம்.

இருவர் மட்டுமாக வெளிநாடு சென்று, பத்து நாட்கள் ஜாலியாகக் கழிப்பதற்குப் பொருள் புரியாத அளவு அவள் முட்டாள் அல்லவே!

முட்டாள்தானோ என்பது போல அவன் மேலும் விளக்கினான்.

''நான், நீ மட்டும்தான் தரு. இடைஞ்சல், இடையூறு என்று ஓர் ஈ, காக்கை தலைநீட்ட முடியாது. இங்கே என் 'அப்பார்ட்மென்ட்' பக்கம் கூட வரமாட்டேன் என்கிறாயே, அங்கே என்ன செய்கிறாய் என்று பார்க்கிறேன். வேலை நேரம் முடிந்தால் அப்புறம்...'' என்று கண் சிமிட்டினான் சுரேந்திரன்.

அந்த மாதிரிப் பெண் அவள் அல்ல என்பது அவனுக்கு இன்னமுமா தெரியவில்லை?

பதறிய கை கால்களைத் திடப்படுத்திக் கொண்டு, அவன் பேசிக் கொண்டு இருக்கையிலேயே எழுந்தாள் தாரிணி.

''நான்... நான் போக வேண்டும்'' என்றவள் அவனது அழைப்பைக் காதிலேயே வாங்காமல் விரைந்து சென்றுவிட்டாள்.

இரவெல்லாம் தவியாய்த் தவித்து ஒருவாறு விடிகாலையில்தான் கண்ணயர்ந்தாள் தாரிணி. அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது யாரோ அறைக் கதவைத் தட்டினார்கள்.

ஓய்வெடுத்த உணர்வே இல்லாமல் அலுப்பும் களைப்புமாக எழுந்து வந்து கதவைத் திறந்தாள் தாரிணி.



எழுப்பியவள், அந்த வேலை பார்க்கும் மகளிர் தங்கும் விடுதியைப் பெருக்கி, சுத்தம் செய்து, கூப்பிட்ட குரலுக்கு ஏவல்புரியும் ஆயா.

''யம்மா, உனுக்கு இந்தப் பூச்செண்டு கொண்டாந்து குடுக்கவே நீ அம்பது ரூபா அதிகம் கொடுக்கோணுமாக்கும்'' என்று கூறியபடி, ஒரு பெரிய 'பொக்கே' யைக் கொணர்ந்து தாரிணியின் அறை மேசை மேல் வைத்து விட்டுப் போனாள்.

நல்ல அடர்சிவப்பில் பாதி விரிந்தும் விரியாமலுமாகப் பெரிய பூங்கொத்தை வெறித்தபடி சற்று நேரம் நின்றாள் தாரிணி.

யார் அனுப்பியிருக்கக் கூடும் என்று அறிந்திருந்ததாலேயே அழுகையும் வந்தது.

அழகான மலர் அமைப்பின் நடுவில் இருந்த அவனது 'விசிட்டிங்கார்டை' அவள் வெகு நேரம் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. அன்று எங்கே சந்திப்பது என்றுதானே எழுதியிருப்பான்! அங்கே செல்லப் போவது இல்லை என்பது தெளிவானபின் அதைப் பார்த்து ஆவதென்ன?

அவளது மறுப்பை அன்றே தெரிவித்துவிடப் போவதால் அனேகமாக இதுதான் அவன் அனுப்பும் கடைசிப் பூங்கொத்து என்ற எண்ணம் தோன்றவும் முதலில் அவளால் தாங்க முடியவில்லை.

ஓடிப்போய் அந்த மலர் செண்டை அணைத்துக் கண்ணீர்விட்டாள்.

கையில் உறுத்தியது. சுரேந்திரனின் விசிட்டிங் கார்டு!

தன்னிச்சையாய்க் கை அதைத் திருப்ப, கண்களை பின்புறமிருந்த செய்தியின் மீது ஓடவிட்டவள் அப்படியே கல்லாய்ச் சமைந்து நின்றாள்.



தரு,
மணமாலை சூட்டி, அதன்பின் தேனிலவைக்
கழிக்கவென்று அழைத்தால் என்னோடு வெளிநாட்
டுக்கு வர உனக்குச் சம்மதமாயிருக்குமா?''
அன்பன்
சுரேந்திரன்

என்று எழுதியிருந்தான் அவன்.
''உய்ய்...'' என்று துள்ளிக் குதித்தாள் சித்ரா.
''என்னவோ, சபலம், பெண்ணாசை என்றாயே. திரும
ணத்துக்கே கேட்டு அவரது உண்மைக் காதலை
நிரூபித்துவிட்டார், பார்'' என்றாள் குதூகலத்துடன்.
தோழியின் ஆர்ப்பரிப்பு அடங்கி, அவள் மீண்டும்
அமரும்வரை அவளை வெறித்துப் பார்த்த வண்ணம்
பேசாதிருந்தாள் தாரிணி. ''நானும் இப்படித்தான் அன்று
துள்ளிக் குதித்தேன். ஆனால்... அதுதான் முதலிலேயே
சொன்னேனே, அப்போது நான் ஏமாளியாய் இருந்
தேன் என்று'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

## 5

மூன்தின மாலையிலிருந்து அனுபவித்த வேதனை
மட்டுமல்லாமல், சுரேந்திரனுடன் அதிகமாகப் பழகத்
தொடங்கியதிலிருந்து உள்ளூர அரித்த கலக்கமும்
தீர்ந்துவிட, துள்ளிக் குதித்தாள் தாரிணி.
அப்....ப்பா! நம்பிக்கையும் அவ நம்பிக்கையுமாக
எத்தனை நாள் வேதனை! டார்லிங், டியர் என்று
அழைப்பவன், ஒரு நாள் உன்னைப் பாராவிட்டாலும்
தூக்கமே வருவதில்லை' என்பவன், காதலிக்கிறேன்



என்றோ, கல்யாணம் செய்துகொள்கிறேன் என்றோ ஒரு
வார்த்தை சொல்லவில்லையே; சொல்லவே மாட்
டானோ; அவன் பழகுகிற பெண்கள் எல்லோரிடமும்
இப்படித்தான் பேசுவானோ... என்று எத்தனை எத்தனை
பதிலறியாக் கேள்விகள்! ஒரு சிறு தனிமையிலும்
அவளது இதயத்தைத் துளைத்தெடுத்த கேள்விகள்!
அத்தனை கேள்விகளுக்கும் மிகமிக மேன்மை
யான முழுமையான பதில் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில்
தாரிணி அன்று திக்குமுக்காடிப் போனாள்.
அந்த மகிழ்ச்சியில், மதுவுண்ட மந்தி என்பார்
களே, அதுபோலக் குதித்தாடியபடியே அவசரமாக
உடை மாற்றிக் கொண்டு வெளியே போய், சுரேந்திர
னுக்கு டெலிபோன் செய்தாள்.
'அலோ!' என்று கம்பீரமாய் சுரேந்திரன் குரல்
கேட்டதுமே, 'சம்மதம், சம்மதம்' என்று மழையாய்ப்
பொழிந்துவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்
தவளுக்கு, எதிர்முனையில் 'அலோ' என்ற பெண்குர
லைக் கேட்டதும் சற்றுநேரம் ஒன்றும் புரியவில்லை.
சுரேந்திரனின் பிரம்மச்சாரி இல்லத்தில் இந்த
நேரத்தில் - தாரிணி எழுந்து குளிக்கக்கூட இல்லையே!
அப்படியானால் அதிகாலையாகத்தானே இருக்க வேண்
டும்? - ஒரு பெண்ணுக்கு என்ன வேலை?
மலங்க விழித்தபடி அவள் நின்ற சில வினாடிக
ளுக்குள், 'அலோ அலோ' என்று பலமுறை படபடத்
தது. ''யாரோ, டெலிபோனில் பேசக்கூடத் தெரியாத
பட்டிக்காட்டு ஜென்மம், சுரேன்...'' என்றது அந்தக்
குரல்.
அதற்குள் அந்தக் குரலும் தாரிணிக்கு அடையா
ளம் புரிந்து விட்டது. அந்த ரஞ்சி... ரஞ்சிதா
சுரேந்திரனுடைய காரியதரிசியின் குரல்!

சட்டென எல்லாம் தெளிவாகி விட்டது அவளுக்கு. காலையில் யாராவது முக்கியமான ஆளை வேலை நிமித்தம் சுரேந்திரன் பார்க்கச் செல்லும்படி நேர்ந்திருக்கும். அதனால், அதுபற்றிய குறிப்புகளை வீட்டிலிருந்தே தயாரித்துக் கொண்டு செல்வதற்காகத் தன் காரியதரிசியை வீட்டுக்கு வரச் சொல்லியிருப்பான் சுரேந்திரன்.

பின்மாலையில் சந்தித்தபோது, அதுவே மெய்யென்றான் சுரேந்திரனும். ஆனால் அவள் அதிகாலை நேரம் என்றதை மட்டும் அவன் ஒத்துக் கொள்ளவில்லை. ''ஏழரைக்கு மேல் ஆகிவிட்டது, தாரிணி. எனக்கு எட்டு மணிக்குள் கிளம்பினால்தான் எண்ணை சப்ளை செய்கிறவரைப் பார்த்துப் பேச முடியும்... விளம்பரம் பார்க்கிறவனுக்கு எண்ணை விற்கிறவனிடம் என்ன வேலை என்று தோன்றுகிறதா? சோப் தயாரிப்பில் முக்கிய மூலப் பொருள் எண்ணைதான் தெரியுமல்லவா? எண்ணை எவ்வளவுக்குச் சுத்தமாக இருக்கிறதோ, அவ்வளவுக்குத் தயாரிப்பு நன்றாயிருக்கும். இப்போது நம் சேர்மன், தேவநாதன் சோப் தயாரிப்பில் எல்லாத் துறைகளையுமே என்னைக் கவனிக்கச் சொல்லியிருப்பதால் தான் மிஸ்டர் மேனனைப் பார்க்க வேண்டியதாயிற்று.

அன்றிருந்த மயக்கத்தில் அவன் பேச்சை அப்படியே நம்பினாள் தாரிணி. அந்த 'ஏழரைக்கு மேல்' என்றதையும் கூடத்தான்.

அவன் சொன்னதுதான் மெய்யாக இருக்க வேண்டும். ஏனெனில் அவள் மணியைப் பார்க்கவே இல்லையே. சுரேந்திரனிடம் சம்மதம் சொல்லித் திரும்பிச் சென்றவள், மலர்க்கொத்தில் கண்ணைப் பதித்துக் கற்பனையில் ஆழ்ந்து போனாள். எதிர்காலத்தைப் பற்றிய



என்னென்னவோ இனிய கனவுகள்! திடுமெனக் கடிகாரத்தைப் பார்த்தால் மணி எட்டரைக்கு மேல் ஆகிவிட்டிருந்தது. பரக்கப் பரக்கக் குளித்துவிட்டு ஒரே ஒரு தோசையை அவசரமாக விழுங்கிவிட்டு அலுவலகத்துக்கு ஓடி அல்லவா போனாள்.

ஒருவேளை, கற்பனைக் கனவுகளில் அதிகநேரம் செலவிட்டதாக அவள் எண்ணியது தப்புபோலும். காலையில் அவள் எழவே தாமதமாகி விட்டிருக்கிறது. முந்திய இரவு கூட அவள் சரியாகத் தூங்கவில்லையே. அதனால் காலையிலும் தூங்கி விட்டிருக்கிறாள்!

சுரேந்திரன் கூற்றை மெய்யாக்கத் தேவையான காரணங்களை தேடி ஓடிக் கண்டுபிடித்தது அந்தப் பேதைமனது!

ஆனால், அந்த மயக்கத்திலும் கூட, ''மணந்து கொள்ளப் போகிறோம், இனி என்ன? என் 'அப்பார்ட்மென்ட்'டுக்கே வந்துவிடேன்'' என்று அவன் ஆசை மின்ன அழைத்தபோது அவள் அதற்கு அடியோடு மறுத்துவிட்டாள்.

''பாரதகுலப் பெண் ரத்தினம்'' என்று கேலி செய்தபோதும்; நல்ல வேளையாக அவனும் அதற்கு மேல் வற்புறுத்தவில்லை.

அவளது கொள்கைகளுக்கு மதிப்புக் கொடுத்து அவனது ஆசைகளை அடக்கிக் கொண்டான் என்று தாரிணி அன்று அவனை மேலும் உயர்வாக நினைத்தாள்.

ஆனால், இந்த மாதிரி ஆசைகளைத் தணித்துக் கொள்ள அவனுக்கு எத்தனையோ இடங்கள் உண்டு என்று பாவம், அவள் அப்போது அறிந்திருக்கவில்லை!



அதை அறிந்திராத காரணத்தால் தன் மனதை எல்லாம் கொட்டித் தன் அன்னைக்கு ஒரு கடிதம் எழுதினாள் தாரிணி. கருத்து சுதந்திரம் கொடுத்து வளர்த்த பெற்றோரிடம் அவள் எதிர்ப்பை எதிர்பார்க்கவில்லை. அதன்படியே அவளுடைய தந்தையும் மகளின் காதலை மறுக்கவில்லை. ஆயினும், மகள் தேர்ந்தெடுத்திருக்கும் வாழ்க்கைத் துணையைத் தானும் ஒருதரம் பார்த்துப் பேசிய பிறகு மேற்கொண்டு எதையும் செய்யலாம் என்றும், அவரது அலுவலகத்தில் வருடாந்திரக் கணக்கு முடிக்க வேண்டியிருப்பதால் அந்த மாத இறுதியில் சென்னை வருவதாகவும் தந்தை எழுதினார்.

இதற்கிடையே, அந்த சோப் விற்பனையின் வெற்றியைப் பெரிய விழாவாகக் கொண்டாடியது பிரியா நிறுவனம். நட்சத்திர ஓட்டலில் சுவையான விருந்தும், இசை நிகழ்ச்சியும், பரிசளிப்புமாக அமர்க்களப்பட்டது. சோப் தயாரிப்பின் முதல் படியிலிருந்து எல்லோருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

விளம்பரத் தயாரிப்பிற்காகத் தாரிணிக்கும் ஒரு சிறு வெள்ளித்தட்டு பரிசாக அளிக்கப்பட்டது.

'பீச்' கலர்ப் பட்டுச்சேலையில் சரிகைப் பொட்டுகள் மின்ன எழில் தேவதையாய் மிளிர்ந்தாள் தாரிணி. உள்ளத்து மகிழ்ச்சி வேறு.

''இந்த மாதிரி விழாவுக்கு ரொம்பவும் கா...டியாக இல்லை?'' என்று பாகைத் துரும்பாய் உறுத்திய ரஞ்சிதாவின் விமர்சனம்கூட, அங்கும் இங்கும் எங்குமாய்ப் பறந்து விழா ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த போதும் இடையிடையே அவளையும் கண்ணால் விழுங்கிய சுரேந்திரனின் பார்வையில் மறந்தே போயிற்று.



பரிசளிப்பு முடிந்தாலும் சேர்மனுடைய மனைவிக்கு அறிமுகம் செய்விப்பதற்காகத் தாரிணியை அழைத்துச் சென்றான் சுரேந்திரன்.

சற்றுமுன் மேடையில் நின்று பரிசுகளைத் கொடுத்த சுமார் நாற்பதைந்து... ஐம்பது வயதுக் கனவானின் மனைவியைப் பார்த்ததும் வெகுவாக வியந்து போனாள் தாரிணி.

அவ்வளவு இளமை, திருதேவநாதனுடைய மனைவி மனோகரி, தாரிணியை விடச் சில ஆண்டுகளே மூப்பாக இருக்கக் கூடும்.

''ஏழு வயது அதிகம்'' என்றான் சுரேந்திரன். ''கணவன் - மனைவிக்குள் பதினைந்து ஆண்டுகள் வித்தியாசமாம். ''ஆனாலும், மனோ மகிழ்ச்சியாகவே இருக்கிறாள்'' என்று ஒரு நிச்சயத்தோடு உரைத்தான் அவன்.

முதலாளியின் மனைவியை 'வெகு எளிதாய் 'மனோ' என்று சுரேந்திரன் குறிப்பிட்ட விதமும் தாரிணிக்கு வியப்பாய்த்தான் இருந்தது. ஆனால் அது பற்றி விளக்கம் கேட்குமுன் மனோகரியின் அருகில் சென்றுவிடவே அதை உள்ளேயே விழுங்கிக் கொண்டாள் தாரிணி.

அந்தி மாலை நிறமாய் அதிகச் சிவப்பும் கொஞ்சம் நீலமும் கலந்த இரு வண்ணப் பட்டுச் சேலையணிந்து வைர நகைகள் டாலடிக்க, அதற்கு போட்டியாகப் புன்னகை பளிச்சிட மனோகரியைப் பார்க்க அழகுத் தேவதை என்றே தோன்றியது தாரிணிக்கு.

'வருங்கால மனைவி' என்றே சுரேந்திரன் அவளை அறிமுகம் செய்வித்தான். உடனே, ''ஏய்...சுரேன், திருட்டு ராஸ்கல், இத்தனை நாள் மறைத்து வைத்திருந்

தாயா? இரு. இரு. அவரிடம் சொல்லி உனக்குச்
சீக்கிரமே சரியான தண்டனை - பதவி உயர்வு
கொடுக்கச் சொல்லுகிறேன்'' உரிமையோடு சுரேந்திர
னின் தோளில் தட்டி மனோகரி பேசியது தாரிணிக்கு
இன்னமும் ஆச்சரியத்தை அளித்தது.

அதற்குள் இன்னொரு முக்கிய பிரமுகர் அருகே
நெருங்கவும், ''இரண்டு பேரும் ஒருநாள் வீட்டுக்கு
வாருங்கள்'' என்று அழைத்துவிட்டுப் பிரமுகரின் பக்கம்
திரும்பினாள் மனோகரி.

உங்கள் முதலாளி மனைவிக்கும் உங்களுக்கும்
இவ்வளவு நெருக்கம் எப்படி வந்தது என்று தப்பர்த்தம்
தொனிக்காமல் எப்படிக் கேட்பது? கேளாமல் இருந்தா
லும் நிம்மதியாய் இருக்க முடியாது.

ஆனால் அவளது கேளாத கேள்விக்குப் பதிலாக,
''மனோவும் நானும் ஒன்றாகப் படித்தவர்கள், தரு. ஒரு
விழாவில் அவளைப் பார்த்து ஆசைப்பட்டு சேர்மன்
மனோவை மணந்து கொண்டார். அவளுக்கும் அவரி
டம் காதல்தான். ஏனோ குழந்தை இல்லை. இப்போது
அதை உணரத் தொடங்கியிருப்பது போலத் தெரிகிறது''
என்று சுரேந்திரன் சொல்லவும் தாரிணியின் மனம்
மீண்டும் அமைதியுற்றது.

இசை நிகழ்ச்சி தொடங்கவும், தாரிணியை வசதி
யாக ஓர் இடத்தில் உட்கார வைத்துவிட்டுத் தன்
வேலையைப் பார்க்கச் சென்றான் சுரேந்திரன்.

இதமான ஏ.சியில் வெக்கை தெரியாதபோதும்,
குளிர்பானங்கள் ஏந்திய தட்டுகளுடன் அங்குமிங்கும்
வெயிட்டர்கள் திரிந்துகொண்டிருந்தனர்.

எந்தவித இறுக்கமும் இன்றி, பூரிப்பில் மனம் பஞ்சு
போல கனமற்றுப் பறக்கக் கண் மூடி இசையை
அனுபவிக்கலானாள் தாரிணி.



திடீரென்று ஏதோ சில்லென்று மடியில் சிந்தவும்
தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தாள் அவள்.

எதிரே பதறி நடுங்கிக்கொண்டு ஒரு பணியாள்
கையில் தட்டுடன் நின்று கொண்டிருந்தான். தட்டிலி
ருந்த கண்ணாடித் தம்ளர்களில் ஒன்று மட்டும் சரிந்து
கிடந்தது.

அவள் அருகே அந்தப் பணியாள் வரும்போது
அவன் கை தவறியோ, அல்லது அடுத்தவர் கைபட்டோ
ஒரு தம்ளர் சரிந்திருக்க வேண்டும். பலன் தாரிணிக்கு
- சொல்லப்போனால் தாரிணியின் சேலைக்கு குளிர்
பான அபிசேகம்!

பட்டுச்சேலையில் சிந்தியிருந்த பானத்தை அவசர
மாகக் கையால் வழித்துவிட முயன்றாள் தாரிணி.

அதற்குள் சேலை ஈரத்தை உறிஞ்சிவிடவே கறை
யாகிவிடுமோ என்று கவலையுடன் அவள் பார்க்க,
ஜூஸ் பட்ட இடத்தை உடனே அலசிவிட்டால் கறை
பிடிக்காது என்று யாரோ இலவசமாய் யோசனை
கொடுத்தார்கள்.

வெகுவாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்த
பணியாள், முகம் கழுவும் அறைக்கு அழைத்துச்
சென்றான். மீண்டும் ஒருதரம் அவளிடம் மன்னிப்பு
கேட்டுவிட்டு வெளியேறினான்.

முன் கொசுவத்தை பிரித்து, பானம்பட்ட இடங்க
ளைத் தாரிணி அவசரமாக அலசிக்கொண்டு இருந்த
போது வேறு யாரோ அங்கே வந்தார்கள். ''ஓ!...
நீ...விளம்பரம் தயாரித்த பெண்ணில்லை? பெயர்...
தாரிணி தானே? சேலைக்கு என்ன ஆயிற்று?'' என்று
விசாரித்தாள் ரஞ்சிதா.



சுரேந்திரனுடைய செயலாளர் என்கிற நிலையில்
ரஞ்சிதாவுடன் , தாரிணி அவ்வப்போது தொலைபேசி
யில் பேசியிருக்கிறாள். எனவே அவளது குரல் அவ
ளுக்குப் பழக்கம். விளம்பரம் பற்றிய பேச்சுவார்த்தை
களுக்காக, 'பிரியா' நிறுவனத்துக்குச் செல்லும்போது
சில சமயம் அவளைச் சந்தித்தும் இருக்கிறாள். அதிலும்
அவளது ஆடை அணிகலன்கள் பற்றிச் சுரேந்திரன்
பிரமிப்பாய்ப் பேசிய பிறகு அவளை நன்றாகவே
கவனித்துப் பார்த்ததுண்டு. எனவே முகம், தோற்றம்
எல்லாமே அறிமுகமானவைதான்.

ஆனால், பார்த்தால் தெளிவாக அடையாளம்
தெரிகிற அளவுகூடச் சுரேந்திரனின் செயலாளர் தன்
னைப் பொருட்படுத்தவில்லை என்பது தெரிகையில்
தாரிணிக்கு ஒரு மாதிரி தான் இருந்தது. கொஞ்சம்
நிலை தாழ்ந்துவிட்டது போல உணர்வு.

காட்டிக்கொள்ளாமல், தன் சேலைக்கு நேர்ந்ததை
சுருக்கமாக உரைத்தவள், ரஞ்சிதா, அங்கிருந்த வாஷ்
பேசின் கண்ணாடியில் அவளது ஆடை அலங்காரத்தை
இப்புறமும் அப்புறமும் திரும்பி சரிபார்ப்பதைக் கவ
னித்து ''உங்கள் டிரஸ் நன்றாக இருக்கிறது'' என்றாள்
மரியாதைக்காக.

''உம்... இந்த டிசைனைத் தயாரிப்பதற்காக எனக்
கும் டெயிலருக்கும் நாலு மணி நேரம் பிடித்தது. என்ன
செய்வது? சுரேனுக்கு நான் இப்படி நாகரீகமாக
உடையணிந்தால்தான் பிடிக்கிறது'' என்று செல்லமாய்
அலுத்துக் கொண்டாள், அவள்.

அந்த 'சுரேனுக்குப் பிடிக்கிற'திலும், செல்ல அலுப்
பிலும் தாரிணி சற்றுத் தடுமாறிப் போனாள். சுரேந்திரன்
என்னை மணந்து கொள்ள போகிறவர் ஆயிற்றே, அவர்
எப்படி இவள் ஆடையை... என்று எண்ணும்போதே,



இதே ரஞ்சிதாவின் ஆடையைப் பற்றி அவ்வப்போது
சுரேந்திரன் கொஞ்சம் மட்டமான ரசனையோடு வாணிப்
பது நினைவு வந்து நெஞ்சுக்குள் பிசைந்தது.

அவள் உள்ளூரத் திணறிக்கொண்டு இருக்கும்
போதே, ''ம்ம்... மறக்குமுன்னே கேட்டுவிடுகிறேன்.
உனக்கு 'பொக்கே' எல்லாம் ஒழுங்காக வந்துகொண்டு
இருக்கிறதா?'' என்று கேட்டாள் அந்த ரஞ்சிதா.

''அது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அனுப்புகிறவளே நான்தானே, எனக்குத் தெரியா
மல் எப்படி இருக்கும்?'' என்று பதில் கேள்வி
கேட்டவள், உடனே யூகித்து, ''ஓ, நீ என்ன சுரேனே
இதையெல்லாம் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார் என்றா
நினைத்தாய்? சரிதான், போ. பிறகு அவருக்கு நாள்
முழுவதும் அந்த வேலையே சரியாகிப் போய்விடும்.
பட்டியலில் உன் பெயரைச் சேர்த்துக் கொள்ளச்
சொல்லிவிட்டு அக்கடா என்று இருக்கிறார். எல்லாம்
நான் சரியாகவே பார்த்துக் கொள்ளுவேன் என்கிற
நம்பிக்கை!'' என்று பெருமையோடு சிரித்தாள் ரஞ்சிதா.

வயிற்றுக்குள் ஏதோ சங்கடம் செய்ய, ''எ... என்ன
பட்டியல்?'' என்று விசாரித்தாள் தாரிணி.

''அதுதான், ''பொக்கே'' அனுப்பப்பட வேண்டிய
பட்டியல். அவரவர்கள் பயன்படக்கூடிய காலம் வரை
அனுப்ப வேண்டுமே!''

''புரியவில்லை?'' என்றாள் தாரிணி சுருக்கமாக.

''ம்ம்...? முதல் பார்வையிலேயே இவள் கொஞ்சம்
மக்கு என்று நான் நினைத்தது சரியாகத்தான் இருக்
கிறது'' என்று தனக்குள் எண்ணுபவள் போல ரஞ்சிதா
தெளிவாகவே முணு முணுத்தாள்.

முகம் சிவக்க வெளியே செல்லத் தாரிணி திரும்பவும், ''புரியாத விவரம் தெரிந்து கொள்ள வேண்டாமா?'' என்று அவளை நிறுத்தினாள்.

தாரிணி திரும்பிப் பாராமலே நிற்கவும், ''ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கற, பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கற' என்று ஒரு பழமொழி உண்டல்லவா? அதைத்தான் சுரேன் டார்லிங் பின்பற்றுவது. ஆண்பிள்ளைகளின் கவனத்துக்காக அலைகிறவர்களுக்கு இந்த பொக்கே'' என்று விளக்கினாள் ரஞ்சிதா.

அவள் கொச்சைப்படுத்திய விதம் தாளாமல் ''அவர் என்னை மணம் புரியக் கேட்டிருக்கிறார். உண்மை தெரியாமல் உளற வேண்டாம்'' என்று கடுப்புடன் உரைத்தாள் தாரிணி.

ரஞ்சிதாவின் வாயை அடைப்பதற்காகத்தான் - அடைத்துவிடும் என்று நம்பித்தான் அவள் திருமணம் விவரம் சொன்னது.

ஆனால் சற்று முன்னே வந்து, அவளை விசித்திரமாக நோக்கிவிட்டு, ரஞ்சிதா விழுந்து விழுந்து சிரிக்கவும், நெஞ்சுக் கூடு காலியாவது போல உணர்ந்தாள் தாரிணி.

## 6

ரஞ்சிதா, விலாநோகச் சிரிப்பதைப் பார்த்துக் கொண்டு அங்கே நிற்கத் தாரிணிக்குச் சிறிதும் பிரியமில்லை.

ஆனால் வாயிற்புறமாக நின்று இரண்டாக உடைந்துவிடுவாள் போல விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டி



ருந்த ரஞ்சிதாவை இடித்துத் தள்ளாமல் வெளியே போவதும் சாத்தியமல்ல.

அத்தோடு இவளது சிரிப்பின் காரணத்தை - தன் திருமணத்தில் இவள் இப்படிச் சிரிக்க என்ன இருக்கிறது என்று அறிந்துகொள்ளாமல் அங்கிருந்து செல்லவும் அவளால் முடியவில்லை.

அதனால் ரஞ்சிதாவின் சிரிப்பைப் பல்லைக் கடித்து, சகித்துக் கொண்டு அசையாமல் அங்கேயே நின்றாள்.

அவளை அதிகம் வாட்டாமல் ரஞ்சிதாவும் சீக்கிரமாகவே சிரிப்பை அடக்கிக் கொண்டாள். வயிற்றைப் பிடித்துக்கொண்டு, ''சாரிம்மா, நான் இப்படி சிரித்திருக்கக் கூடாது. ஆனால் நீ சொன்ன விதத்தில்... அப்பாடி, நல்லா வேடிக்கையடா, அப்பா! ஆமாம், நீ என்ன அவர் பேச்சை அப்படியே நம்பிவிட்டாயா? பாவம்! பாரம்மா, அவருக்கு விளம்பரம் நன்றாக அமைய வேண்டும். அதற்கு, அதைத் தயாரிக்கும் உன்னை உச்சி குளிரச் செய்தாக வேண்டும். அதற்கு இதைவிட்டால் சிறந்த வழி வேறு இல்லை. அத்தோடு கணவன் - மனைவி என்று சென்றால் ஒரு அறை. வாடகை வேறு மிச்சம். வெளிநாட்டில் அது எவ்வளவு பணம் தெரியுமா?! கூடவே, உன்னையும் உரிமையோடு இரவு பகல் வேலை வாங்கலாம். ஆனால், சென்ற வேலை முடிந்த பிறகு அவர் திரும்பி வரப்போவது என்னிடம் தான்'' என்று மதர்ப்புடன் நிமிர்ந்து கூறினாள் அவள்.

''உன்... உன்னிடமா?'' என்றாள் தாரிணி மரியாதைப் பன்மையைக் கைவிட்டு. இவளுக்கெல்லாம் எதற்கு மரியாதை?

''ஆமாம் என்னிடமேதான்'' என்றாள் மற்றவள் வெகு அழுத்தம் திருத்தமாக. ''இந்த நிறுவனத்தில்



பணிபுரியவென்று அவர் வந்ததிலிருந்தே நாங்கள் காதலர்கள். ஒரு சின்ன சான்று தரட்டுமா? அன்று அவர் வீட்டுக்குக் காலைவேளையில் டெலிபோன் செய்தாயே, அப்போது அங்கே நான் எப்படி வந்தேன் என்று நினைக்கிறாய்? இரவே அழைத்துப் போய்விட்டார். விளையாட்டில் இரவு தூங்க ரொம்பவும் லேட்டாகிவிட்டது. காலையிலும் தாமதமாக விழித்து, அவசர அவசரமாகக் கிளம்பினால் அந்த வேளையில் நீ வேறு போன் செய்து கொஞ்ச நேரத்தை வீணாக்கி விட்டாய்!''

''பொய்!'' என்று கிறீச்சிட்டாள் தாரிணி. ''நீ சொல்வது முழுக்க முழுக்கப் பொய். நான் நம்பமாட்டேன். நீ சொல்வது மெய் என்றால் அவர் மற்ற பெண்களோடு பழகுவதை நீ எப்படிச் சகிக்க முடியும்? அதுபற்றி இவ்வளவு சாதாரணமாக எப்படிப் பேச முடியும்?'' குரல் நடுங்க வாதாடினாள் அவள்.

சற்றும் சலனமற்று, ''உண்மையான இந்தியப் பெண்ணின் இரத்தம் என் உடலில் ஓடுவதால்'' என்று அமைதியாகப் பதிலிறுத்தாள் ரஞ்சிதா ''பழைய மன்னர்களைப் பற்றிய சரித்திரம் படித்திருக்கிறாயா? அனேகமாக அத்தனை மன்னர்களுமே பலதாரம் கொண்டவர்கள்தான். உறவை வளர்க்க, எதிர்ப்பைத் தணிக்க விரோதிகளிடம் உறவாகிவிடாமல் தடுக்க என்று பலரை மணந்தார்கள். உண்மையான ஆசைக்கென்று ஒன்று இருப்பது கூட நிச்சயமில்லை. நூர்ஜகானை அவளுடைய கணவரிடமிருந்தே பிரித்துக் கொணர்ந்து மணந்த ஜகாங்கீருக்கு எத்தனை மனைவியர்? காதல் சின்னமாய் மும்தாஜுக்கென்று தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜகானுக்கு எத்தனை? நூர்ஜகானும் மும்தாஜும் அவரவர் கணவன்மாரை விட்டுப் பிரிந்து போகவா செய்தார்கள்? என் சுரேனும்தான் என்ன, வெறும் பெண்ணாசை பிடித்தா உங்களை எல்லாம் சுற்றுகிறார்?



''அவருக்கு வேலை நன்றாக நடக்க வேண்டும். மேனாவையும் பிரீதியையும் தட்டிக் கொடுத்தார். விளம்பர நாடகங்களில் என்ன அருமையாக நடிக்கிறார்கள்!

''உன்னைக் குளிர வைத்தார். ஒரு 'செட்' விளம்பரங்கள் ஓகோ என்று ஆகிவிடவில்லையா? இப்போது வெளிநாட்டு மார்க்கெட்டைப் பிடிக்கிற அளவு இன்னும் சிறந்த விளம்பரங்கள் வேண்டுமே! அதற்கு உன்னை நல்ல மூடில்தான் வைத்தாக வேண்டும். திருமணப் போர்வை இல்லாமல் இதற்குமேல் சரிப்படமாட்டாய் என்று நான்தான் யோசனை கொடுத்தேன்.

''அடுத்து சேர்மனுடைய மனைவி. மனோ மனோ என்று நன்றாகவே குழையடித்துவிட்டார். யாராவது சந்தேகமாய்ப் பார்த்தால் கூடப் படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்வார்கள். கூடப் படித்தவர்களை எல்லாம் இப்படி 'மனோ' என்று அழைக்க விட்டுவிடுவார்களா, அந்த அம்மாள்? என்று சற்றும் யோசியாமல் ஏமாறுகிற முட்டாள்கள் எத்தனை இல்லை! நம் சேர்மனோ அந்த ரகம்தானே!''

'ஏமாறுகிற முட்டாள்' என்ற தொடர் தாரிணியின் மனதில் வெகுவாகத் தைத்தது. சுரேந்திரனின் பேச்சை அவளும் நம்பிவிட்டாள் தானே. அப்படியானால் இந்தப் பட்டத்தையும் ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். ஆனால்...

''சேர்மனுடைய மனைவியால் சுரேந்திரனுக்கு என்ன காரியம் ஆகவேண்டும். மனோகரி சுரேந்திரனுக்காக என்ன வேலை செய்ய முடியுமாம்?'' என்றாள் தாரிணி, ரஞ்சிதாவை மடக்கிவிட்ட திருப்தியோடு.

''என்ன செய்ய முடியுமா? உங்கள் எல்லோரையும் விட, மனோகரியால் தான் சுரேனுக்கு மிகுந்த ஆதாயம்.

மனோ மனோ என்று சுற்றி வந்ததற்கு. அவள் சிபாரிசில்
எங்கள் சேர்மன், சுரேந்திரனை ஒரு டைரக்டர் ஆக்குகி
றார் தெரியுமா?'' என்றாள் ரஞ்சிதா பெருமையோடு.

ஒரு பெண்ணை மயக்கி, அதன்மூலம் பெரிய
பதவி அடைவது என்னவோ உன்னத விசயம் போலப்
பெருமைக் குரலில் பேசுகிறாளே என்று அருவெறுப்பு
டன் எண்ணும்போதே தாரிணிக்கு இன்னொன்று
நினைவு வந்தது.

அன்றைக்கு என்னை 'சப்ளை' செய்பவரைப்
பார்க்க வேண்டும் என்றாரே! விளம்பரம் தவிர மற்றதை
யும் கவனித்துக் கொள்ளும்படி சேர்மன் சொல்லியிருப்ப
தாகச் சுரேந்திரன் சொன்னாரே!

அப்படியென்றால் ரஞ்சிதா சொல்வது எல்லாம்
மெய்தானா?

ஆனால், திருமணம் பற்றிச் சொன்ன போது
மகிழ்ச்சி போலக் காட்டினாளே அந்த மனோகரி, ஊரை
ஏமாற்ற என்று அவளுக்கு ஒரு கணவன் இருப்பது
போல, சுரேந்திரனுக்கும் ஒரு மனைவி இருப்பது
நல்லது என்பதில் உண்டான மகிழ்ச்சியா? சேச்சே...
மனோகரியின் அந்தக் கம்பீரமான தோற்றத்துக்குள்
இப்படி ஓர் அழுக்கு இருப்பது எப்படி சாத்தியம்.
ஊகூம் இராது.

''இல்லை... உன்னை நான் நம்ப மாட்டேன்.
இரவில்.... இரவை உன்னோடு கழிப்பவர் காலையில்
மணம் புரியக் கோரி மலர்க் கொத்து அனுப்பமாட்டார்''
என்று அதிலேயே நின்றாள் தாரிணி.

''அவளை ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு, ''காலை
யில் டெலிபோன் செய்தவள், நேரேயே வந்திருந்தால்,
சத்தமில்லாமல் வந்து எட்டிப் பார்த்திருந்தால் இந்தப்



பேச்சைப் பேசவே இடம் இராது.... இல்லை.... அலுவல
கத்தில் கூடத் திடீரென்று வந்து பார்த்தால் தெரிந்துவிட்
டுப் போகிறது... ஆனால் ஏதாவது எக்கச்சக்கமான
நிலைமையில் யாராவது வந்து விடக்கூடாது என்றுதான்
முன் அனுமதி இல்லாமல் அங்கே எங்கள் அறைக்குள்
யாரையும் விடுவது கிடையாது'' என்று கூறினாள்
ரஞ்சிதா.

பிரியா நிறுவனத்துக்குச் செல்லும் போதெல்லாம்,
சுரேந்திரன் அவனது அறைக்குத் தாரிணியை அழைத்
துச் சென்றதே கிடையாது. 'என் அறையில் என்
காரியதரிசி இருப்பாள். ஏதாவது வேலை வரும்.
இங்கே என்றால் இடையூறு இல்லாமல் நிம்மதியாகப்
பேசலாம் என்று 'கூட்டமிடும்' அறையில்தான் அவளை
இருக்கச் சொல்லுவான். அவள் வந்திருக்கும் தகவல்
அறிந்ததும் உடனே அங்கே வந்துவிடுவான். கன்னம்,
கைவிரல் அழகு என்று ஐஸ் வைத்துவிட்டு, மிக
அருகிலேயே அமர்ந்து, அவள் கொண்டு வந்திருக்கும்
விளம்பர வரைபடங்கள், பத்திரிகை பட்டியல், பணக்
கணக்கு எல்லாம் பார்ப்பான்.

தன்னோடு தனிமையை நாடினான் என்று தாரிணி
நினைத்தது தவறா? அவனது அறைக்குள் நடப்பதைத்
தப்பித் தவறி அவள் அறிந்து கொள்ளக்கூடாது என்பதற்
காகத்தான் அப்படிச் செய்தானா?

மண்டைக்குள் புழு குடைவது போல உணர்ந்தாள்
தாரிணி. ஆனால் அந்தக் குழப்ப நிலையிலும் ஒரே
பிடிவாதமாய், ''இல்லை. நீ சொல்வது எல்லாம் பொய்.
நான் நம்பமாட்டேன்'' என்று அதையே தாரக மந்திரமா
கப் பற்றிக் கொண்டு நின்றாள்.

ரஞ்சிதா இன்னமும் நிமிர்ந்து, ''சரி. என் வார்த்
தையை நம்ப வேண்டாம். அவரிடமே கேளேன்.



தனியாகக் கேட்டால் ஏதாவது சொல்லி மழுப்பி
விடுவார். அதனால் என் முன்னிலையிலேயே அவரி
டம் கேளேன்'' என்று சவால்விட்டவள், 'அய்யோ'
என்று கையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.
''போச்சுடா... இதையெல்லாம் இப்போது நான் உன்னி
டம் சொல்லி இருக்கக் கூடாதே! இன்னமும் உன்
வேலை முடியவில்லையே! நீ பாட்டில் இடையில்
விட்டுவிட்டுப் போய்விட்டால் என்னிடம் கோபப்படு
வாரே...! ஆனால் நீ இதற்காக அப்...படி அவரை
விட்டுவிடவா போகிறாய்? எப்படியாவது அவரை
மயக்கிப் பிடித்துவிடலாம் என்று அவரைச் சுற்றத்தான்
போகிறாய். ஆனால் என்ன கேட்பதானாலும் நான்
இல்லாத போதே கேட்டுக் கொள்ளம்மா. அவருக்கு
வசதியானபடி உன்னிடம் விளக்கிக் கொள்ளட்டும்...''

அந்த வினாடியில் தாரிணி முடிவு செய்தாள்.
இவள் முன்நிலையில்தான் சுரேந்திரனிடம் கேட்க
வேண்டும். இவள் சொன்னதெல்லாம் பொய் என்று
சுரேந்திரன் சொல்லும்போது ஏளனமாய் இவளைப்
பார்த்துச் சிரிக்க வேண்டும்.... அப்படி இல்லாமல்
ஒருவேளை இவள் சொன்னதே மெய் என்று ஆனால்
அதற்குமேல் சுரேந்திரன் முகத்திலேயே விழிக்காமல்
விலகிவிட வேண்டும்!

ரஞ்சிதா இன்னமும் முடிக்கவில்லை. ''இப்போது
கச்சேரி கேட்க வருகிறாயா?'' என்றவளின் பார்வை
ஈரத்தில் சரிகை சுருங்கி, கசங்கிவிட்டிருந்த பட்டுச்
சேலையில் சிறு அருவெறுப்புடன் படிந்தது.

அவளது பார்வையைத் தொடர்ந்த தாரிணியின்
கண்களும் சேலையைத் தான் பார்த்துக் கொண்டிருந்
தன. இந்தச் சேலையை எவ்வளவு மகிழ்ச்சியோடு
அணிந்தாள்! கண்ணாடியில் எத்தனை முறை பார்த்துப்
பார்த்துப் பெருமிதப்பட்டாள். இப்போது...



சட்டென உள்ளூர ஒரு பயம் உண்டாயிற்று. இந்தச்
சேலை போல அவளது வாழ்வும் வீணாகிவிடுமோ?

சேச்சே. வீணாவானேன்? ஒருதரம் 'டிரைகிளீனிங்'
கொடுத்து வாங்கினால் சேலை நன்றாகிவிடப் போகி
றது. ஒருதரம் சுரேந்திரனோடு மனம் விட்டுப் பேசினால்
வாழ்வு நன்றாகிவிடப் போகிறது. இதற்குப் போய்க்
கலங்குவானேன்? என்று தனக்குத்தானே தேறுதல்
சொல்லிக் கொண்டாள் அவள்.

தான் அணிந்திருந்த சிபான் டிரஸ்சைப் பெருமை
யோடு ரஞ்சிதா பார்த்துக் கொள்வதைக் கவனித்த
தாரிணிக்கு, ஈரமும் கசங்கலுமாகச் சுரேந்திரன் அவ
ளைப் பார்க்க நேர்வது கொஞ்சமும் பிடிக்கவில்லை.
இவள் அருகில் ரொம்பவும் வித்தியாசமாகத் தெரியுமே!

எனவே, ''நான் வர நேரமாகும்'' என் முணுமுணுத்
தவள், ரஞ்சிதாவின் தலைமறைந்ததும் கிளம்பி அவளது
விடுதிக்கு சென்றுவிட்டாள்.

அன்றிரவில் அவள் கொஞ்சம்கூடத் தூங்கவே
இல்லை.

இந்த ரஞ்சிதாவின் பேச்சில் எந்த அளவு உண்மை
இருக்கக்கூடும்?

சுரேந்திரன் அவ்வப்போது, ரஞ்சி, ரஞ்சி என்று
குறிப்பிட்டுப் பேசியதையும், அவளது ஆடைகளையும்
அது வெளிப்படுத்திய அங்கலாவண்யங்களையும் பற்
றிப் பேசியதை நினைத்துப் பார்த்தால் எப்படியும்
அவர்களுக்குள் ஏதோ இருக்க வேண்டும் என்றே
தோன்றியது. ஒன்றுமே இல்லாமல் அவள் இவ்வளவு
தைரியமாகச் சொல்லுவாளா?

ஆனால் அவன் அவளை மணக்கக் கேட்டவன்.
ஒட்டி அமர்கையில், நெருங்கி நடக்கையில் ஏற்படும்

லேசான உரசல்களுக்குக் கூட ஏங்குகிறவன். அவள் திருமணத்துக்கு சம்மதித்து அன்று அணைத்ததை எண்ணுகையில், அவன் இன்னொரு பெண்ணைக் கருத்தால் நினைத்திருக்கக் கூடும் என்று கருதுவதே பிழைதான். ஆனால் ஆண்களைப் பற்றி - ஆண்களின் காதல் விவகாரங்கள் பற்றி அவளுக்கு என்ன தெரியும்?

திடுமென இன்னோர் எண்ணம் தோன்றித் தாரிணியை உலுக்கியது. இவள்பாட்டில் காதல், கல்யாணம் என்று பெற்றோருக்கு எழுதிவிட்டாளே! அவர்கள் அந்தப் பூரிப்பில் அக்கம் பக்கத்தவருக்குச் சொல்லியிருந்தால்? ஒருவேளை திருமணம் இல்லை என்று சொல்ல நேர்ந்தால் மற்றவர்கள் முகத்தில் விழிப்பது எப்படி? எவ்வளவு அவமானமாய் இருக்கும்!

ஆனால் உள்ளூர ஒரு சின்ன ஆறுதல். அவளுடைய தகப்பனார், அவர் வந்து சுரேந்திரனைப் பார்த்துப் பேசிய பிறகுதான் திருமண ஏற்பாடுகள் என்று எழுதியிருந்தார். எனவே அனேகமாக வெளியே சொல்லியிருக்க மாட்டார்கள்... ஏன் இப்படித் தோல்வியையே நினைக்கிறோம் என்று எரிச்சலும் வந்தது.

பொறுமை இழந்தாற்போலச் சித்ரா மீண்டும் தாரிணியின் பேச்சில் குறுக்கிட்டாள். ''கடைசியாக நீ மிஸ்டர் சுரேந்திரனைப் போய்ப் பார்த்தாயா?'' என்று சிறு கவலையுடன் வினவினாள்.

''போனேன், போனேன். போய் எல்லாம் நன்றாகவே பார்த்தேன்'' என்றாள் தாரிணி வெறுப்புடன்.

தலையைச் சரித்து தோழியின் முகத்தை உற்றுப் பார்த்தாள் சித்ரா. ''ஆக நீ அவரிடம் தனியாகப் போகவில்லை என்று சொல்லு!''



''ஏன்? தனியாகத்தான் போனேன்! இதற்கெல்லாம் வேறு யாரைத் துணை சேர்க்க முடியும்?'' என்று கேட்டாள் தாரிணி.

''நிஜமாகவே தனியாகவா! வழக்கமாக உன்னோடு வருவார்களே - கோரைப்பல்லும் ஈர்க்குச்சி மயிரும் ஒட்டைக கண்ணுமாக, அந்தச் சந்தேகப் பிசாசு, பொறாமைப் பேய் என்று ஒருவர் கூடவா வரவில்லை?'' என்று சித்ரா விழிகளை விரிக்கவும் தாரிணிக்குக் கோபம் வந்தது.

''நீ என்ன, என்னைப் பொறாமை பிடித்தவள் என்கிறாயா?'' என்றாள் ஆத்திரமாக.

''பின் என்ன? இவ்வளவு நேரக்கதையில் நீ ஒருதரம் கூட அவனை முழுமையாக நம்பிப் பேசவில்லையே! கன்னத்தில் பருவைக் கண்டுபிடித்தால் உறுத்தல், யாராவது அழகாய் இருப்பதாக அவர் சொன்னால் எரிச்சல், வீட்டில் வேலை செய்யக் காரியதரிசி வந்தால் சந்தேகம். சேர்மன் மனைவியை நம்பவில்லை! மெய்யாகத்தான் கேட்கிறேன். ஊரில் உள்ள பெண்கள் எல்லாம் மயங்கிக் காலடியில் விழுவதற்கு உன் சுரேந்திரன் என்ன, உலகமகா மதனகாமராஜனா? சரி சரி, மேலே சொல்லு. என்னவோ நேருக்கு நேர் விசாரிக்கவாவது உனக்குத் தோன்றியதே! சொல்லு. அங்கே என்ன நடந்தது?'' என்று விசாரித்தாள் சித்ரா.

''என் தலையில் இடி விழுந்தது'' என்றாள் தாரிணி சுருக்கமாக.

சினேகிதியின் முகத்திலிருந்த வேதனையைக் கண்டதும், சித்ரா தன் கோபத்தையும் கேலியையும் கைவிட்டு, ''என்னப்பா, என்ன ஆயிற்று?'' என்று கவலையுடன் கேட்டாள்.



''ரஞ்சிதாவையும் சேர்த்து வைத்துக் கொண்டு சுரேந்திரனிடம் பேசினால்தான் குழப்பம் அடியோடு தீரும் என்று எனக்குத் தோன்றியது. எனவே சுரேந்திரனின் அலுவலகத்துக்குப் போனேன். வழக்கம் போலக் கீழே கூட்டம் நடைபெறும் அறையில் உட்கார்ந்து கொண்டு செய்தி அனுப்பாமல் மேலே அவர் அறைக்கே சென்றேன். அவள்... ரஞ்சிதா சொன்னது போலவே அங்கே அவர் அறைக்குள் போகக்கூடாது என்று தடுத்தார்கள். நான் பிடிவாதமாய்க் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே சென்றேன். அங்கே... அங்கே அவர் அந்த ரஞ்சிதாவைக் கட்டிப்பிடித்தபடி நின்றுகொண்டிருந்தார்!''

அந்தக் காட்சியை அப்போதும் மணக்கண்ணால் காண்பவள் போலத் தாரிணியின் முகம் கலங்கியது.

''இந்தக் கேள்வியைக் கேட்க எனக்கே பிடிக்கவில்லைதான். ஆனாலும் நன்றாக யோசித்துச் சொல்லு, தரும்மா. அங்கே சுரேந்திரன் ரஞ்சிதாவை அணைத்துக் கொண்டு நின்றாரா... அல்லது அவள் அவரை அணைத்திருந்தாளா?''

''எனக்கும் இதே எண்ணம் தோன்றத்தான் செய்தது, சித்ரா. எனவே ஒருமுறைக்கு இருமுறையாக அந்தக் கண்ணராவியை நன்றாகவே பார்த்தேன். சுரேந்திரன் ரஞ்சிதாவை அணைத்துக் கொண்டு நின்றார். அவள், அவர் தோளில் சொகுசாகச் சாய்ந்து கொண்டிருந்தாள்'' என்று வேதனைக் குரலில் உரைத்தாள் தாரிணி.



## 7

சற்று நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

அந்த நிலையைக் கலைப்பது போல யாரோ வாடிக்கையாளர்கள் வந்தார்கள். நடுத்தரமான மூன்று விற்பனைகள் நடந்தன.

ஆனால், மூன்றாவது விற்பனை முடிந்து, வாங்கியவர்கள் வெளியே சென்றதும் 'சட்டரை' இழுத்துவிட்டுக் கதவை மூடினாள் சித்ரா.

ஏன் என்பது போல் நோக்கிய தாரிணியிடம், ''போதும் இன்றைய வருமானம் போதும். ஆனால்... தாரிணி, நீ என்னைத் தயவு செய்து மன்னித்து விடுகிறாயா? உன்மேல் அனாவசியமாகக் கோபப்பட்டேனே. நீயாக, மட்டித்தனமாய் உன் வாழ்க்கையை அழித்துக் கொள்கிறாயோ என்று அந்த ஆத்திரத்தில் பேசிவிட்டேன். இப்படி என்று தெரியாது. சாரி.'' என்று மன்னிப்புக் கேட்டாள்.

''நமக்குள், என்னப்பா.'' என்று பெரிய மனதோடு அதை ஒதுக்கி விட்டாள், தாரிணி.

மீண்டும் ஓர் அமைதிக்குப் பிறகு, ''அவர்கள் இரண்டு பேரையும் நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி நாலு வார்த்தையேனும் கேட்டாயில்லையா, தரு?'' என்று விசாரித்தாள் சித்ரா.

இல்லை என்று தலையசைத்தாள் தாரிணி. ''அவர்கள் இருவரையும் அந்த நிலையில் பார்த்த அதிர்ச்சியை என்னால் தாங்கவே முடியவில்லை. ஒரு கோழையைப்

போல ஓடிவந்து விட்டேன். முக்கியமாய் அந்த
ரஞ்சிதாவின் வெற்றிப் பார்வையை என்னால் தாங்க
முடியாது போல இருந்ததில் ஊரைவிட்டே ஓடிவந்து
விட்டேன். அப்பாதான் சென்னை சென்று அலுவலகத்
தில் கணக்கு முடித்து, விடுதி அறையையும் காலி
பண்ணிக் கொண்டு வந்தார். மதுரையில் அம்மா
அப்பாவோடு இருக்கக்கூட மனம் வராமல், நான்
எங்கிருக்கிறேன் என்று யாரிடமும் சொல்லக்கூடாது
என்று அப்பா அம்மாவிடம் வாக்கு வாங்கிக் கொண்டு,
இங்கே, உன்னிடம் வந்து சேர்ந்தேன். இங்கே இந்த
இயற்கை அழகும், உன் அன்புமாக இந்த இரண்டு
ஆண்டுகளாக ஒருவாறு நிம்மதியாக காலம் செல்கிறது.
இப்போது தெரிகிறதா, நன்றி சொல்வது என்றால்
நான்தான் உனக்கு அதைச் சொல்லவேண்டும் என்று''
என்று கூறி முயன்று முறுவலித்தாள் தாரிணி.

''அதைவிடு'' என்று ஒதுக்கிவிட்டுச் சித்ரா சொன்னாள். ''தரு, இது உனக்கு ஒரு கெட்ட சேதி என்று நினைக்கிறேன். சுரேந்திரன் இனி இங்கேதான் வசிக்கப் போகிறார் என்று நினைக்கிறேன். வீடு தயாரானதும் இந்தக் கட்டில், சோபா எல்லாம் எடுத்துப் போவதாகச் சொன்னார்.

''இங்கே தங்கினால் அவர் வேலை என்ன ஆவது? என்னென்னவோ கஷ்டப்பட்டு டைரக்டராக வளர்ந்த வர் அதை விடுவாரா? ஊகூம். ஒரு வேளை சின்னவிடு 'செட்டப்' செய்கிறாரோ என்னவோ!'' என்றாள் தாரிணி வெறுப்புடன்.

''எப்படியும் உன்னைச் சந்திக்க முயற்சி செய்வார்
என்று நினைக்கிறேன். இங்கே தன்சாமான்களைப்
பார்க்க என்று வருவதே அதற்காகத்தான் இருக்க
வேண்டும். கடையின் பின் தெருவிலேயே வீடு என்பது



தெரிய நாளாகாது. அங்கேயும் உன்னைத் தேடி வரலாம்'' என்றாள் சித்ரா. ''ஆனால்... இன்னமும் அவர் உன்னைத் தேடுவதும் ஆச்சரியம்தான். ஏன் தேடுகிறார்?''

உதாசீனமாகத் தோளைக் குலுக்கினாள் தாரிணி. ''அவரது வலையில் இருந்து ஒரு மீன் தப்பிச் சென்றது அவரது ஆண்மைக்கு எவ்வளவு பெரிய அடியாக இருந்திருக்கும்! அதனால் மீண்டும் முயற்சிக்கிறாரோ, என்னவோ? வரட்டும் வரட்டும். வந்து பார்த்து ஏமாந்துவிட்டுப் போகட்டும். எப்படியும் ஒரு நாலைந்து நாளைக்கு மேல் இங்கே தங்க அவரால் முடியாது. அதுவரை நீ 'சீசன்' சமயம் மாதிரி ருக்மிணியைகூட வைத்துக் கொண்டு சமாளிக்கிறாயா, சித்ரா. என்னவோ எனக்கு இன்னமும் அவர் முகத்தைப் பார்த்துப் பேச... பேசப் பிடிக்கவில்லை. அதனால் காலையிலேயே 'வாக்கிங்' கிளம்பி, எங்கேயாவது பார்க், ஓட்டலில் உட்கார்ந்திருந்து விட்டு அந்தி சாய்ந்ததும் திரும்பி வருகிறேனே.''

கெஞ்சுவது போலக் கேட்ட தோழியைப் பார்க்கையில் சித்ராவுக்கு உள்ளே வலித்தது.

''உன் விருப்பம் போலச் செய்யப்பா...'' என்று ஒத்துக் கொண்டாள்.

இந்த சுரேந்திரன் திரும்பவும் வந்தால் நார் நாராய்க் கிழிக்க வேண்டும் என்று வேகத்தோடு நினைத்தவள் அதே வேகத்தோடு அந்த எண்ணத்தை அடக்கிக் கொண்டாள். தாரிணி இங்கே இருப்பதை வெளிக் காட்டாமல் அவனை நார்நாராகக் கிழிப்பது எப்படி?

அவனிடம் பழைய மாதிரி சிரித்துப் பேசுவதும் கடினம் தான்.



சித்ராவை அதிகம் சங்கடப்பட வைக்காமல் இரண்டே நாட்களில், வீடு தயாராகிவிட்டது என்று தன் சாமான்களை எடுத்துச் சென்றுவிட்டான் சுரேந்திரன், வீடு எங்கே என்ற விவரம் கேட்கக்கூட மனமற்றுப் பேசாதிருந்து விட்டாள் அவள்.

ஆனால், ''என் சாமான்களைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டதற்காக உங்களுக்கும், உங்கள் தோழி, கண்ணுக்குப் புலப்படாத அந்த மாய மங்கைக் கும் என் நன்றி'' என்று அவன் கூறியபோது அவளால் சிரிக்காமல் இருக்கவும் முடியவில்லை.

கொடைக்கானலில் காலாற நடந்து செல்ல, இடங்களுக்குப் பஞ்சமே கிடையாது. கால்போன போக்கில் நடந்தாலே கண்ணுக்குக் குளிர்ச்சிதான். சுரேந்திரனின் காரை அல்லது அவனைக் கண்டால் ஒதுங்கிக் கொள்ளும் கவனம் தவிர மற்றபடி இந்தத் தடைகள் தாரிணிக்கு நன்றாகத்தான் இருந்தன.

அன்று கொடைக்கானல் ஏரியைச் சுற்றி நடந்து கொண்டிருந்தாள் தாரிணி.

சற்று மூத்த ஜோடி ஒன்று, படகில் நன்றாகச் சுற்றிவிட்டுக் கரையிறங்கி வந்துகொண்டு இருந்தார்கள். அதிக நேரம் ஒரு நிலையில் இருந்ததாலோ அல்லது கால் மூட்டில் ஏதும் தொல்லையோ கொஞ்சம் சமாளித்தே நடக்கத் தொடங்கிய அந்தப் பெண்மணி, திடீரென்று கால் மடங்கிச் சரியலானார்.

இரண்டுஎட்டு முன்னே நடந்து கொண்டிருந்த பெரியவர் திரும்புமுன், தாரிணி பாய்ந்து சென்று அந்தப் பெண்மணி விழுந்துவிடாமல் தாங்கிப் பிடித்து மெல்ல உட்காரவைத்தாள்.



ஆனால் தன்னைக் கவனிப்பதைவிட, ''என்ன என்ன?'' என்று பதறிய பெரியவரைச் சமாதானம் செய்வதையே முதன்மையாகக் கருதி அந்த அம்மாள் செயலாற்றுவதை வியப்புடன் கண்டாள் தாரிணி.

''ஒன்றும் இல்லை. ஒரு சின்னக்கல்லில் காலை வைத்துவிட்டேன். இவ்வளவு நேரம் ஒரே மாதிரி உட்கார்ந்திருந்தது வேறு கால் மரத்துவிட்டது என்று நினைக்கிறேன். கொஞ்சம் தடவி விட்டால் சரியாகிவிடும்... அய்யோ, விடுங்கள். நானே தடவிக்கொள்வேன்'' என்று அருகே அமர்ந்து, சிறிதும் தயக்கமின்றித் தன் காலைப் பிடிக்க வந்தவரைக் கூச்சத்துடன் தடுத்தார் அந்தப் பெண்மணி.

''ஏன், எனக்குக் கால் வலித்தால் நீ உருவி விடுவதில்லையா? மனைவிக்குக் கணவன் செய்வதில் மட்டும் என்ன கூச்சம் சுசி?'' என்று பிடிவாதமாய் மனைவியின் காலை முழங்காலிலிருந்து பிடித்து விடலானார் கணவர்.

இந்த அன்னியோன்னியத்தில் குறுக்கிட விருப்பமின்றி, முறுவலித்தவாறே தன் நடையைத் தொடரலானாள் தாரிணி.

''ஊகூம் கொஞ்சம் நில்லம்மா. நான் விழுந்துவிடாமல் காப்பாற்றியதற்கு நன்றிகூடச் சொல்லாமல் இருந்து விட்டேன். ரொம்ப 'நன்றி' மா.'' என்றார் அந்த 'சுசி.'

நின்று, ''நான் என்ன செய்தேன். நீங்களேதான் கிட்டத்தட்ட சமாளித்து விட்டீர்களே?'' என்று புன்னகை செய்தாள் தாரிணி.

''அழகாய்ப் பேசி அழகாய்ச் சிரிக்கிறாயம்மா'' என்று பாராட்டிவிட்டு, ''இது உன் ஊரா, அல்லது டூரிஸ்டா?'' என்று வினவினார் பெரியவர்.

இருவரும் நின்றுகொண்டிருக்கும் அவளை அண்ணாந்து பார்த்துப் பேசுவதை உணர்ந்து, அருகே மண்டியிட்டு, ''நான் வசிப்பது இங்கேதான். நீங்கள்? சுற்றிப்பார்க்க வந்தவர்களா?'' என்று பேச்சுக் கொடுத்தாள் தாரிணியும்...

பொதுவாகத் தாரிணி, சித்ரா போலப் புதியவர் பழகியவர் என்கிற பாகுபாடின்றி எல்லோரிடமும் கலகலப்பாய்ப் பழகுகிறவள் இல்லை. ஆனால், ஏனோ இந்தப் பெரியவர்களிடம் நெடுநாள் பழகியவர்கள் போல ஓர் உணர்வு உண்டாகிவிடத் தயங்காமல் பேசிப் பழகினாள்.

அவர்களும் ஒதுக்கம் காட்டவில்லை. பெரியவர் பெயர் சிவஞானம். மனைவி சுசீலா. ஆந்திராவில், சிறு அளவில் தொழில் தொடங்கி, நியாயமான வழியில் சென்று, நிதானமாக முன்னேறியவராம். சமீபத்தில் ஒரு 'மாரடைப்பு' வந்துவிட்டது. ஆந்திர வெயில் இனி இவருக்கு ஒத்துவராது என்று, மனைவியும் பிள்ளையுமாக இந்தக் கொடைக்கானலின் இதக்குளிருக்கு அவரை இழுத்து வந்துவிட்டனர். இவர்கள் இருவர் கையிலுமாக அவர் என்ன பாடுபடப் போகிறாரோ!

''அப்பாடியோவ்! பரமசாது, அப்படித்தான் எங்களிடம் படாதபாடு பட்டுவிடப் போகிறீர்கள் எங்களைப் படுத்தி வைக்காமல் இருந்தால் போதாதாக்கும்!'' என்று பதில் கொடுத்தார் சுசீலா. ''இப்போதுகூடப் பாரம்மா, பேசாமல் ஓட்டல் அறையில் ஓய்வு எடுங்கள். நான் கொஞ்சம் வேலை பார்த்துவிட்டு வருகிறேன் என்று பையன் அந்தப் பக்கம் கிளம்பினால், போட்டிங் போகலாம் என்று இங்கே இழுத்து வந்துவிட்டார்.'' என்று தாரிணியிடம் முறையிட்டார்.



''வந்த இடத்தில் விழுந்துகிடப்பது யாராம்? ஓய்வு எடுக்க வேண்டியநிலையில் இருப்பது இவளா, நானா? சொல்லம்மா'' என்றார் சிவஞானம்.

அம்மாவும் அப்பாவும்கூட இப்படித் தான் கேலியும் கிண்டலுமாகப் பேசிக் கொள்ளுவார்கள். அதனால் தான் இவர்களைப் பார்க்கையில் பழகியவர்கள் போல் தோன்றுகிறதோ?

''நீதான் சொல்லம்மா'' என்று சுசீலாவும் கேட்கவும், சிரித்து, ''ஒரு மாரடைப்பு'' வந்தால் கொஞ்ச நாள் 'அங்கிள்' வாழ்க்கையைச் சற்று இலகுவாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அங்கிளின் நோயால் மனதாலும், இந்த அலைச்சலால் உடலாலும் களைத்திருக்கும் நீங்களும் ஓய்வு எடுக்க வேண்டியவர்கள் தான்.'' என்று தீர்ப்புக் கூறினாள் தாரிணி.

''அப்படிச் சொல்லு... உன் பெயர் என்னம்மா? அதைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் இவ்வளவு நேரம் உன்னைப் போரடித்திருக்கிறோம் பார்'' என்று சிரித்தார் சுசீலா...

தாரிணியின் பெயரை அறிந்ததும், சற்று யோசித்து, ''கல்கியின் அலைஓசையில் தாரிணி என்று ஒரு பெண் - நல்ல பாசமான பெண் ஒருத்தி வருவாள். குணத்தில் நீயும் அவளைத்தான் கொண்டிருக்கிறாய் என்று தோன்றுகிறது... கிளம்புவோமா? ஆனால் தனியாகப் போக வேண்டும்...'' என்று இழுத்தார் சுசீலா.

''ஏன், அதற்கென்ன? உனக்குத் துணை நான் இல்லையா?'' என்ற பெரியவரை இடைமறித்து, ''வாருங்கள், நான் உங்களைக் கொண்டுவிட்டு விட்டுப் போகிறேன். வீடு பக்கத்தில்தானா, அல்லது ஆட்டோ பிடிக்க வேண்டுமா?'' என்று கேட்டாள் தாரிணி.



''இப்போதைய வாசம் ஓட்டலில் தான். வீடு ரெடியாகிக் கொண்டு இருக்கிறது. நீ எங்கள் வீட்டுக்கும் வரவேண்டும் தாரிணி'' என்றார் சுசீலா. ஓட்டல் சென்ற பிறகும், புதுவீடு போன பிறகும் அங்கே கட்டாயமாய் அவள் வந்தே ஆகவேண்டும் என்று வெகுவாக அவளை அழைத்து, அவள் சம்மதித்த பிறகே அவளுக்கு விடை கொடுத்தனர்.

மறுநாள் படகுத்துறையிலேயே மீண்டும் சந்தித்த போது, ''நாளை வீட்டுக்குக் குடிபோகிறோம், தாரிணி. நீ காலையிலேயே கட்டாயம் வரவேண்டும்...'' என்று மறுபடியும் அழைத்தனர்.

காலையில் என்றால் இவர்களுடைய மகன், இன்னும் யார் யார் இருப்பார்களோ என்று உள்ளூரத் தயங்கினாள் தாரிணி. அன்பாக அழைப்பவர்களின் மனதை நோகடிக்கவும் விரும்பாமல், ''காலையில் வர முடியுமோ என்னவோ? ஆனால் எப்படியும் நாளைக்குக் கட்டாயம் வருகிறேன்'' என்று வாக்குக் கொடுத்தாள். மகன் வேலைக்குப் போனதாக சுசீலா சொன்ன நினைவில், எப்படியும் பத்து மணிக்கு அந்த மகன் வேலைக்குப் போய்விடுவார். அதன் பிறகு போகலாம் என்று முடிவு செய்தாள்.

அதன்படி சுமார் பதினோரு மணி அளவில் அவர்கள் கொடுத்த முகவரிக்குச் சென்று வீட்டினுள் சென்றவளுக்கு முதல் அதிர்ச்சி அந்த வீட்டின் முன் அறையில் ஏற்பட்டது.

அவர்கள் கடையில் சுரேந்திரன் வாங்கிய சோபா செட் அந்த அறையில் போடப்பட்டிருந்தது!

ஒரு கணம் பிரமித்து நின்றவளுக்கு உடனேயே எல்லாம் புரிபட்டுப் போயிற்று. இது சுரேந்திரனின் வீடு. இந்த அருமையான மனிதர்கள் சுரேந்திரனுடைய பெற்



றோர். அவர்கள் பழகியவர்கள் போலத் தோன்றக் காரணம் சுரேந்திரனின் சாயல், அங்க அசைவுகளின் பாணியை அவள் அவர்களிடம் கண்டதுதான்!

என்ன அருமையான, அன்னியோன்னியமான தம்பதிகளுக்கு இப்படி ஒரு மகன் என்று எண்ணமிட்ட போது, தாரிணி அடுத்த அதிர்ச்சிக்கு ஆளானாள்.

மின்னலாய் அவளது இதயத்தைத் தாக்கி, அங்கே இருப்பதைத் துலாம்பரமாய்க் காட்டிய அதன் வெளிச்சத்தில் தாரிணி திக்குமுக்காடிப் போனாள்.

இந்த இரண்டு ஆண்டுகளாக சுரேந்திரனை அடியோடு வெறுத்து விட்டதாக அவள் எண்ணியிருந்தது ஒரு பெரும் பொய்! அவனை அவள் வெறுத்திருந்தால், அவனது சாயலையும் பழக்கங்களையும் இந்தப் பெரியவர்களிடம் கண்டதுமே இவர்களிடமும் அவளுக்கு வெறுப்பு அல்லவா ஏற்பட்டிருக்க வேண்டும்? நேர்மாறாகப் பெற்ற தாய் தந்தையோடு ஒப்பிட்டுப் பார்த்து அன்பு செலுத்தத் தோன்றியது என்றால் அதற்கு இருப்பது ஒரே ஓர் அர்த்தம்தானே? அவளது முட்டாள் மனது அந்த ஒழுக்கம் கெட்ட மனிதனின் மேல் வைத்த காதல் கொஞ்சம்கூடக் குறையாமல் அப்படியேதான் இருக்கிறது. கொஞ்சமும் வெட்கமில்லாமல் அவள் அவனுக்காக ஏங்கிக் கொண்டு இருக்கிறாள் என்பது தானே?

என்ன அநியாயம்! எவ்வளவு அவமானம்!

இத்தோடு தீராமல், இன்னும் அடுத்ததாக ஓர் அதிர்ச்சியும் அவளுக்காகக் காத்திருந்தது.

எதுவும் மூன்றாய்த் தொடர்ந்து வரும், அதிலும் துன்பங்கள் நிச்சயமாய் அப்படித்தான் எனும் சித்ராவின் நம்பிக்கையை மெய்ப்பிப்பது போல மூன்றாவது அதிர்ச்சியாகச் சுரேந்திரனே அங்கு வந்து நின்றான்.

# 8

ஏவன் முகத்தில் இனி விழிப்பதே கூடாது என்று ஓடி ஒளிந்தாளோ, அவனே எதிரில் வந்து நிற்கவும் தாரிணிக்கு ஒன்றும் ஓடவில்லை.

சற்று முன், முகம் மலர்ந்து வரவேற்ற சுசீலா உட்காரச் சொன்னது மறந்து போயிற்று. எதுவும் செய்யத்• தோன்றாமல் அப்படியே நின்றாள்.

மகனையும் தாரிணியையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்துவிட்டு, ''என்னம்மா, நிற்பானேன்? உட்காருவதுதானே?'' என்று மீண்டும் உபசரித்தார் சுசீலா.

''இ... இல்லை... இந்த சோ... சோபா பார்த்தேன்...'' என்று ஒருவாறு சமாளித்தாள் தாரிணி.

''நன்றாயிருக்கிறதில்லை? விலைதான் கொஞ்சம் அதிகம் கொடுத்திருக்கிறான். ஆனால் மர வேலைப் பாடு, குஷன் கவரில் பூ வேலை எல்லாம் ரொம்பவும் அழகு'' என்று விசயம் புரியாமல் அவளிடமே விவரித்தார் சுசீலா.

''அம்மா'' என்று குறுக்கிட்டான் மைந்தன். ''இவர்கள் இப்போதுதான் வந்தார்களா? புது வீட்டுக்குக் காலையில் காய்ச்சிய பால் கொடுத்தீர்களா?'' என்று விசாரித்தான்.

''இதோ, எடுக்கத்தான் திரும்பினேன். அதற்குள் நீயும் வந்துவிட்டாய். உனக்கு இன்னொரு தம்ளர் வேண்டுமா? பால்தானே, கூடச்சேர்ந்து ஓர் அரை கப்



குடியேன்'' என்றபடி பாலை எடுத்துவர உள்ளே சென்றார் அன்னை.

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள் தாரிணி.

''அப்போதிருந்து கொடைக்கானலில்தான் வாசமா?'' என்று தாழ்ந்த குரலில் வினவினான் சுரேந்திரன்.

செவியில் விழாதது போலத் தாரிணி நிற்கவும், குரல் மாற, ''அம்மா சொன்னது போல, சோபா விலை அதிகம்தான். சரிபாதி அதிகம். தோழியும் நானும் சம பங்கு என்றாளா, சரி. பாதிப் பணம் தாரிணிக்கும் போகட்டுமே என்று பேரம் பேசாமல் கொடுத்துவிட்டேன். எனக்குத் தாராள மனம்தானே?'' என்று முறுவல் செய்தான் அவன்.

சட்டெனா வாய்ப்பூட்டு அகன்றார் போல, ''தர்ம தாதா!'' என்றாள் தாரிணி துடுக்காக.

''நிச்சயமாக!'' என்றான் அவன் விழிகள் பளிச்சிட. ''இந்தப் பணம் மட்டுமல்ல, உனக்கு என்னென்னவோ வழங்க நான் தயார்'' என்றான் அவன்.

''உம்?''

''ஆமாம். முதலாவதாக ஒரு தாலி!''

''அதை வாங்கிக்கொள்ளத் தயாராகக் கழுத்தை நீட்டிக்கொண்டு இருக்கிற கழுதைகளில் உங்களுக்கு ஏற்ற ஒன்றின் கழுத்தில் கட்டுங்கள்'' என்று எடுத்தெறிந்து பேசினாள் அவள்.

''கட்டலாம் என்றுதான் பார்த்தேன். ஆனால் முதலில் கழுத்தை நீட்டிக் கொண்ட கழுதை திடீரென்று இழுத்துக்கொண்டுவிட்டது. கழுத்தில் சுளுக்கோ என்னவோ?''



''நான் ஒன்றும் கழுதை இல்லை!''

''பின்னே நான் மட்டும் கழுதையா? எனக்கு ஏற்றாற்போல் என்றாயே!'' என்றவன், அன்னை வரும் அரவம் கேட்கவும், ''இப்போது 'பிரியா' சோப் கம்பெனியின் முக்கிய பங்குதாரர்களில் நானும் ஒருவன். தயாரிப்பு, நிர்வாகம் போன்றவற்றை எங்கள் சேர்மன் கவனிப்பார். விளம்பரம், விற்பனை முக்கியமாக வெளிநாட்டு விற்பனை என் பொறுப்பு'' என்று பொதுவாகப் பேசிக்கொண்டு இருப்பது போலத் தன்னைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தான் சுரேந்திரன்.

''இந்தாம்மா, குடி'' என்று காய்ச்சிய பசும்பாலில் சர்க்கரையும் தேங்காய்ப் பாலும் கலந்து வந்து கொடுத்தார் சுசீலா.

''தாரிணி, நீங்கள்... எப்படியும் என்னைவிட ஏழெட்டு வயது குறைவாகத்தான் இருக்கும். அதனால் இந்த நீங்கள் வாங்களை விட்டு விடலாமில்லையா? அல்லது உங்களுக்குப் பந்தா காட்டுவதுதான் பிடிக்குமா?'' என்று சுரேந்திரன் கேட்கவும், ''சேச்சே. தாரிணி ரொம்பவும் நல்ல பெண்ணடா. பந்தாவும் கிடையாது. பிகுவும் கிடையாது'' என்றார் தாயார்.

உள்ளூரப் புகைந்தபடியே, ''பந்தாவெல்லாம் வேண்டாம், சார்'' என்றாள் தாரிணி.

''ஊகூம். இந்த சார் மோரும் வேண்டாம், தாரிணி. வெறும் சுரேந்திரன் போதும். அம்மா மாதிரி 'சுரேன்' என்றாலும் எனக்குச் சம்மதமே. சுரேந்தர் அதைவிடப் பிரமாதம். ஆமாம், இங்கே உன் வீடு எங்கே இருக்கிறது?'' என்று விசாரித்தான் சுரேந்திரன்.

கையிலிருந்த பானம் மிகவும் சுவையாக இருந்தது. ஆனால் அதை மெல்ல, ரசித்து அருந்துவதானால்



இவனது கேள்விகளுக்கும் பதில் சொல்லியாக வேண்டும். எனவே அவசரமாக ஒரே மடக்கில் அதைக் குடித்துவிட்டு எழுந்தாள் தாரிணி. ''நான் அவசரமாகப் போக வேண்டும், ஆன்ட்டி'' என்று கிளம்பினாள்.

''அவசரமாக என்றால் நான் காரில் அழைத்துப் போய் உன் வீட்டில் விட்டு விடுகிறேனே'' என்று தானும் எழுந்தான் சுரேந்திரன்.

''இல்லையில்லை. உங்களுக்கு ஏன் வீண் சிரமம்'' என்று அவளும், ''இல்லையில்லை, சிரமமே கிடையாது. கார்தானே சுமக்கப் போகிறது'' என்று அவனும் சற்று நேரம் வாதாடினார்கள்.

இவன் தாயாரின் முன்னிலையில். அவன் முகத்தில் அடித்தாற்போலப் பேச அவளால் முடியாது என்ற தைரியத்தில் அல்லவா வம்பு செய்கிறான்!

அந்த அம்மாளின் கண்காணாமல் பல்லைக் கடித்தாள் தாரிணி.

புன்னகை விரிய, ''என்னோடு வரக் கொஞ்சம் கூடப் பயப்பட வேண்டாம் தாரிணி. நான் ரொம்பவும் நல்லபிள்ளை. வேண்டுமானால் என் அம்மாவைக் கேளுங்கள்'' என்று தாயாரைச் சிபாரிசுக்கு இழுத்தான் சுரேந்திரன்.

''எல்லா அம்மாக்களுக்கும் அவரவர் பிள்ளைகள் நல்ல பிள்ளைகள்தான்!'' என்று தன்னைமீறிச் சொல்லிவிட்டு, சுசிலாவின் விழிகள் விரியவும், ''இல்லையம்மா, நான் கடைக்குக் கொள்முதலுக்காகப் பக்கத்தில் ஓர் இடத்துக்குப் போகப் போகிறேன். இரண்டே நிமிட நேர நடை. இதற்குக் கார் அவசியமில்லை என்றால், ஒத்துக் கொள்ளாமல் உங்கள் மகன் உபசாரத்தாலேயே கொன்றுவிடுவார் போல இருக்கிறதே!'' என்றாள் தாரிணி சமாதானமாக.

''அவனுக்கு ஒருவரைப் பிடித்துவிட்டால் அப்படித்தான்'' என்று சிரித்தார் சுசீலா. ''தாரிணி, முன்னே சொன்ன மாதிரி உனக்கு ஓய்வு கிடைத்த நேரம் வந்து இந்தச் சாமான்களை ஒழுங்குபடுத்துவதில் கொஞ்சம் உதவுகிறாயாம்மா!'' என்று கேட்டார் சுசீலா.

புது வீடு போகிறோம் என்று முன்பு சுசீலா சொன்னபோது, இந்த உபகாரம் செய்ய அவளாகவே முன்வந்தது உண்மைதான். ஆனால் அப்போது சுரேந்திரன் அவருடைய மகன் என்பது அவளுக்குத் தெரியாதே!

அவசரமாக யோசித்து, ''ஓ! வருகிறேனே... ஆனால் ஆன்ட்டி, இந்த வீட்டை எப்படி அடுக்க வேண்டும் என்று உங்கள் மகன் ஏதேனும் யோசனை வைத்திருக்கிறாரோ என்னவோ. எதற்கும் முதலில் அவர் உதவியைப் பயன்படுத்துவது நல்லதில்லையா? பிறகு வேண்டுமானால் நான்... வருகிறேனே...'' என்று இழுத்தாள் தாரிணி.

''இவனா?'' என்றார் சுசீலா. ''ஓட்டலில் கொண்டு வந்து விட்டு விட்டுக் காணாமல் போனான். இனி வீட்டில் விட்டுவிட்டுக் காணாமல் போவான். அவன் வேலையையும் சேர்த்து வைத்துக் கொண்டுதானே வந்திருக்கிறான்!'' என்று பெருமையோடு அலுத்துக் கொண்டார்.

சிறு புன்னகையுடன், ''ஆமாம், தாரிணி. நாளை கூடச் ''சாவுமுனை''யில் ஒரு சிறு படப்பிடிப்பு இருக்கிறது. தொ.கா.வுக்குப் புதிய விளம்பரத் தொடர். அதை முடித்துவிட்டு, அதன்பிறகு உதவி செய்கிறேன். இரண்டு நாள் பொறுங்கள், என்றால் அது அம்மாவால் முடியாது. இழுத்துப் போட்டுக் கொண்டு வேலை செய்து உடம்பைக் கெடுத்துக் கொள்வார்கள். அம்மா



வுக்கு உதவுகிறேனே என்று அப்பா வேறு வேலையில் இறங்கி விடுவார்... தொந்திரவு செய்வதாக எண்ணாமல் தயவுசெய்து நீயே வர முடியுமா?'' என்று கேட்டான் சுரேந்திரன்.

படப்பிடிப்பு என்று அவன் போய்விட்டால் அப்புறம் இங்கே வர அவளுக்கு என்ன தடை?

''தொந்திரவென்ன? ஆன்ட்டிக்கு உதவி பண்ணக் கொடுத்து வைக்க வேண்டும்'' என்று தன் சம்மதத்தைச் சொல்லாமல் சொல்லிவிட்டுக் கிளம்பினாள் அவள்.

விடைபெறுகையில்தான் அவளுக்குச் சிவஞானத்தின் நினைவு வந்தது. முதலிலேயே அவரைக் காணாதது உறுத்தியிருக்க வேண்டும். ஆனால் அதிர்ச்சி மேல் அதிர்ச்சியும், அவற்றின் காரணகர்த்தாவுமாக எல்லாவற்றையும் மறக்கடித்துவிட்டனர். நல்ல வேளை, இப்போதாவது ஞாபகம் வந்ததே!

''அங்கிள் எங்கே, ஆன்ட்டி?'' என்று மீண்டும் இவன் ஏதாவது பேசி மறக்க வைக்குமுன் அவசரமாகக் கேட்டாள் தாரிணி.

''காலையில் வீடு பால் காய்ச்சுவதற்காக விடியுமுன்பே எழுந்து தயாரானோம், இல்லையா? கொஞ்சம் அசதியாகத் தெரிந்தார். கட்டாயப் படுத்தி படுக்க வைத்தோம்'' என்றார் சுசீலா கொஞ்சம் வருத்தம் கலந்த புன்னகையுடன்.

''கொஞ்ச நாள். அப்புறம் இந்த மலைக்காற்றில் அங்கிள் எவ்வளவு திடசாலியாகப் போகிறார் தெரியுமா ஆன்ட்டி. நிஜமாகவே கொஞ்...ச நாள் பொறுத்திருந்து பாருங்கள்'' என்று அவள் சொன்ன பாவனையில், சுசீலா மெய்யாகவே சிரிக்கவும், நிம்மதியுற்றவளாய் விடை பெற்றுக் கிளம்பினாள் தாரிணி.



அன்றைய நடப்பைச் சித்ராவிடம் கூறியவள், கடைசியாக ''இரண்டு ஆண்டுகளாக எனக்கு மிகவும் கெட்ட நேரம் என்று தோன்றுகிறது, சித்ரா. நல்ல வேலை, வளம் எல்லாவற்றையும் உதறிவிட்டு இங்கே ஓடிவந்தேன். இழப்பை எண்ணி மறுகுவதை விடுத்து, இப்போதுதான் கொஞ்சம் நிம்மதியாக வாழத்தொடங்கினேன். அதற்குள் என் அமைதியைக் குலைக்க ஆள் வந்தாயிற்று. இரு நல்லவர்களின் அன்பு கிடைத்தது என்று மகிழ்ந்தேன். ஆனால் அதையும் விடவேண்டியிருக்கிறது'' என்று பெருமூச்சுவிட்டாள்.

''விடுவானேன்? எப்படியும் தொழிலை விட்டுவிட்டுச் சுரேந்திரன் இங்கேயே இருந்துவிட முடியாது. வேலையைப் பார்க்கச் சென்னைக்குச் சென்றுதான் தீரவேண்டும். அதன்பிறகு நீ அவருடைய பெற்றோரின் வீட்டுக்குப் போய் வந்து இருப்பதற்கு என்ன தடை?'' என்றாள் சித்ரா.

''ஊகூம். அது சரிப்படாது சித்ரா. பெற்றவர்களுக்கு பிள்ளையின் புகழ் பாடாமல் இருக்க முடியாது. 'இம்'மென்றால் எங்கள் பையன், எங்கள் பையன் என்கிறார்கள். அந்தப் பையன் யாரோவாக இருக்கையில் கேட்க நன்றாய்த்தான் இருந்தது. இனி அப்படி இருக்குமா? அத்தோடு, சுரேந்திரனும் அவ்வப்போது பெற்றவர்களைப் பார்க்க வருவார் அல்லவா? ஊகூம். மெல்ல மெல்ல ஒதுங்கிவிடுவதுதான் மேல். துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்று எந்தக் காலத்திலேயோ எழுதி வைத்திருக்கிறார்களே!''

மறுநாள், கடையில் கொஞ்ச நேரம் சித்ராவுக்கு உதவியாய் இருந்துவிட்டு சுரேந்திரனின் வீடு நோக்கி சென்றாள் தாரிணி.



அவளுள் ஓர் உற்சாகம் குமிழியிட்டுப் பெருகிக் கொண்டிருந்தது.

இந்தச் சுரேந்திரனைப் பார்த்தாலே தாங்க முடியாது; ஒன்று, ஆத்திரமும் வெறுப்பும் மீறக் கத்திக் கைநீட்டி விடுவோம். அல்லது வேதனையும் வலியும் தாளாமல் கண்ணீர்விட்டுக் கதறிவிடுவோம், எப்படியும் நிலை இழப்பது நிச்சயம் என்று ஒருசமயத்தில் அவள் வெகு நிச்சயமாய் நினைத்திருந்தாள். எப்படியும் இந்த துன்ப உணர்வுகளை மறைத்து, சாதாரணமாக நடந்து கொள்வது அவளால் முடியாத காரியம் என்று தான் எண்ணியிருந்தாள்.

ஆனால் இப்போது, அவனோடு பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசி, வார்த்தைகளினாலேயே அவனை மட்டம் தட்ட முடிந்தது அவளுக்கு ஆறுதலாகவும், கொஞ்சம் மகிழ்ச்சியாகவும் கூட இருந்தது.

தாயும் பிள்ளையுமாகப் பேசியதற்கு நேர்மாறாக, வீட்டைப் பெரும்பாலும் ஒழுங்குபடுத்தி வைத்த பிறகு தான் சுரேந்திரன் வேலை விஷயமாய் வெளியே சென்றிருந்தான்.

சின்னச் சின்னதாய், மெல்லியவாரால் செய்ய முடிகிற, அவர்கள் மட்டுமே செய்யக்கூடிய வேலைகள் - அலங்காரப் பொருட்கள், பூச்சாடிகள், படங்கள், சமையலறைச் சாமான்களை உரிய இடம் பார்த்து அடுக்குகிற வேலை மட்டும்தான் பாக்கி இருந்தது.

''வாட்ச்மேனைக் கூட வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் எங்கள் பையனே இழுத்துப் போட்டானம்மா. வாட்சுமேன் மகள் பெருக்கித் துடைத்துவிட்டு போனாள். அங்கே போனால் வீட்டோடு மூன்று ஆட்கள் இருந்தார்கள். சமையலுக்கு ஒருத்தி, கடைகண்ணிக்குப் போய்வர ஒரு கிழவன். ஒருவரையும் இங்கே

அழைத்து வரமுடியவில்லை. மொழித் தகராறு. சொந்த மக்களை விட்டுவர எல்லோருமே சங்கடப்பட்டார்கள். இங்கே யாராவது பார்த்துக் கொள்ளலாம் என்றுவிட்டான். எங்கள் மகன் ஆள் கிடைக்கும் வரையிலும் ஒட்டலில் சாப்பிடலாம் என்கிறான். எனக்குத் தான் மனதாகவில்லை. சென்னை போய்விட்டால் அவனுக்கு எப்போதும் ஒட்டல் சாப்பாடுதான். அதுவரை ஏதாவது வாய்க்கு ருசியாகச் செய்யலாமே... எனக்கும் பொழுது போகவேண்டுமில்லையா? உன் 'அங்கி'லுக்கு ஒரு 'லைப்ரரி' கிடைத்து விட்டது. இனி அங்கேயே குடி புகுந்து விடுவார்...''

சமையல் அறை அடுக்கியானதும். முன் அறைகளில் எப்படி எப்படி வைக்க வேண்டும் என்று திட்டம் கூறிவிட்டு, சுசீலா சமையலில் முனைந்தார்.

அலங்காரப் பொருட்களை எல்லாம் துடைத்து ஆங்காங்கே வைத்தபின் படங்களுக்கு வந்தாள் தாரிணி. முதலில் சுசீலா - சிவஞானம் தம்பதியின் திருமணப்படம். சின்னப் பெண்ணாக சுசீலாவின் அழகை ரசித்துவிட்டு, அடுத்த படத்தைத் துடைப்பதற்கு எடுத்தவளுக்கு உடல் சிலிர்த்தது.

அது சுரேந்திரனின் படம். பளிச்சென்ற புன்னகையோடு அவனது பார்வை அவளது மனதைத் துளைத்தது. இளநீலமும் மஞ்சளுமாகக் கட்டம் போட்ட சட்டை. இதே படம் அவளுக்குக்கூட ஒன்று கொடுத்திருந்தான். காலையில் எழுந்ததும் அவன் முகத்தில்தான் விழிக்க வேண்டும் என்று கட்டிலுக்கு அருகிலேயே நாற்காலியை இழுத்து போட்டு வைத்திருப்பாள்.

''மெள்ள... மெள்ள. ஒரேயடியாகத் துடைத்தால் 'லாமினேஷன்' பிய்ந்து விடப் போகிறது!'' என்று சுரேந்திரனின் குரலில் துள்ளி எழுந்தாள் தாரிணி.



''நீங்கள் எப்படி... உள்ளே... கதவு பூட்டியிருக்கிறதே!'' என்று தடுமாறினாள்.

''என்னிடம் ஒரு சாவி இருக்கிறது'' என்றபடி குனிந்து தன் படத்தை எடுத்தான் சுரேந்திரன். ''நல்ல வேளை! இது 'லாமினேட்' பண்ணிய படம். கண்ணாடி பிரேம் என்றால் விழுந்த வேகத்துக்கு உடைந்திருக்கும். மனதில் வேறு ஒன்று. ஆனால்...'' என்று படத்தை அருகே டீபாயில் வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

''என்ன?'' என்றாள் அவள் எங்கோ பார்த்தபடி.

''அந்தப் பட்டான மடியில் படுக்கும் பாக்கியம் நகலுக்கு மட்டும்தானா? அசலுக்கு எவ்வளவோ ஆசை இருக்கிறதே!''

அந்தப் பேச்சினால் விளைந்த கோபம் மட்டுமின்றி, அவன் படத்தை மடியில் வைத்துத் துடைத்ததற்காக தன்மீதும் சினம்கொண்டவளாகத் திரும்பினாள் தாரிணி.

சட்டென முன்வந்து, வழிமறைத்து, ''அன்று ஏன் அப்படி மறைந்தாய்? விழாவில் அழகுத் தேவதையாக அருகில் நின்றவள், சொல்லாமல் கொள்ளாமல் போய் விட்டு, அடுத்த நாள் அடியோடு மறைவது என்றால்... நான் என்னபாடு பட்டிருப்பேன்? ஒருவார்த்தை கூட சொல்லாமல் போவதா? ஏன் போனாய், தாரிணி?'' என்று கேட்டான் சுரேந்திரன்.

''வழியை விடுங்கள்!'' என்று அடிக்குரலில் சீறினாள் அவள்.

''முதலில் எனக்குப் பதில் வந்தாக வேண்டும்.''

''நான் எங்கேயும் எப்போதும் போவது வருவது என் விருப்பம். அதைக் கேட்க உங்களுக்கு உரிமை கிடையாது.''



''இருக்கிறது. திருமணம் செய்து கொள்ளக் கேட்ட உரிமை. அதற்கு நீ சம்மதித்ததால் வந்த உரிமை!''

''பகுதியாக இன்னும் சில வார்த்தைகள் சேர்க்கலாமே!'' என்றாள் அவள் ஏளனமாக.

''என்னவென்றோ?''

''வெளிநாட்டில் உல்லாசமாக இரவுகளைக் கழிப்பதற்காகச் செய்து கொள்ள இருந்த திருமணம் என்றுதான்!''

''ஏன், வெளிநாட்டில் உல்லாசமாக இரவுகளைக் கழிப்பதில் என்ன தப்பு? - அத்தோடு நீயும் அதற்கு - அதாவது இரவுகளை உல்லாசமாகக் கழிப்பதற்காகவும் அந்தத் திருமணத்துக்குச் சம்மதித்தாய்தானே?'' என்று திருப்பிக் கொடுத்தான் சுரேந்திரன்.

முகம் சூடாவதை உணர்ந்தாள் தாரிணி. இவனிடம் பேச்சுக் கொடுப்பதே தப்பு. வாழ்க்கையில் நெறிமுறை இல்லாதது போல வார்த்தைகளிலும் இவனுக்கு வரைமுறை இல்லை.

வெறுப்பில் முகம் இறுக நின்றவளிடம், ''ஒன்றை ஒத்துக்கொண்டு விட்டுப் பின்வாங்குவதுதான், தப்பு தாரிணி. அதுவும் காரணம் சொல்லாமல் விலகுவது பெரும்பிழை'' என்று அவளிடம் குற்றம் கண்டான் அவன்.

காரணமா? அந்த அசிங்கத்தை அவள் வாயால் விட்டுவேறு வைக்க வேண்டுமா? இந்தா வாங்கிக் கட்டிக் கொள் என்று எண்ணியவளாய், ''உங்கள் சேர்மன் மனைவி, ரஞ்சிதா எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்? முன்போலவே உங்களுக்கு அவர்களால் இயன்ற உதவி எல்லாம் செய்துக் கொண்டே இருக்கிறார்களா?'' என்று குறிப்பாய் பேசிக் குத்த முயன்றாள் அவள்.



உண்மை சுட்டதோ? ''இப்போது நாம் பேசுகிற விஷயம் அது அல்ல'' என்று எரிச்சல் காட்டிச் சிடுசிடுத்தான் சுரேந்திரன்.

''எனக்கு எல்லாம் ஒன்றுதான்'' என்றாள் அவள் வெடுக்கென.

''அதாவது நம் திருமணம் அப்படி ஒன்றும் முக்கியமான விஷயம் இல்லை என்கிறாய். அப்படித்தானே? உன் எண்ணம் தவறு என்று நிரூபித்தால் ஒழிய உனக்குப் புத்திவரப் போவதே இல்லை'' என்று உரைத்தவன், அவள் என்னவென்று உணருமுன் சட்டென அவளைப் பற்றி, அருகே இழுத்து, இறுக அணைத்தான்.

அந்தக் கணத்தில் தாரிணிக்கு, சுரேந்திரன் அவளுக்குச் செய்த துரோகம் மறந்தது; அவனால் அனுபவித்த வேதனை மறந்தது; இடைப்பட்ட துன்பமயமான இரண்டாண்டு காலமும் மறந்தது!

இவன் என் நாயகன்; இது என் இடம் என்பது தவிர வேறு எதுவும் தோன்றாமல் அவன் மார்பில் அப்படியே ஒண்டிக்கொண்டாள் அவள்.

## 9

சுரேந்திரனின் அணைப்பில் கட்டுண்டு தாரிணி. ஒண்டிக் கிடந்த காலம் வெகு சில வினாடிகளாக இருக்கலாம். அல்லது பலப்பல நிமிடங்களாகவும் இருக்கலாம். இல்லை, சில மணி நேரம் என்று சொன்னாலும்கூட அவள் அதை மறுப்பதற்கில்லை.

அவ்வளவுதூரம் கால நேரம் மறந்து ஒன்றிக் கிடந்தனர் இருவரும்.

சமையலறையில் இருந்து சுசீலாவின் அழைப்பு முதலில் அர்த்தமற்ற வெறும் ஒலியாக, எங்கோ தொலைதூரத்தில் இருந்து ஒலிப்பது போலவே தாரிணிக் குக் கேட்டது.

மீண்டும் அழைத்தவாறு சுசீலா கூடத்துக்கு வரும் அரவம் கேட்டபிறகு தான் இருவருமே இந்த உலகத் துக்கு மீண்டனர்.

சுரேந்திரனின் கரங்கள் மெல்லத் தளர, நிற்கும் நிலை உணர்ந்து அவசர அவசரமாக அவனது அணைப் பிலிருந்து விலகினாள் தாரிணி.

அப்போது நேராக நிற்கமாட்டாமல் அவளது கால்கள் நடுங்கின. பதறிய கைகளால் நெஞ்சுப் படபடப்பை அழுத்தி அடக்க முயன்றாள்.

அவளது தடுமாற்றத்தைக் கண்டு, சட்டென முன்னே வந்து, தாயின் பார்வையிலிருந்து அவளை மறைத்தாற்போல் நின்றான் சுரேந்திரன்.

''என்னம்மா, வாசனை கமகமக்கிறதே. என்ன சமையல்? ஆந்திராவில் நீங்கள் செய்யும் போதெல்லாம் நான் ஒருவனாகக் காலி செய்துவிடுவேனே, அந்தக் கத்தரிக்காய் சாதம் போலத் தெரிகிறதே!'' என்று மோப்பம் பிடிப்பது போலப் பாவனை செய்தான்.

அவனுக்குப் பின்னே, கால்கள் வெடவெடக்க நின்றவளுக்கு உள்ளம் கொதித்தது. கொஞ்சமும் பிசிரில் லாமல் எப்படிப் பேசுகிறான்! பாதிப்பே இல்லையே! இது பழகிப்போய் விட்டதால்தானே இவ்வளவு சாதார ணமாய்ப் பேச அவனால் முடிகிறது?



பெருமுயற்சி செய்து ஒருவாறு சுதாரித்துக் கொண்டு, ''இனி, இந்தப் படங்கள் மட்டும்தான் ஆன்ட்டி. இதை உங்கள் மகன் பார்த்துக் கொள்வாரில் லையா? நான் கிளம்புகிறேன். அங்கே என் சினேகிதி தனியாக என்னமாய்த் திண்டாடுகிறாளோ? வரட்டு மா?'' என்றவள், ''சாப்பிட்டுவிட்டு உன் தோழிக்கும் கொண்டுபோ'' என்று சுசீலா சொன்னதைக் காதிலேயே வாங்காமல் பிடிவாதமாய்க் கிளம்பி நடந்துவிட்டாள்.

போதும். இனி இந்த 'ஆன்ட்'டிக்காகக் கூட இந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவும் கூடாது. படப்பிடிப்பு என்றானே! எல்லாமே பொய்! பித்தலாட்டம்! இந்த மாதிரிப் படப்பிடிப்பு தொடங்கினால் எத்தனை மணிக்கு முடியும் என்று அவளுக்குத் தெரியாதா? சும்மாவானும் அவளுக்குப் போக்குக் காட்டிவிட்டு அவள் இருக்கிற நேரத்தில் வந்து நிற்கிறான்.

வந்து நின்றதோடு மட்டும் இல்லாமல் எதற்கு வந்தான் என்பதையும் காட்டிவிட்டானே!

தாரிணிக்கு சட்டெனத் தன்னிடமே பெரும் பயம் மூண்டது.

சுரேந்திரன் எப்படிப்பட்டவன் என்று நன்றாக அறிந்தவள்; சந்தேகத்துக்கு இடமின்றி சொந்தக் கண்க ளாலேயே பார்த்தவள். அவளால் அவனது அணைப் பில் எப்படி நெகிழ முடிந்தது? மூளையே இல்லாத முழுமுட்டாளைப் போல் நடந்து கொண்டுவிட்டாளே!

''இனியும் இதே முட்டாள்தனம் செய்யமாட்டாள் என்று என்ன நிச்சயம்?

அத்தோடு சுரேந்திரன் என்ன நினைப்பான்! வெறுப்பும் வீராப்பும் வெறும் வேடம், தொட்டால் காலடியில் விழுந்துவிடுவாள் என்றுதானே!



அப்படித்தான் எண்ணினான் என்பது போலச் சுரேந்திரன் அவளை விடாமல் பின்தொடர்ந்தான். வேட்டை நாயாய் விரட்டினான் என்று கூடச் சொல்ல லாம். மோப்பம் கண்டுவிட்டான் அல்லவா?

காலையில் கடைக்கு வந்தான். பின்புறம் ஓடினால் அங்கே சென்றான். எங்கே சென்றாலும் அங்கே வந்து நின்றான்.

தாரிணியின் தடைகளையும், மறுப்புகளையும் அவன் இப்போது சற்றும் பொருட்படுத்துவதாக இல்லை.

ஆனால், அவனும்தான் எப்படிப் பொருட்படுத்து வான்? சொல்லுக்கும் செயலுக்கும் சற்றும் சம்பந்தம் இல்லாமல் அவள்தான் நடந்து காட்டி விட்டபிறகு அவளது பேச்சை அவன் எப்படி மதிப்பான்?

அன்று இப்படித்தான். கடைப்பக்கம் அவன் கார் வருவதைப் பார்த்துவிட்டு, பின்புறம் ஓடி, வீட்டைச் சுற்றிக் கொண்டு அந்த வழியே வேறிடம், விரைகையில் இடையில் மடக்கிவிட்டான்.

ஏற்கனவே மனம் குன்றியிருந்தவளிடம், ''என்ன ஓட்டம், தரு? உன் இடம் எது என்பதை அன்று நடந்தது உனக்கு இன்னுமா உணர்த்தவில்லை?'' என்று கண்ணில் சிரிப்புடன் அவன் இலகுவாகக் கேலி பேசவும் தாரிணி மிதமிஞ்சிய சினத்தில் தன்னை மறந்தாள்.

பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவும் ஒன்று என்று தன்னை எண்ணிய அவன்மேல் கொண்ட கோபத்தோடு, அவன் எப்படிப்பட்டவன் என்று அறிந்த பின்னும் நெகிழ்ந்த தன் மீதே கொண்ட ஆத்திரமும் சேர்ந்து தலைக்கேறிவிடவே சட்டெனக் கை ஓங்கிவிட் டாள் அவள்.



ஆனால், ஓங்கிய கை இறங்குமுன், பற்றி நிறுத்திய வனின் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்தது. கண்கள் கடினமுற, ''முட்டாள்தனத்துக்கும் எல்லை இல்லையா, தாரிணி! பாவம் பெண், முரட்டுத்தனம் காட்டக்கூடாது என்று எண்ணியது பிழையாகிவிட்டது. இனியும் உன் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து உன் பின்னே அலைந்து கொண்டு இருக்கப் போவதில்லை. நான். உன்னை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று எனக்குத் தெரியும்'' என்று பற்றியிருந்த கையை விடாமல் பிடித்து இழுத்துக் கொண்டு காரை நோக்கி நடந்தான் அவன்.

எப்படி வழிக்குக் கொண்டு வரக்கூடும் என்பது புரிந்ததாலேயே தாரிணி ஒரேடியடியாய் மிரண்டு போனாள். இரும்பாயிருந்த பிடியிலிருந்து தப்பும் வழி தேடி அலைந்த விழிகளில், தெருமுனை திரும்பி, சைக்கிளில் ரோந்து வந்து கொணடிருந்த போலீசுகாரர் பட்டார்.

சற்றும் யோசியாமல், ''சார்... சார்... என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கத்தலானாள்.

திகைத்து, ''தரு... என்ன இது?'' என்று அதட்டிய வனை உதறிவிட்டு ''வேண்டாம் என்றால் உங்களுக்குப் புரியவில்லை அல்லவா. படுங்கள்'' என்று குரோதத்து டன் உரைத்தவள், அதற்குள் அருகில் வந்துவிட்ட காவலரிடம், ''பின்னோடு வந்து தொல்லை செய்கிறார் சார். கொஞ்சம் 'சொல்லி' அனுப்புங்கள்'' என்றாள்.

''யார்... அடுத்த தெரு 'சித்ரா ஸ்டோர்' பெண்ணா! நீ போம்மா, நான் பார்த்துக் கொள்ளுகிறேன். கையில் கார் ஒன்று கிடைத்துவிட்டால், கிளம்பிவிடுவான்களே! என்னய்யா... வெள்ளையும் சள்ளையுமாய் உடுத்திருக் கிறாய், உள்ளே...''

''போம்மா'' என்ற ஒரு வார்த்தையில் பறந்தோடி விட்டவளுக்கு வேறு எதுவும் காதில் விழவில்லை.

அந்தச் சமயத்தில் 'அப்பாடி தப்பிவிட்டோம்,' என்று இருந்தாலும், உடனேயே அவளுக்கு உறுத்தல் தொடங்கிவிட்டது. என்னதான் இருந்தாலும் போலீசில் மாட்டிவிட்டது அதிகப்படியோ? எப்படி சமாளிக்கப் போகிறான்?

எப்படியோ சமாளித்துவிட்டான் என்று மறுநாள் காலையிலேயே அவன் கடைக்குள் வந்து நின்றதில் தெரிந்தது.

அன்றுவரை சித்ராவின் முன்னிலையில் எதையும் பேசாதவன், அன்று ''தாரிணியிடம் இரண்டு நிமிடம் தனியாகப் பேசவேண்டும். நீங்கள் சற்று விலகிப் போகிறீர்களா?'' என்று சித்ராவிடம் கேட்டான். ''என்னால் அவளுக்கு ஒரு துன்பமும் நேராது. அதனால் பயமின்றிப் போகலாம்.''

சற்றுத் திகைத்தபோதும் சித்ரா அவன் சொன்னதைச் செய்தாள்.

அவள் சென்றதும், ''உன் முடிவைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெளிவாக விளக்கிவிட்டாய், தாரிணி. ஏன் என்று புரியாவிட்டாலும் இனி அதை மதித்துத்தான் ஆகவேண்டும். எனவே நான் போகிறேன். ஆனால், ஒரு வேண்டுகோள்...'' என்று நிறுத்தினான் அவன்.

''என்ன?'' என்று கேட்கையில் அவளுக்குக் குரலே எழும்பவில்லை. என்னவோ பெரிய தப்பு செய்து விட்டாற்போல் ஓர் உணர்வு. அத்தோடு அவன் போகிறேன் என்கிறானே!

''என் பெற்றோர்... என் அப்பாவின் உடல்நிலை பற்றி உனக்குத் தெரியும். அம்மா பாவம். அறியாதவர்கள். கொஞ்சம் வெகுளியும்கூட. ஏனோ, உன்னிடம் மிகவும் பற்றுதல் வைத்து விட்டார்கள்.''



பற்றுதல் வைக்கும்படியாக அவளிடம் எதுவும் இல்லை என்கிறானா?

ஒருகணம் தயங்கிவிட்டு, ''எனக்கும் அவர்களைப் பிடித்திருக்கிறது'' என்றாள் தாரிணி.

''நல்லது. இங்கே, இந்தப் புதிய இடத்தில் அவர்கள் நிலைபெறும் வரை கூட இருந்து பார்க்க முடியாதபடி நான் திடுமென இங்கிருந்து செல்ல வேண்டியிருக்கிறது. அதனால், அவர்களை நீ சற்றுப் பார்த்துக் கொண்டால் எனக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும்.''

அவன் திடுமெனச் செல்லக் காரணம் புரிந்ததால், ''சரி... நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று மெதுவாகக் கூறினாள் தாரிணி.

''நன்றி'' என்றவன் அதற்குமேல் நில்லாமல் விரைந்து சென்றுவிட்டான்.

கொடைக்கானலை விட்டும் அன்றே சென்றுவிட்டான் என்பதை மறுநாள் சுசீலா - சிவஞானத்தைப் பார்க்கச் சென்றபோது தாரிணி அறிந்து கொண்டாள்.

மகன் பிரிவில் பெற்றோர் இருவருமே சற்று வாடி இருப்பதைக் கண்டதும் தாரிணியின் மனம் குறுகுறுத்தது. அவளால் அல்லவா? ஆனால் நல்ல வேளையாக அதை அவன் அவர்களிடம் சொல்லவில்லை!

இறைவன் ஆணை போலத் தினமும் சுரேந்திரனுடைய பெற்றோருடன் ஒரு மணி நேரம் செலவிட்டாள்.

அந்த நேரத்தில் ருக்மிணியைக் கடையில் அமர்த்தி, அந்த சம்பளத்தைத் தன் சொந்தக் கணக்கிலிருந்து கொடுத்தாள். பொதுக்கணக்கிலேயே கொடுக்கலாம் என்று சித்ரா சொன்ன போது மறுத்து, ''இது ஒரு பிராயசித்தம்'' என்று இறுகிய குரலில் கூறவே, அதற்குமேல் சித்ரா ஒன்றும் வற்புறுத்தவில்லை.



ருக்மிணியின் உறவில் இருவரைப் பெரியவர்களிடம் வேலைக்கு அமர்த்தினாள். கொடைக்கானலின் கடைகண்ணிகள், பொழுதுபோக்கு இடங்களை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

இருபது நாட்களில் சுசீலா, சிவஞானத்தின் வாழ்வில் ஒரு முக்கிய அங்கமானாள் தாரிணி.

தந்தையின் நோயைக் காரணம் காட்டி, அவர்கள் வீட்டுக்கு டெலிபோன் தொடர்பு ஏற்படுத்தியிருந்த சுரேந்திரனும் அடிக்கடி பெற்றோருடன் பேசவே வேறு ஏக்கமின்றி இருவரும் கொடைக்கானல் வாழ்வில் இலகுவாகவே இணைந்தார்கள்.

ஒரு நாள் தாரிணி சென்றபோது சற்றுக் கவலை பாய்ந்த முகத்துடன் சுசீலா டெலிபோன் ரிசீவரை வைக்கக் கண்டாள்.

சட்டென மூண்ட கலவரத்துடன், ''என்ன ஆன்ட்டி? உங்கள் மகனுக்கு... அங்கே யாருக்கும் ஒன்றுமில்லையே?'' என்று பரபரத்தாள்.

''இல்லை இல்லை. இது மனோ... ரொம்பவும் வேண்டிய பெண்ணம்மா. எங்கள் பையனோடு சேர்ந்து வளர்ந்தவள். பதினைந்து ஆண்டு பெரியவரை இரண்டாம் தாரமாக மணக்கிறாளே என்று வருத்தப்பட்டோம். குழந்தை இல்லாவிட்டாலும் மற்றபடி ஒரு குறை இல்லாமல் மகிழ்ச்சியாகவே இருக்கிறாள் என்று தெரிந்து நிம்மதியாயிற்று. இப்போது அந்தக் குறையும் தீருகிறது என்று பார்த்தால் முதலுக்கே மோசம் என்கிறாள்!'' என்று வருத்தமாகக் கூறினார் சுசீலா.



''ஏனம்மா? அவர்கள் கணவருக்கு ஏதாவது...''

''ஊகூம்... அதெல்லாம் ஒன்றுமில்லை. இவள் பார்க்க, செகரட்டரியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு நின்றாராம் அவளுடைய கணவர். விவாகரத்து முடிவுக்கே போய்விட்டாள், நீங்கள் பேசிப் பாருங்கள் என்று காலையில் சுரேந்திரன் போன் செய்தான். அதுதான் 'கால்' போட்டு பேசினேன். ஒரே பிடிவாதமாய் இருக்கிறாள். அலுவலக நேரத்தில் ஒரு காரியதரிசியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு நிற்பவர் எனக்குக் கணவராக இருக்கத் தகுந்தவர் இல்லை. தேவநாதன் என்று பெயர் வைத்திருக்கிறார் அல்லவா, அந்த தேவர் இந்திரனாகவே மாறி விட்டார் என்று அடித்துப் பேசுகிறாள்!'' என்றார் கவலையோடு.

என்னவோ உறுத்தியது. சுரர்களின் - தேவர்களின் இந்திரனைப் போலவே...

இன்னொன்றும் நெருடியது. இந்த மனோவும் தேவநாதனும் 'பிரியா' நிறுவனத்தின் சேர்மனும் அவர் மனைவியுமா? அப்படியானால் வெறும் கல்லூரிப் பழக்கத்தில் மட்டுமாக அந்த 'சுரேன்' 'மனோ' வரவில்லை என்றல்லவா ஆகிறது?

''எனக்குத் தேவநாதனிடம் நம்பிக்கை இருக்கிறது'' என்றார் சிவஞானம். ''அலுவலகத்தில் காரியதரிசியைக் கட்டிப்பிடிக்கும் அளவுக்குத் தேவநாதன் முட்டாள் அல்ல; வெறி பிடித்தவரும் அல்ல. அவர் விரும்பினால், ஓர் ஓட்டல் அறை கிடைக்காது? அலுவலக நேரத்தில், கதவை உள்ளே பூட்டக்கூட இல்லாமல் வெறுமனே சாத்தி வைத்துக் கொண்டா இந்த வேலை செய்வார்கள்?''

'இந்த வேலை' என்று அவர் சொன்னவிதம் சிரிப்பூட்ட, ''ஆன்ட்டி... ஆந்திராவில் அங்கிளின்

அலுவலக அறை உள்ளே பூட்டியிருக்குமா, வெறுமனே சாத்தியிருக்குமா?'' என்று கேட்டு நகைத்தாள் தாரிணி.

சூழ்நிலையின் இறுக்கம் சற்றுத் தளர, ''உள்ளே பூட்ட உன் அங்கிளுக்குத் தைரியம் வராது. கண்ணம்மா. ஏதாவது கசமுசா என்றால் நான் பிசாசாக மாறிக் கழுத்தை நெறிக்க வந்துவிடுவேன் என்று அவருக்கு நன்றாகத் தெரியுமே?'' என்றார் சுசீலா.

''அதென்ன புதிதாகப் பிசாசாக மாறுவது என்பது? இப்போது என்னவாக இருப்பதாக எண்ணமாம்?'' என்று சிவஞானம் கூற, மூவருமே சிரித்து விட்டனர்.

சிரித்து முடித்தபின், சிவஞானம் மீண்டும் பழைய பேச்சை எடுத்தார். ''எனக்கென்னவோ, அந்தச் செயலாளர் பெண் மேல்தான் சந்தேகம். மனோகரி வந்து பார்க்க வேண்டும் என்றே இந்த நாடகம் நடத்தியிருக்கிறாள். வெறும் வக்கிரம் பிடித்த கழுதை. அவளுக்கு இரண்டு தரம் திருமணம் நிச்சயமாகிக் கலைந்துவிட்டதாம். அதனால் யார் சந்தோசமாக இருந்தாலும் பொறுப்பதில்லை.''

''இரண்டுதரம் கலைந்தது என்றால்... அந்த ரஞ்சிதாவா?'' என்று சுசீலா கேட்கவும் தாரிணிக்கு தூக்கி வாரிப் போட்டது.

## 10

ரஞ்சிதாவா?!

அவள் இங்கே எங்கே வந்தாள்?

அவள் சுரேந்திரனுக்கு அல்லவா செயலாளர்!



'உண்மையான இந்தியப் பெண்ணின் இரத்தத்'துக்கு ஒரு தனி விளக்கம் கொடுத்து, சுரேந்திரன் என்னென்ன காரியமாய் எவளுடன் சுற்றினாலும் கடைசியாகத் திரும்பி வருவது தன்னிடம்தான் என்று அடித்துச் சொன்னாளே!

இவள் எப்படி தேவநாதனின் - சேர்மனின் செயலாளர் ஆனாள்?

பதவி உயர்வா?

பதவி உயர்வே என்றாலும், சுரேந்திரனைப் பிரிந்து எப்படிப் போனாள்?

ஊகூம். இவள் அவள் இல்லை. அந்த ரஞ்சிதாவாக இருக்கவே முடியாது.

''ரஞ்சிதா என்றால்... முன்பு... முன்பு... உங்கள் மகனிடம் செயலாளராக இருந்தாளே! அவளா?'' ஆர்வத்தை அடக்கமாட்டாமல் எங்கோ பார்த்தபடி கேட்டுவிட்டாள், தாரிணி.

சட்டென அங்கே ஓர் அமைதி நிலவியது.

பதிலைக் காணாமல், சுசீலாவின் முகத்தைத் திரும்பிப் பார்த்த தாரிணி, சுசீலாவும் சிவஞானமும் ஒருவரோடு ஒருவர் பார்வையால் பேசுவதைக் காணவும் திகைத்தாள்.

''என்ன... ஆன்ட்டி?''

அவளை விசித்திரமாக நோக்கி, ''ரஞ்சிதா என் மகனுக்கு செயலாளராக இருந்தது உனக்கு எப்படி தெரியும்?'' என்று சுசீலா கேட்கவும் தாரிணி திணறினாள்.

நுணலும் தன் வாயால் கெடும் என்பது போல, வாயை வைத்துக் கொண்டு சும்மா இராமல் இப்போது



நன்றாக மாட்டிக் கொண்டாளே! பழைய கதையைச் சொல்லவும் மனம் இல்லாமல் பொருத்தமாகப் புளுகவும் வராமல் பேந்த விழித்தாள் அவள்.

ஆனால் அவளது பதிலுக்கு அவசியம் இல்லாமல், தானே யூகித்து, ''நீ... நீ தாரிணி... என் மகன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய அந்தத் தாரிணி நீதான்... அப்படித்தானே? நீ அந்தத் தாரிணிதான் இல்லையா? என்று கேட்டார் சுசீலா.

இதே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகத் தன்னுடைய பெற்றோருக்கு எழுதிய கடிதம் நினைவுக்கு வரவே, தொண்டை அடைக்க, ''எ...என்ன எழுதினார், ஆன்ட்டி?'' என்று மெல்லிய குரலில் வினவினாள் தாரிணி.

''உங்களுக்கு வரப்போகிற மருமகளின் பெயர் தாரிணி...'' என்று அவர் முடிக்குமுன் கையில் முகம் புதைத்து விசும்பி அழுதுவிட்டாள் தாரிணி.

தாரிணியின் குனிந்த தலைக்கு மேலாகப் பெரியவர்கள் இருவரும் மீண்டும் பார்வை பரிமாறினர்.

இங்கிதமாய் சிவஞானம் விலகிக் கொள்ள, தாரிணியை லேசாக அணைத்துத் தட்டிக் கொடுத்தார் சுசீலா. ''எதற்காகவும் இப்படி அழக்கூடாதம்மா'' என்று தேற்றினார்.

அவளது அழுகை கொஞ்சம் குறைந்ததும், ''என்ன நடந்தது, தாரிணி?'' என்று விசாரித்தார்.

என்ன நடந்தது என்று இந்தத் தாயிடம் சொல்வது? ஏதோ சூது என்று தோன்றுகிறதே தவிர அது என்ன என்று தெரியவில்லையே! எப்படியும், சுரேந்திரனும் ரஞ்சிதாவை அணைத்து நின்றது மெய்தானே? ஒரே மாதிரி இரண்டு நிகழ்ச்சிகள். இரண்டிலும் சம்பந்தப்பட்



டவள் ரஞ்சிதா என்பது தவிர இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது? 'சரித்திரம் திரும்புகிறது' என்பார்களே, அதுபோல அதே நிகழ்ச்சி மீண்டும் நடந்திருக்கவும் கூடுமே!

'இல்லை இல்லை' என்று அவள் மனம் அடித்துக் கொண்டபோதும் அது ஆசை கொண்ட மனதின் கற்பனையாகவும் இருக்கலாம். அறிவு கூறுவதை அலட்சியப்படுத்தவும் அவளால் முடியவில்லை. எல்லாமே ரஞ்சிதா நடத்திய நாடகம் என்றால் அதை நிரூபிக்க ஏதேனும் - ரொம்பச் சின்னதாக என்றாலும் ஒரு ருசு வேண்டுமே!

சுசீலாவின் தோளில் முகம் புதைத்துச் சற்று நேரம் அசையாமல் நின்றாள் தாரிணி.

ஒரு முடிவுக்கு வந்தவளாய், நிமிர்ந்து, ''ஆன்ட்டி, நான் இன்றே சென்னைக்கு கிளம்புகிறேன். அங்கே ஒரு முயற்சி செய்யப் போகிறேன். அது... அது வெற்றியாக வேண்டும் என்று எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்'' என்றவள், கார்கால மின்னலாய்க் கண்ணீரிடையே ஒரு புன்னகையைச் சிந்திவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

சித்ரா இப்படி ஒரு திருப்பத்தை எதிர்பார்த்தே இருந்தது போலத் தோன்றியது.

விஷயத்தைச் சொல்லி, ''என் முயற்சி வெற்றியானால் இந்தக் கடையை எப்படி நடத்துவாய்? அதுதான் கவலையாக இருக்கிறது'' என்று தாரிணி கூறியபோது ''கவலையே படாதே'' என்று வெட்கச் சிரிப்புடன் சிரித்தாள் அவள்.

வியப்பும் குழப்பமுமாய்த் தாரிணி நோக்கவும், ''ஏலக் கடை மாதவனை நினைவு இருக்கிறதா? அவரை

மணந்து, இருவருமாகத் தொழிலை நடத்துவோம்'' என்றாள்.

''ஏய், கடைக்காக என்று கல்யாணத்தில் இறங்காதேப்பா. திருமணம் பெரிய விசயம்'' என்றாள் தாரிணி அக்கறையுடன்.

''காதலும்தான்ப்பா. எப்போது ஏலம் என்றாலும் நானே ஓடுகிறேனே. ஏன் என்று நினைத்தாய்? அவருக்கும் அதே எண்ணம் என்பது சில நாட்களாகத்தான் தெரிந்தது. உன்னிடம் சொல்ல வேண்டும் என்று ஒரு மாதமாய் முயற்சி செய்தேன். நீ அந்த சுரே... வந்து, வேறு நினைவாகவே இருந்ததால் சொல்லவே முடியாமல் போயிற்று... வந்து, ஒரு விசயம், நினைவில் வைத்துக்கொள், தரு. அங்கே, சென்னையில் உன் முயற்சி வெற்றி பெற்றால் எங்களுக்கு இரட்டிப்பு சந்தோசம்தான். ஆனால் அப்படி இல்லை என்று ஆனாலும், திரும்பிவரத் தயங்க வேண்டாம். இங்கே உன் இடம் எப்போதும் அப்படியே இருக்கும்'' என்றாள் சித்ரா.

பேசமாட்டாமல் தலையாட்டிவிட்டுக் கிளம்பலானாள் தாரிணி. அங்கங்கே ஒன்றிரண்டு ரஞ்சிதாக்கள் இருந்தபோதும், மனிதர்களில் நிறைய பேர் நல்லவர்கள் தான்!

சென்னை செல்லும் வரையிலும், அங்கே மனோகரி இருக்கிறாளா என்று கேட்டுத் தெரிந்து கொண்டு அவள் வீடு செல்லும் வரையிலும் கூட, மனோகரியிடம் என்னென்ன கேட்பது என்று திட்டமிடுவதில் தாரிணிக்கு ஒரு சிரமமும் தோன்றவில்லை.

ஆனால், அந்தப் பெரிய வீட்டின் வரவேற்பறையில், முன்னே டீபாயில் வைக்கப்பட்டிருந்த குளிர்பானத்தை வெறித்தபடி அமர்ந்து, வீட்டு எசமானியின் வரவுக்காகக் காத்து இருந்தபோது தான் அவளிடம் எப்படிக் கேட்கப் போகிறோம் என்ற மலைப்பு உண்டாயிற்று.



சித்ரா போல ஒரு வயதுத் தோழிகள், ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுப் பேசினார்கள் என்று பேச இயலாது; ஏன், அந்தச் சித்ராவிடம் கூட அவளது சொந்த விசயம் சொல்லத் தாரிணிக்கு இரண்டு ஆண்டுகள் பிடித்தனவே!

வயதில் சற்றுப் பெரியவள்; இந்தப் பெரிய வீட்டின் உடைமைக்காரி, ஒரு பெரிய தொழில் நிறுவனத்தின் சேர்மனுடைய மனைவி; மகளிர் மன்றத் தலைவி; பல தர்ம காரியங்களைப் பொறுப்பேற்று நடத்துகிறவள். அவளிடம் போய், 'உன் கணவரை நீ விவாகரத்து செய்வதன் காரணங்களை இடம் பொருள் ஏவலுடன் விளக்குக' என்று தாரிணி கேட்க முடியுமா?

அப்படிக் கேட்டால் வேலையாட்களை அழைத்து அடித்துத் துரத்தி விடமாட்டாளா?

அப்படி அடித்துத் துரத்தாவிட்டாலும், வாழ்க்கையில் ஒரே ஒருதரம், சில நிமிடங்கள் மட்டுமே பேசிப் பழகிய ஒருத்தியிடம் தன் அந்தரங்கங்களைப் பிட்டுப் பிட்டு வைத்துவிடுவாளா அவள்?

நம்பிக்கை இழந்து சோர்ந்து போனாள் தாரிணி.

விலை உயர்ந்த 'சில்க் கோட்டா' சேலை சரசரக்க அறையினுள் வந்து, வணக்கம் கூறி வரவேற்றபடி, தாரிணிக்கு எதிர்புறமாய் அமர்ந்தாள் மனோகரி.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, அந்தி மாலை வண்ணப் பட்டுடுத்தி, பளபளத்த வைரங்களோடு புன்னகையும் கண்ணொளியும் போட்டியிட நின்றவளின் சோர்வும் மெலிவும், தாரிணியின் சொந்தத் துன்பங்களைச் சற்றே மறக்க வைத்தன.



டீபாயில் அப்படியே இருந்த பானத்தைக் காட்டி, ''குடிக்கவில்லை? சுவை பிடிக்கவில்லையா? வேறே ஏதாவது... குளிர்ச்சி பிடிக்கவில்லை என்றால் சூடாகக் காப்பி கொண்டுவரச் சொல்லட்டுமா?'' என்று கனிவு காட்டி விசாரித்தாள் மனோகரி.

''இல்லை... இல்லை... இல்லை. இது போதும்'' என்று பானத்தை எடுத்து கடகடவென்று ஒரே மூச்சாய்க் குடித்து முடித்துவிட்டுத் தம்ளரை கீழே வைத்தாள் தாரிணி.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்து விட்டு,ஏதோ சொல்ல வேண்டும் என்று டெலிபோனில் சொன்னீர்களே...'' என்று எடுத்துக் கொடுத்தாள் மனோகரி.

எப்படித் தொடங்குவது என்று இன்னமும் புரியாமல், ''அது... அது...'' என்று தாரிணி தடுமாறவும் மனோகரியின் விழிகள் அகன்றன.

''கடவுளே! என்றாள் அதிர்ச்சியுடன். ''பார்ப்பதற்கு நல்லபடியாய்த் தெரிகிறாய் என்று பார்த்தால் நீயும் அப்படித்தானா? என் கணவர் உன்னோடு ஆடிய காதல் விளையாட்டுகளைப் பற்றிச் சொல்லத்தான் நீயும் வந்திருக்கிறாயா?'' என்றாள் வெறுப்புடன். ''அந்த மாதிரி எதுவும் என்றால் ஒன்றும் பேசாமலே நீ இடத்தைக் காலிபண்ணலாம்.''

''இல்லையில்லை... நான் அந்த மாதிரிப் பெண் இல்லை. மிசஸ் தேவநாதன்'' என்றாள் தாரிணி அவசரமாக.

''வேறே எந்த மாதிரிப் பெண்?''



''நா...ன்... நான் உங்களைப் போல் ஒரு பாதிக்கப்பட்ட பெண்...''

''யாரால்? என் கணவராலா?'' என்றாள் மனோகரி சற்றும் இளகாமல் விறைப்புடனேயே.

''இல்லை. ரஞ்சிதாவால்.''

''ரஞ்சிதா! அவளாலா?'' சட்டெனக் கண் பார்க்கத் தொய்ந்தாள் மனோகரி. ''பாவம்! ரஞ்சிதாவால் உனக்கும் துன்பம் ஏற்பட்டதாம்மா? ஆனால் அதற்காக உனக்கு நான் என்ன உதவி செய்ய முடியும்? எனக்கே என்னால் எதுவும் செய்துகொள்ள முடியவில்லையே!'' என்றாள் சோர்ந்த குரலில்.

''செய்ய முடியும். நம் இருவருக்குமே நீங்கள் உதவி செய்ய முடியும். அதற்கு நீங்கள் சில விவரங்கள் சொன்னாலே போதும்'' என்ற தாரிணி; மீண்டும் மனோகரியின் விழிகளில் ஐயம் எட்டிப் பார்ப்பதைக் கண்டதும், ''முதலில் நான் எனக்கு நேர்ந்ததைச் சொல்லுகிறேன், அதன்பிறகு நீங்கள் விரும்பினால் எனக்கு உதவலாம், மிஸஸ் தேவநாதன்'' என்றாள்.

''சும்மா சும்மா 'மிசஸ் தேவநாதன்' என்று அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. வெறுமனே 'மனோகரி' என்றால் போதும்'' என்று தொடங்கும்படித் தாரிணியிடம் சைகை செய்தாள்.

விளம்பர விசயமாகத் தன் காதலனுக்கு டெலிபோன் செய்யும்போது அவ்வப்போ'து கேட்கும் ரஞ்சிதாவின் உதாசீனக் குரலில் தொடங்கியவள் விழா நிகழ்ச்சிகளை விரிவாக உரைத்தாள்.

சேலையில் குளிர்பானம் கொட்டியதைச் சொன்னபோது மனோகரி சற்று நிமிர்ந்து அமர்ந்தாள்.

முகம் கழுவும் அறையில் சேலை அலசச் சென்ற கட்டத்தில் ரஞ்சிதா வந்து பேச்சுக் கொடுத்த கட்டத்தில் மனோகரியின் கண்கள் கத்தியின் கூர்மையுடன் தாரிணியின் முகத்தில் பதிந்தன.

மறுநாள் அலுவலகம் சென்று, உள்ளே செல்ல அனுமதிக்காகச் சற்று நேரம் வாதாடி, தடுத்துப் பேசியவர்களை மீறிக் கொண்டு உள்ளே சென்று, அவளுடைய காதலனின் அணைப்பில் ரஞ்சிதாவைக் கண்டதை அவள் சொல்லி முடிக்கவும் சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

சற்று யோசித்துவிட்டு, ''இப்படி எல்லாம் என்னிடம் கதை சொல்வதற்காக, என் கணவர் உனக்கு எவ்வளவு பணம் தந்தார்?'' என்று மனோகரி கேட்கவும் தாரிணிக்கு தூக்கிவாரிப் போட்டது.

''அய்யோ, அவரை நான் பார்த்தே இரண்டு ஆண்டுகள் ஆகிறதே! மனோகரி, என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? பிரியா சோப்பில், எலுமிச்சை புத்துணர்ச்சி சோப்பின் வெற்றி விழாவில் சுரேந்திரன் என்னை உங்களுக்கு அறிமுகம் செய்வித்தாரே. நீங்கள் கூட அந்தி மாலை மேக வண்ணத்தில் ஒரு பட்டுச் சேலை கட்டியிருந்தீர்களே...''

''ஓ! கரெக்ட். நீ கூட பீச் கலரில் சின்ன ஜரிகை புட்டா போட்ட சேலை கட்டியிருந்தாய்... மணக்கப் போகிற பெண் என்று சுரேன் சொன்னாரே, அப்படியானால் நீ காதலன் என்று குறிப்பிட்டது சுரேந்திரனையா?... ஆமாம், அப்போது அந்த ரஞ்சிதா சுரேந்திரனுக்குத்தான் செயலாளராக இருந்தாள் என்று ஞாபகம்...''



''ஆமாம். அப்படித்தான் இருந்தாள். அதுதான் அவளது திட்டங்களுக்கு வசதியாகிப் போயிற்று'' என்றாள் தாரிணி வேதனையுடன். உடனேயே, ''ஆனால் மனோகரி, எனக்குப் புரியாதது இதுதான். அவள் எப்படி சுரேந்திரனை அவளை அணைக்கும்படி செய்தாள்? ஏனென்றால் நான் நன்றாகப் பார்த்தேன். சுரேந்திரன் தான் அவளை அணைத்துக் கொண்டு நின்றார். இவள் அந்த அணைப்பில் சொக்கினாற்போலக் கிடந்தாள்'' என்றாள் கலக்கத்துடன்.

''நீ சுரேனிடம் கேட்கவில்லையா?''

''இல்லை, கேட்டு அதற்கொரு கதை கட்டுவதைக் கேட்டு இன்னமும் ஏமாற வேண்டாம் என்று ஊரை விட்டே போய்விட்டேன்.''

''நான் என் கணவரிடம் கேட்டேன்'' என்றாள் மனோகரி. ''உனக்கு நேர்ந்தது போலவே கிட்டத்தட்ட எல்லாமே எனக்கும் நேர்ந்திருப்பதாலும், நீ உண்மை சொல்கிறாய் என்று நான் நம்புவதாலும் உன்னிடம் எல்லாமே சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். ஆனால் இது உன்னைத் தாண்டி வேறு எங்கும் போகக்கூடாது'' என்ற மனோகரி, மற்றவள் சற்று யோசிக்கவும், ''சுரேந்திரன் என் சிறு வயதிலிருந்தே பழகிய சினேகிதன். அவனுக்கு ஓரளவு... மன வேறுபாடு என்கிற அளவுக்குத் தெரியும். இப்போது, மற்றதையும் அவனிடம் மட்டும் சொல்வது தவறில்லை. மற்றபடி வெளியே பரவக்கூடாது என்றேன்'' என்று விளக்கினாள்.

அதற்குமேல் தயங்காமல் 'சம்மதம்' என்று தலையாட்டினாள் தாரிணி.



''அன்று சேலையில் பானக் கறை அலசச் சென்றபோது நீ அனாவசியமாய் அவளிடம் திருமண விவரம் சொன்னது போலவே நானும் அவள் வாயை அடைக்க ஒன்று சொன்னேன். திருமணமாகி இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு எங்கள் வாழ்வை நிறைவு பெறச் செய்ய ஒரு குழந்தைப் பிறக்கப் போவது பற்றிச் சொன்னேன்... குறையற்ற குதூகல வாழ்வு பற்றி, அந்த வக்கிரப் புத்திகாரியிடம் சொன்னேன். உன் கதை போலவே அன்றைக்கும் ஒரு விழாதான். வெளிநாட்டுக்காரர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். விழா முடிந்தபிறகும் அவர்களோடு இரவு நெடுநேரம் தேவா பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது. உன் உடல் நிலை காரணமாய், என் தூக்கம் கெடக்கூடாது என்று அவர்களோடேயே ஓட்டலில் தங்கிவிட்டு அப்படியே அலுவலகம் போய்விட்டார். மறு இரவுவரை காத்திருக்க எனக்குப் பொறுமை இல்லை. அத்தோடு உன்னைப் போலவே அவளையும் வைத்துக் கொண்டே இதைப் பேசித் தீர்த்துவிட வேண்டும் என்று வீராப்பாய்ப் போனேனா... பார்த்த காட்சி என்னவாயிருக்கும் என்று உனக்குத் தெரிகிறதல்லவா?''

''அது தெரிகிறது. ஆனால் அவளை அணைக்கும்படி செய்ததுதான் புரியவில்லை.''

''ஒரு தகப்பனைப் போல என்று.''

''புரியவில்லை'' என்றாள் தாரிணி.

''சொந்த பந்தம் என்று யாரும் இல்லாத அனாதையாய் அன்புக்கு ஏங்கிய அவளை, நம்ப வைத்து ஒருவன் ஏய்த்துவிட்டான். துக்கம் தாங்கமுடியாமல் தவித்தவள் - 'ஒரு தகப்பனைப் போலச் சற்று நேரம் ஆதரவாய் அணைத்துக் கொள்ள முடியுமா' என்று கெஞ்சினாளாம் - 'பாவம். சிறு பெண்' என்று சற்று



நேரம் தோளில் சாய்த்துக் கொண்டு நின்றேன் என்றார் என் கணவர்...''

''ஆனால் சுரேந்திரனிடம், 'அப்பா போல அணைத்துக்கொள்' என்று சொல்ல முடியாதே!'' என்றாள் தாரிணி.

''அண்ணனைப் போல என்று வேண்ட முடியுமே!... இப்போது புரிகிறது. அவள் பேசிய விதத்தால், அவளையும் வைத்துக் கொண்டு சந்தேகம் தெளியவிடுவோம் என்று அவளுக்கு உறுதி. யாரையும் - அது யார் என்றாலும் உள்ளே விடக்கூடாது என்று பாவ்லா காட்ட வெளியே அவளுடைய ஆள் யாரையோ வைத்து விட்டு, வாக்குவாதம் தொடங்கியதுமே உள்ளே நம் ஆண்களிடம் வேலை செய்திருக்கிறாள் என்பது ஊகம்.''

''வெறும் ஊகம் மட்டுமல்ல. அப்படித்தான் நிச்சயமாக நடந்திருக்க வேண்டும்'' என்றாள் தாரிணி பரபரப்புடன். ''இப்போது எல்லாமே நன்றாக விளங்கிவிட்டது...''

''பொறு, தாரிணி. இப்படி நடந்திருந்தால் நல்லதுதான். ஆனால், அப்படி ஆசைப்படுவதால் மட்டுமே, அப்படி நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது. இந்த இரு ஆண்களுமே அவளிடம் மயங்கியிருக்கவும் கூடும். அவள் சொன்னபடி நடந்திருப்பதும் சாத்தியம் தான். இல்லை என்று ருசுபிக்க நம்மிடம் எந்தவித அத்தாட்சியும் இல்லை'' என்றாள் மனோகரி மீண்டும் சோர்வுடன். ''ஒரு விஷயம் இரண்டாம் முறையாக நடந்ததாலேயே அது பொய்யாகிவிடாது இல்லையா?''

''அவள் வக்கிரம் பிடித்தவள் என்று அங்கிள் - சுரேந்திரனுடைய அப்பா சொன்னார்'' என்றாள்

தாரிணி. என்னவோ அவரது அபிப்பிராயமே ரஞ்சிதாவை கெட்டவள்'' என்று நிரூபித்துவிடுவது போல.

ஆனால், ''சிவஞானம் அங்கிள் மனிதர்களை நன்றாக எடைப் போடக்கூடியவர்தான், தாரிணி. ஆனால், அதனாலேயே, ரஞ்சிதா சொன்னதெல்லாம் பொய்யென்று ஆகிவிடாது. அவள் சொன்னது பொய் என்று நிரூபிக்க முடியாதவரை நாம் எந்த முடிவுக்கும் வர முடியாது'' என்றாள் மனோகரி பிடிவாதத்துடன்.

கூடச்சேர்ந்து சோர்ந்த தாரிணி, சட்டெனத் துள்ளிக் குதித்தாள். ''இருக்கிறது. சான்று இருக்கிறது!''

''என்னது?'' என்றாள் மனோகரி ஆர்வத்துடன்.

சற்றே தயங்கிவிட்டு, ''நான் ரஞ்சிதா சொன்னதைத் திருப்பிச் சொல்லுகிறேன் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, இதை நீங்கள் கேட்க வேண்டும், மனோகரி'' என்றவள் ஒரு பெரிய மூச்செடுத்துக் கொண்டு சொன்னாள். ''சுரேந்திரனுக்கும் உங்களுக்கும் தவறான உறவு இருந்ததாகவும், அந்த நெருக்கம் காரணமாகவே நீங்கள் சேர்மனிடம் சிபாரிசு செய்து சுரேந்திரனைப் 'பிரியா' நிறுவனத்தில் ஒரு டைரக்டர் ஆக்கியதாகவும் ரஞ்சிதா சொன்னாள்! 'மனோ மனோ' என்று குழைவதே அதற்கு சாட்சி என்று கூடச் சொன்னாள்'' என்று முடித்தாள்.

ஆத்திரத்தில் உடல் நடுங்க எழுந்து நின்றாள் மனோகரி. அவ்வளவு நேரம் காட்டிய கம்பீரத்தைக் கைவிட்டு, ''அடி செருப்பால், அந்த நாயை. என்ன திண்ணக்கம் இருந்தால் என்னைப் பற்றி இப்படிப் பேசுவாள்? போய், அவள் தலைமுடியைப் பிடித்து இழுத்து, முகத்திலேயே அறைய...'' என்றவளின் கண்கள் அகன்றன. ''தாருணி, நாம் தேடிய ருசு! அவள் சொன்னது பொய் என்பதற்குச் சான்று! கடவுளே, என்



கணவர் எந்தவிதப் பிழையும் செய்தவர் அல்ல. சுரேந்திரனும்தான்'' என்று கண்ணீர் வழியச் சிரித்தாள்.

தாரிணிக்கும் கிட்டத்தட்ட அதே நிலைதான்.

''ஆனால் இந்த அளவு அவள் பேசி, இரண்டு ஆண்டுகளாக நீ அதை நம்பியும் இருந்துவிட்டதால் இதன் விளக்கத்தை நீ அறிந்துகொள்ள வேண்டும், தாரிணி'' என்று தொடங்கினாள் மனோகரி.

''சிறுவயதிலிருந்து நீங்கள் சேர்ந்து வளர்ந்தவர்கள். அதனால்தான் மனோ, சுரேன் என்று அழைத்துக் கொண்டீர்கள் என்பதைக் கொடைக்கானலிலேயே அறிந்துக் கொண்டேன்'' என்றாள் தாரிணி மென்மையாக.

''கூடவே மற்றதையும் தெரிந்து கொள்'' என்று தொடங்கினாள் மனோகரி.

## 11

''சிவஞானம் அங்கிள் ஆந்திராவில் செய்தது புகையிலைத் தொழில். பயிரான புகையிலையை வாங்கி, பதப்படுத்தி, பீடி, சிகரெட்டு, சுருட்டு முதலியவற்றில் அடைப்பதற்கு உரிய வகையில் தயார் செய்து, அந்தந்த நிறுவனங்களுக்கு விற்பது.

''சுரேந்திரனுக்கு முதலில் இருந்தே அந்தத் தொழிலிடம் வெறுப்பு. மக்கள் உடம்பைக் கெடுக்கிற தொழில் என்பான். அதனாலேயே, படித்து முடித்ததும் தந்தையின் தொழிலில் பங்கேற்காமல் வெளியே வேலை



தேடினான். 'பிரியா'வில் வேலை கிடைத்தது அவனது சொந்தத் திறமையால்தான். அதே திறமையாலேயே உயர்ந்தான்.

''இடைப்பட்ட காலத்தில் 'பிரியா' ஒரு நல்ல நிறுவனம் என்பதைக் கண்டு கொண்டான். பெற்றோரிடம் தொழிலை மாற்றக் கேட்டுக் கொண்டு இருந்தவன் சிறுகச் சிறுகப் 'பிரியா'வின் பங்குகளை வாங்கிச் சேர்த்தான். அங்கிளும் பணம் கொடுத்தார்.

''அந்தப் பங்குகளின் அடிப்படையாலும், அவனது சொந்தத் திறமையாலும்தான் 'தேவா' சுரேந்திரனை ஒரு 'டைரக்டர்' ஆக்கியது.

''இப்போது அங்கிள் ஆந்திராவை விட்டுவரும்படி ஆனதும், அந்தத் தொழிலை விற்று அந்தப் பணத்தையும் 'பிரியா'விலேயே போட்டுவிட்டதால் சுரேந்திரனுடைய குடும்பம் 'முக்கிய பங்குதாரர்' நிலைக்கு வந்துவிட்டது. ஆனால், இதில் எதுவுமே என் தலையீட்டால் நடந்தது இல்லை. அப்படித் தொழிலில் நான் தலையிட்டால் என் கணவர் அதை ஏற்றுக் கொள்ளுகிறவரும் இல்லை'' என்றவள் சட்டெனக் கலங்கினாள். ''அவரை ஏதேதோ பேசி அவமானப்படுத்தி விவாக ரத்து என்கிற வரை போய் விட்டேனே. என்னை அவர் மன்னிப்பாரா?'' என்றாள் கவலையுடன்.

''எனக்கும் அதே பயம்தான். சுரேந்திரனை மிகவும் கேவலமாக நடத்திவிட்டேன். அதை எல்லாம் அவரால் மறக்க முடியுமா?'' என்று கூடச் சேர்ந்து புலம்பினாள் தாரிணி. போலீசில் அவரை பிடித்துக் கொடுத்தாளே!

''எனக்குப் பெரிய உதவி செய்திருக்கிறாய், தாரிணி. நான் வேண்டுமானால் சுரேந்திரனிடம் சொல்லிப் பார்க்கட்டுமா? பத்து ஆண்டுகள் ஆனந்தமாகக் குடும்பம் நடத்திய எனக்கே புத்தி கெட்டுப்போக முடியும் என்றால், சின்னப்பெண், நீ என்ன செய்வாய்? இதைச் சொன்னால் சுரேந்திரன் கொஞ்சம் இளகிவிடுவான் என்று நினைக்கிறேன்'' என்றாள் மனோகரி.



ஒருகணம், இப்படி இவள் பின்னே ஒளிந்து கொள்ளலாமா என்று ஓர் எண்ணம் தாரிணிக்கு வரத்தான் செய்தது. ஆனால் அதை உடனேயே ஒதுக்கினாள். சுரேந்திரனுக்கு அநியாயம் செய்தாள் அவள். அவளேதான் அதற்குப் பரிகாரமும் செய்தாக வேண்டும்.

அதேயே மனோகரியிடமும் சொல்லி, அவளிடம் விடைபெற்றுக் கிளம்பினாள்.

பொதுவாக இரவு உணவை வெளியே முடித்துக் கொண்டுதான் சுரேந்திரன் தன் இருப்பிடம் திரும்புவது வழக்கம். ஆனால் இரவில் அதிகத் தாமதமாக உண்பதில்லை.

எனவே அவன் வரும்வரையிலும் அருகில் இருந்த சிறு பூங்காவில் நேரத்தைக் கழித்துவிட்டு, இரவு எட்டு மணி அளவில் சுரேந்திரனின் 'அப்பார்ட்மென்ட்'டின் வாயில் கதவை அடுத்திருந்த அழைப்பு மணியை அழுத்தினாள் தாரிணி.

மணிக்கணக்காய்த் தோன்றிய சில வினாடிகளின் பின்னர் கதவைத் திறந்த சுரேந்திரன் அவளைக் கண்டதும் திகைத்து நின்றான்.

''உ... உள்ளே வரலாமா?'' என்று கேட்கக்கூட அவளுக்குச் சரியாகக் குரல் எழும்பவில்லை. பாதிக் காற்றாய் ஒலித்தது. எனவே திரும்பவும் கேட்டாள்.

அவன் பேசாமல் வழி விலகி நின்றான்.

அதையே அனுமதியாகக் கொண்டு உள்ளே சென்றவள், கதவைச் சாத்திவிட்டு சாத்திய கதவின் மேல் சாய்ந்து அவனைப் பார்த்தாள். கொடைக்கானலில் பார்த்ததற்கு இந்த ஒரு வாரத்தில் மூப்பு தெரிந்தது. உணர்ச்சியற்ற பார்வையும் அதன்பின்னே மறைந்திருந்த வேதனையும் புரிந்தது. அவனிடம் என்னென்ன மாதிரிப் பேசி விளக்க வேண்டும் என்று எண்ணி வந்தது எல்லாம் மறந்தது. அவனை இழுத்து அணைத்து, ''சாரிம்மா; சாரி சாரி. ரொம்ப சாரி. தயவுபண்ணி, ரொம்பவும் தயவுபண்ணி என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று அழுகையினுடேயே, அவன் கழுத்து, கன்னமெங்கும் முத்தமிட்டபடி கதறி விட்டாள்.

அவனது கரங்கள் அவளைத் தழுவி, அன்பாக வருடி, ஆறுதல் படுத்தின.

தாரிணியின் கண்ணீர் கொஞ்சம் குறைந்ததும், ''நீ கொலையே செய்து விட்டு வந்திருந்தாலும் இப்படிக் கேட்டால் நான் மன்னித்தே தீருவேன். ஆனால்... திடீரென்று என்ன இந்த வருகையும் அழுகையும்? சொல்லு...'' என்று இதமான குரலில் கேட்டான் சுரேந்திரன்.

அவனது கைவளையம் அவளைத் திடம்கொள்ளச் செய்தது. கூடவே அவனது வார்த்தைகளும் அவளுக்குத் தைரியம் தந்தன.

ஒரு குறுகுறுப்புடன் அவனை நோக்கி, ''ஒரு வேளை கொலையே செய்துவிட்டு வந்திருந்தால் என்ன செய்வீர்கள்?'' என்று வினவினாள் தாரிணி.

''கையில் அகப்பட்ட பணத்தை எடுத்துக்கொண்டு நீயும், உன்னைப் பாதுகாக்க நானுமாக இருவரும் தலைமறைவாகிவிட ஏற்பாடு செய்வேன். என்ன, மெய்யாகவே அப்படித்தானா?''



கண்களில் நீர்மல்க, தலையசைத்து, ''ஒருவிதத்தில் அப்படித்தான், சுரேந்தர். உங்கள் அன்பைக் கொன்றே விட்டேன் என்று நினைத்தேன்'' என்றாள் அவள்.

அவள் முகத்தை லேசாக நிமிர்த்தி, ''அது உன்னால் முடியும் என்றா நினைத்தாய்?'' என்று சுரேந்திரன் மென்குரலில் கேட்கவும் மீண்டும் தாரிணி அழுதுவிட்டாள்.

''என்னம்மா இது? என் அன்பைச் சொன்னால் இப்படி அழுகிறாயே! அதென்ன அவ்வளவு பயங்கரமான விசயமா? ம்...?''

''இல்லை'' என்று தலையசைத்தாள் தாரிணி. ''ஆனால் நான்தான் முட்டாள்தனமாய்... எல்லாவற்றையும் கேட்ட பிறகு என்னை வெறுத்துவிடமாட்டீர்களே. ம...மன்னித்துவிடுவீர்கள் இல்லையா?'' என்றாள் கெஞ்சுதலாக.

உதட்டோரம் லேசாக துடிக்க, ''திறந்திருந்த அடுத்த அறைக் கதவுப் பக்கம் கைகாட்டி, ''அங்கே வந்து மன்னிப்புக் கேட்டால் கட்டாயம் மன்னிப்பேன்'' என்றான் சுரேந்திரன்.

திறந்திருந்த கதவின் வழியே தெரிந்தது அவனது படுக்கை!

சற்றுத் திகைத்துவிட்டுப்பின், ''வருவேன்'' என்றாள் அவள் குரலில் உறுதியோடு.

அவன் லேசாகச் சிரித்துவிட்டு, கைகளால் அவள் முகத்தை ஏந்தி, நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான். ''நீ பிரிந்து சென்றதுகூட ஒருவகையில் நல்லதுதான், தரு. என் மனதில், பாவனையில் சில பல மாற்றங்கள். சீக்கிரமாய்ப் பிறர் அறியத் திருமணம் செய்துகொண்ட பிறகு, நீ அங்கே வந்தால் போதும்.



இப்போது...'' என்று அவளை மெல்ல அழைத்துச் சென்று அந்த அறை நடுவே கிடந்த சோபாவில் உட்கார வைத்தான். அவளது ஒரு கையைப் பற்றித் தன் கைக்குள் அடக்கி, ''இப்போது சொல்கிறாயா, என்ன நடந்தது என்று?'' விசாரித்தான்.

சுரேந்திரன் தன்னை மன்னித்து விடுவான் என்ற நம்பிக்கை பிறந்துவிட, அவன் தோளிலேயே சலுகையுடன் சாய்ந்து கொண்டாள் தாரிணி.

தேவநாதன் இப்படி மனோகரியிடம் இளக்கம் காட்டக்கூடுமா?

மனோகரியின் பெயர் வேறு ஒன்றை நினைவுறுத்த, தலைதூக்கி அவனை நோக்கி, ''ஒன்று கேட்கலாமா, சுரேந்தர்? அன்று... அந்த விழாவுக்கு மறுநாள், உங்களுக்கு அலுவலக அறையில், ரஞ்சிதா என்ன சொல்லி நீங்கள் அவளை அணைக்கும்படி செய்தாள்?'' என்று வினவினாள் அவள்.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சுரேந்திரனின் விழிகள் விரிந்தன. ''ஏய்... தரு, நீ அப்போது வந்து பார்த்தாயா? அதனால்தானா இந்தப் பிரிவு, கோபம் எல்லாம்? ஆனால், நின்று என்னவென்று கேட்கும் எண்ணம்கூட வரவில்லையா? என்ன பைத்தியக்காரத்தனம்!''

''அது... நீங்கள் முதலில் சொல்லுங்களேன், பிளீஸ்? நான் அப்புறமாய் எல்லாம் சொல்கிறேன்.''

''சொல்கிறேன். கொஞ்சம் நன்றாகவே கேட்டுக்கொள். பாவம் அந்தப் பெண் ரஞ்சிதா. அன்றைக்கு அவளுக்கு மிகவும் சோகமயமான நாள். வேண்டியவர்கள் என்று யாரும் இல்லாமல் வேண்டாத உறவினர்களிடம் இடிபட்டு வளர்ந்த பெண். அவளைப் போய்



மணக்கிறேன் என்று சொல்லி ஒருவன் ஏமாற்றிவிட்டானாம் அன்று காலையில் இருந்தே திரும்பத் திரும்ப அதையே சொல்லி வேதனைப்பட்டாள்.

''கடைசியில் அவளால் தாள முடியவில்லை. எனக்கு ஓர் அண்ணன் இருந்தால் அவன்மேல் சாய்ந்து ஒருமூச்சு அழுதிருப்பேன். அப்படி ஒரு அன்பான உறவு இல்லாததால் உங்களிடம் கேட்கிறேன் சார். கொஞ்ச நேரம் சாய்ந்து, சுமை இறக்கி வைக்க எனக்கு ஒரு தோள் தாருங்கள் சார். ஒரே ஒரு ஐந்து நிமிடம், அதற்குள் நான் சமாளித்துக் கொள்வேன் என்றாளா, அய்யோ பாவம் அவள் என்று, கொஞ்சநேரம் அவளைத் தோளில் சாய்த்துக் கொண்டு நின்றேன்.

''தரு, நீ அதையா பார்த்து, சந்தேகப்பட்டு சொல்லாமல் கொள்ளாமல் மறைந்தாய்? அந்த அளவுக்கா உனக்கு என்மேல் நம்பிக்கை இல்லை?'' என்று வருத்தமும் கோபமுமாகக் கேட்டான் சுரேந்திரன். ''அல்லது என்னை வெறுக்க அந்த ஒரு சிறு சம்பவம் போதும் என்கிறாயா?''

அவனது வருத்தம் அவளுக்குப் புரிந்தது. அவளுக்கும் உள்ளூர வலிதான். ஆனால் அதைக் காட்டாமல் அடக்கினாள்.

அவனது கடைசிப் பேச்சையும் கவனியாதது போல, ''அதுதானே பார்த்தேன்! சேர்மனிடமானால் அப்பா போல அணைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கேட்க முடியும். வயது வித்தியாசம் ஓரளவு சரியாக இருக்கும். ஆனால் உங்களிடம் அது சரிவராதே. என்ன சொல்லி ஏமாற்றி இருப்பாள் என்று யோசித்துக் கொண்டே இருந்தேன்...'' என்று சொல்லிக் கொண்டே போனபோது அவன் குறுக்கிட்டான்.

''தரு... தரு... நீ என்ன சொல்கிறாய்? மனோ தேவநாதன் பிரிவுக்கும் இந்தமாதிரி. ஒரே ஒரு காட்சி தான் காரணமா? பத்து ஆண்டு இல்லறத்துக்குப் பிறகு, மனோ தன் கணவரைப் பிரிய இந்த ஒன்றுபோதும் என்றால் உங்கள் பெண் புத்தியை என்னவென்று சொல்வது?'' என்று படபடத்தான்.

''இல்லை. இந்த ஒன்றை மட்டும் வைத்து முடிவு கட்டவில்லை'' என்று தொடங்கி தாரிணி முழுவிவரமும் சொன்னாள்.

அவளது முதல் உறுத்தல்களைப் பற்றி அவள் சொன்னபோது, ''ஏன், நீகூடத்தான் எவனையோ காட்டி, அந்த ஆண்கள் சோப்புக்கு இவர் நன்றாயிருப்பார். அகன்ற தோளும், மார்பில் முடியும் பொருத்தமாக இருக்கும் கேட்டுப் பார்க்கலாமா என்றாயே, நான் ஏதாவது சொன்னேனா?'' என்று திருப்பினான் அவன்.

''எப்போது யாரைச் சொன்னேன்?''

அவளுக்கு மெய்யாகவே நினைவில்லை.

''ஒரு நாள் தாஜில் உட்கார்ந்து இருந்தபோது சொன்னாய். நீச்சலடிக்கிறேன் பேர்வழி என்று கட்டைத் தடியன் அவன் - உன்னை மனதால் துச்சாதனன் வேலை செய்து கொண்டிருந்தான். அவனைப் போய் நன்றாயிருக்கிறான் என்று நீ சொன்னபோது எனக்கு ஒரு மாதிரித்தான் இருந்தது. ஆனால் நீ வேலை விசயமாகத்தான் பேசுகிறாய் என்று என்னை நானே சமாதானம் செய்துக்கொள்ளவில்லையா?''

''அந்த மாதிரி உறுத்தல்களை நானும் அப்படித்தான் ஒதுக்கினேன்'' என்றாள் தாரிணி. ''ஆனால்...'' என்று தொடங்கி விழாவன்று நடந்ததைச் சொன்னாள்.



''அப்போதே கேட்டிருக்கலாமே! என்றவனை முறைத்தாள் அவள். ''சொன்னேன் இல்லையா? என் சேலை நனைந்து சரிகை சுரித்துக்கொண்டு கண்ணராவியாய் இருந்தது என்றேனே.''

''அதற்கென்ன வந்தது? இங்கே வாழ்க்கையில் பெரிய பிரச்னை. அந்த நேரத்தில் சேலையையா நினைத்துக் கொண்டு இருப்பது?''

''நீங்கள் பெண்ணாய் இருந்தால் தெரியும்'' என்றவள் அவன் சிரிக்கவும், அவள் அசடு வழிந்து, ''மறுநாள் கேட்டுக் கொள்ளலாம் என்று...'' முணுமுணுத்தாள்.

''ஆமாம், பிரமாதமாகக் கேட்டாய்...'' என்றவன், ''சரிவிடு, எல்லாம் குப்பை. கிளறிப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாத குப்பை. இதில் என் வருத்தம் ஒன்றே ஒன்று. ரஞ்சிதாவை நான் கண்டுகொள்ளவே இல்லையே! அலுவலக வேலையில் ஓர் அங்கம் என்ற அளவில் மட்டும் அவளை நினைத்துப் பழகியதால் ரஞ்சிதாவின் குணம்பற்றி எனக்கு ஆராயத் தோன்றவில்லையா? மற்றபடி, உடல் பரிசோதனைக்காக இங்கே வந்திருந்தபோது சந்திக்க நேர்ந்த நாலைந்து தடவைகளில் அப்பா கண்டுகொண்ட அவள் குணம் எனக்குத் தெரியவே இல்லையே! இன்று ஒரு 'பிசினஸ் மீட்டிங்' என்றால் அதுபற்றி அக்குவேறு ஆணிவேறாக அத்தனை குறிப்புகளையும் தொகுத்துக் கொண்டு வந்து நீட்டிவிடுவாள். அலுவலக நேரத்தில் முடிக்க முடியவில்லை என்றாலும் அதிகப்படி நேரம் வேலை செய்து வீட்டிலாவது கொண்டுவந்து தந்து விடுவாள்.''

''நீங்கள் திருமணம் செய்யக் கேட்டு, நான் சம்மதம் சொல்ல போன் செய்த அன்றுகூட அப்படித்தான் நடந்திருக்கும். அப்படி நடந்தது என்று நீங்கள்



பேச்சுவாக்கில் சொன்னதை நான் முதலில் நம்பத்தான் செய்தேன், சுரேந்தர். ஆனால்... பிறகு அவள் கோவையாக ஏதேதோ சொல்லவும்... அதுவும் அந்தக் காட்சி முத்தாய்ப்பு வைத்துவிட்டது சாரி... அன்றைக்கு என்னைக் காணாமல் என்ன பாடுபட்டீர்களோ?'' என்றாள் அவள் வருத்தத்துடன்.

''ஆமாம். முதலில் உனக்கு என்ன ஆயிற்றோ என்று பயந்துவிட்டேன். பிறகு விடுதியில் இருந்து நீயாகத்தான் கிளம்பிச் சென்றாய் என்று தெரிந்ததும் மதுரைக்கு வந்து உன் பெற்றோரை - உன் தந்தை ஊரில் இல்லாததால் உன் தாயாரைத்தான் சந்திக்க முடிந்தது. அவர்களைப் பார்த்துப் பேசினேன். உன் இருப்பிடம் சொல்ல மறுத்ததால் என்மேல்தான் ஏதோ கோபம் என்று புரிந்தது. கோபம் தீர்ந்து நீயாக வருவாய் வருவாய் என்று முதலில் சாதாரணமாகத்தான் நினைத்தேன். இங்கே, வேலையில் வெளிநாட்டுப் பயணங்கள் வேறு. இடையில் மீண்டும் உன் பெற்றோரிடம் போனேன். உன் பேச்சு எடுத்தாலே வாயைப் பூட்டிக் கொண்டார்கள். பெரிய, பதினைந்து லீவர் உள்ள நவ்தால் பூட்டு!''

ஒருகணம் தயங்கிவிட்டு, தாரிணி சொன்னாள். ''அதற்கு நான்தான் காரணம். 'ரொம்பவும் நொந்து போனேன். இதற்குமேல் எதையும் தாங்கமாட்டேன். பழைய வாழ்வு தொடர்பாக யாரையும் சந்திக்க நேர்ந்தால் செத்துவிடுவேன்' என்று மிரட்டியிருந்தேன்'' என்றாள்.

''வாழ்வைத் தூக்கி எறிந்தது போல உயிரைத் தூக்கி எறியவும் தயாராய் இருந்தாயாக்கும்!'' என்றான் அவன் கோபமாக.



''அன்றைக்கு இருந்த வேதனையில்...'' என்று அவள் இழுக்கவும் தணிந்தான்.

''ஆனால் எனக்கு ஒரு தைரியம். எப்படியும் நாம்தான் ஒருவருக்கொருவர். விதி நம்மைச் சேர்த்து வைத்தே தீரும் என்று ஒரு நம்பிக்கை. முதலில் அந்த உறுதியோடு காத்திருந்தேன். அப்புறம் அப்பா உடம்பு சரியில்லாது போனது, அவருக்கு வைத்தியம், பரிசோதனைகள், இடமாற்றம் என்று எத்தனையோ பெரிய விஷயங்களைப் பார்த்து, சிந்தித்து முடிவெடுத்துச் செய்யும்படி ஆயிற்று. ஆனால் இதிலெல்லாம் ரஞ்சிதா மூக்கை நுழைக்கவும் எனக்கு எரிச்சல்வந்தது... என்ன?''

தாரிணியின் கண்களில் யோசனையைக் கண்டுவிட்டு அவன் கேட்டான்.

''இல்லை... அவள் மூலம் எனக்குப் பூங்கொத்து அனுப்பி வைக்க ஏற்பாடு செய்து, சொந்த விஷயத்தில் மூக்கை நுழைக்க விட்டதே நீங்கள்தானே...''

''நானா? இல்லையே! இதில் வேறு ஒரு கதை இருக்கிறதா? என்ன விஷயம்?''

''ரஞ்சிதா சொன்ன 'பட்டியல்' விவரம் சொன்னாள் தாரிணி.

''அலுவலகத் தொடர்பாய்ச் சிலபேருக்கு பூங்கொத்து அனுப்புவது வழக்கம்தான். ஆனால், உனக்கு அனுப்பியதில் என் சொந்த விசிட்டிங் கார்டு இருந்திருக்குமே. அப்புறம் என்ன?'' என்று அவன் கேட்கவும் சற்றுத் திகைத்துவிட்டு, ''பின்னே எனக்கு நீங்கள் அனுப்புவது எப்படித் தெரியும் என்று யோசித்தேன்...'' என்று இழுத்தாள்.

''என்ன பெரிய இராணுவ இரகசியமா? என் அறையில்தானே அவள் வேலை செய்வதும்? டெலிபோனில் ஆர்டர் செய்யும்போது கேட்டிருக்கக் கூடும். இதைப் போய்... சரி, அது முடிந்த கதை. மேலே கேள். என்னோடு வாழ்வை இணைத்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறாளோ என்று சந்தேகம் உண்டாயிற்று. இதை வளர விடக்கூடாது'' என்ற முடிவு செய்தேன்.

''அதேசமயம் அவளது திறமையும் உழைப்பும் நிறுவனத்துக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று நினைத்துதான் பதவி உயர்வுக்கு சிபாரிசு செய்து சேர்மனிடம் அனுப்பி வைத்தேன். திருமணமான, நடுவயது மனிதர் என்கையில் அவளது புத்தி வேறு திசை திரும்பாது என்று எண்ணினேன். ஆனால் பிற பெண்களின் மகிழ்ச்சியைக் காணப் பொறுக்காத வக்கிரம் அவளிடம் இருப்பது நான் தெரிந்து கொள்ளவே இல்லை.

''பாவம்! பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, முதன் முறையாக கருவுற்றிருக்கும் இந்த வேளையில் மனோவுக்கு இப்படி ஒரு வேதனை நேர்ந்ததே என்று இருக்கிறது. ஆனால் அதே சமயம், தேவநாதன் போன்ற ஒருவரைச் சந்தேகப்பட்டதற்கு அவளுக்கு வேண்டியது தான் என்றும் தோன்றுகிறது'' என்றான் சுரேந்திரன்.

''கணவர் மன்னிக்கவே மாட்டாரோ என்று மனோகரி மிகவும் பயப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்'' என்றாள் தாரிணி.

''எல்லாம் மன்னிப்பார்'' என்று தோளைக் குலுக்கினான் சுரேந்திரன். ''இந்த நேரத்தில் என் கண்மணிக்கு அமைதியும் மகிழ்ச்சியும் தேவை. என் அறியாமையால் அதைக் கெடுத்து விட்டேனே' என்று புலம்பிக்கொண்டு



இருக்கிறவர் மன்னிக்க மாட்டாராமா? இவளிடம் மன்னிப்பு வேண்டிக்காலைப் பிடிப்பார், பார்'' என்று சிரித்தான்.

வடிவான உதடுகளும் வரிசைப் பற்களும் அவளது கருத்தைக் கவர்ந்தன. இந்த அன்பு மீண்டும் கிடைத்தது பெரும் விந்தையல்லவா! ''நீங்கள் இவ்வளவு எளிதாக என் தவறை மன்னிப்பீர்கள் என்று நானும் எதிர்பார்க்கவே இல்லை'' என்று மனதை மறையாமல் உரைத்தாள்.

''நியாயமாய்ப் பார்த்தால் அநியாயமாய் என்மேல் நம்பிக்கை இல்லாமல் நீ நடந்துகொண்டதற்கு - அது எவ்வளவுதான் நம்பும்விதமாய்ப் பிறர் உன்னை மூளைச் சலவை செய்து ஏமாற்றியதால் என்றாலும் கூட அதற்குத் தண்டனை கொடுத்துதான் இருக்க வேண்டும். ஆனால் இவ்வளவு நாளும் நீயும் ஒன்றும் சந்தோசமாக இருக்கவில்லையே! இத்தனை நாள் நான் அனுபவித்த துன்பத்துக்குமேல். இன்னுமா? அத்தோடு உனக்கு வேதனை என்றால் அது எனக்கும் வேதனை தானே! உன் வலி என் வலி அல்லவா?'' என்று அவன் விளக்கவும், தாரிணி வாயடைத்துப் போனாள்.

அவளது வலி அவன் வலியாமா? எவ்வளவு அன்பு இவன் மனதில்? இவனைப் போய் எப்படி எல்லாமோ துன்புறுத்திவிட்டாளே! அத்தனையும் அப்போது தனதாய் உணர்ந்தாள் தாரிணி.

அவனது பார்வை அவள் முகத்தை விட்டு அகலவே இல்லையா! ''என்னடா?'' என்றான் கனிவோடு.

''உங்கள் வலி, இவ்வளவு நாட்களாக நீங்கள் அனுபவித்த வேதனை புரிகிறது'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.



அவன் அணைப்பு இறுகியது. ''துன்பம் மட்டுமில்லாமல் இன்பமும் பொதுதான், தரு. இப்போது நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறேன்! நீயும் அப்படித்தான் இருக்க வேண்டும், தெரியுமா? இன்று மட்டுமல்ல, என்றும்'' என்றான் சுரேந்திரன்.

கண்ணீர்த் திரையை ஒதுக்கிக் கொண்டு அழகிய புன்னகை ஒன்று தாரிணியின் செவ்விதழ்களில் எழிலாய் மலர்ந்தது.